OFFICE OF THE REGISTRAR OF ...
2 APR 1954

அழகிற்கு
அழகு

மனதிற்கு
மகிழ்ச்சி

உயர்ந்த
உறுதியான
வேலைப்பாடுள்ள

வைரம்
தங்க
நகைகள்

வெள்ளி
பாத்திரங்களுக்கு

T. கோவிந்த ராஜுலு நாயுடு

JEWELLERS & DIAMOND MERCHANTS

28. நேதாஜி
சுபாஷ் சந்திரபோஸ் ரோடு
மதராஸ் . 1

சரித்திரம்
கண்டும், கேட்டுமிராத
புதுமை!
சென்னையில் மட்டும்
ஒரே வாரத்தில்
ரூ 84,002-7-6!!
20,00,000
கண்கள் கண்டு களித்த
அற்புத சித்திரம்
தமிழர் பண்பாட்டுக்கு
ஓர் எடுத்துக்காட்டு
தமிழகமே பூரித்து
பெருமை கொள்ள
வீர உலா வருகிறன்
மனோகர் பிக்சர்ஸ்
மனோஹரா
திரைக்கதை, வசனம்
கலைஞர்
மு. கருணாநிதி
டைரக்ஷன்: தயாரிப்பு: ஸ்டுடியோ
பிரசாத்... எம். சோமசுந்தரம்... நெப்ட்யூன்
RIGHTS CONTROLLED BY
ராதாகிருஷ்ணா பிலிம்ஸ் லிமிடெட் ஆலப்புழை
BALAN

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 (தபால் செலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.
பிராஞ்ச்: 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.
சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82. MAIN ST., கொழும்பு-11,


புது வருட வெளியீடு
பரிமளம் பிக்சர்ஸ்
சொர்க்கவாசல்
கதை, வசனம்.. அறிஞர் அண்ணா
BALU BROS

WHY FRET ABOUT YOUR FOUNTAIN PEN?
PILOT INK
2 oz.
BLUE BLACK
HIGH GRADE WRITING INK
PILOT
FOR FOUNTAIN P
AND GENERAL U
Fill it with
PILOT
PILOT
INK
FOR FOUNTAIN PENS AND GENERAL USE
Used wherever good pens are used.
Manufactured for
THE PILOT PEN CO. (INDIA) LTD.
RED HILLS
MADRAS.

உமா

ஆசிரியர்: ஜி. உமாபதி

நிர்வாக ஆசிரியர்: ர. சண்முகம்

செடி 1 மலர் 12	ஏப்ரல் 1954	விஜய ஸு பங்குனி மீ

பொருளடக்கம்

தமிழ் நாட்டில் காங்கிரஸ்?	தலையங்கம்	...	9
நாமும் நீங்களும்		...	11
எதிரொலி		...	13
இலக்கியத்தில் இளைஞர்கள்	ஜி. உமாபதி	...	14
நோட்டீஸ்	வாசவன்	....	19
சூடும் சுவையும்	நையாண்டி பாரதி	...	29
உங்கள் ஞாபக சக்தி....!	ஜி. சுவாமிநாதன்	...	31
நிம்மதி	கோமதி சுப்பிரமணியம்	....	35
வெற்றியும் தோல்வியும்	ஹேமு	....	42
கானல் நீர்	கே. ஆர். கௌஸல்யா	....	47
அந்தமான் தீவுகள்	போளூரான்	....	51
ஒளி பிறந்தது	எஸ். டி. வீரராகவன்	....	55
சங்கராபரணம்	'கோகுலன்'	...	60
சிறு கதையில் உண்மை	பி. கோதண்டராமன்	...	65
இரு யாத்திரிகர்கள்	(உலக இலக்கியம்) கோஸ்தா	....	67
பாக்—மண்ணில் அமரிக்க நிழல்?	பி. எஸ். ரசிதாசலம் பி. ஏ.	....	75

உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

197206

"மீன் வேணுங்களா ஸார்!"

தமிழ் நாட்டில் காங்கிரஸ் ?

தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சி, மேல் சபை உறுப்பினர் தேர்வுக்கு காங்கிரஸ் கட்சி சார்பில் நிற்பதற்குத் தகுதியில்லாதவர் என்று தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியால் விலக்கப்பட்டிருக்கிறார். அவருக்குப் பதில் வேறு ஒருவர் அபேட்சகராக நியமிக்கப்பட்டார். யாராவது கட்சியின் ஒழுங்கைச் சிதைக்கும் செயல்களில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிந்தால் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியத்திலும் அவசியமே. ம. பொ. சி. மீது நடவடிக்கை எடுப்பதை தவறு என்று கூறவில்லை. அதற்கான காரணம் சரியா? என்பது தான் கேள்வி.

ம. பொ. சி. தமிழரசுக் கழகத்தின் தலைவராக இருப்பதைத் தான் அவர் தகுதிக் குறைவுக்குக் காரணமாகக் காட்டப்படுகிறது.

ம. பொ. சி. தமிழரசுக் கழகத்தின் தலைவராக இருப்பது இன்றோ—நேற்றோ நடந்த நிகழ்ச்சியல்ல. ஏழு வருடங்களாக தமிழகத்தில் பார்க்கப்படும் ஒரு நிலை: ஏழு ஆண்டுகளுக்குமுன் தமிழரசுக் கழகத் துவக்க விழாவில் திரு. காமராஜரும் கலந்து கொண்டு ஆசி கூறியபோது கழகக் கொள்கைகளுக்கு ம. பொ. சி, என்ன விள்க்கம் கொடுத்தாரோ அந்த அடிப்படை விளக்கம் இதுவரை மாறியதாகவோ, மாற்றப்பட்டதாகவோ தெரியவில்லை. காங்கிரஸின் ஒரு பகுதியாக இருந்து அது செய்யத் தவறும் கலாச்சார சேவையை தமிழகத்தைப் பொறுத்தவரை தமிழரசுக் கழகம் செய்யும் என்று ம. பொ. சி. அன்று கூறினார்; இன்றும் அதைத்தான் கூறுகிறார்.

அப்படியே கழகம் தவறான பாதையில் போவதாகத் தெரிந்தால் இந்த ஏழு வருடங்களாக கழகத்தின் மீதும், ம. பொ. சி. மீதும் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியினர் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? ஏழு வருடங்களாகச் செய்யாத எந்த அபாயகரமானச் செயலில் ம. பொ. சி. இப்பொழுது திடீரென இறங்கி விட்டார்?

நேற்றுவரை அவர் சென்னை மேல் சபையில் காங்கிரஸ் உறுப்பினராக அங்கம் வகித்தாரே அப்பொழுது இருந்தத் தகுதி ஒரு சில நாட்களில் எப்படி—என்ன விதமாக மறைந்தது? இந்தத் தகுதிகளெல்லாம் மேல் சபை உறுப்பினர் பதவியைப் பொறுத்த மட்டில் தான் அமுல் நடத்தப்படுகிறதா? ம. பொ. சி. தகுதியற்றவர் என்று கருதினால் நேரடியாக அவரைக் காங்கிரஸிலிருந்து விலக்க ஏன் திடமான நடவடிக்கை எடுக்கவில்லை?

ம. பொ. சி. யை — அவர் தலைமை வகிக்கும் தமிழரசுக் கழகத்தை காங்கிரஸிலிருந்து விலக்குவது அப்படியொன்றும் பிர

மாதமான காரியமல்ல. ஒரு தீர்மானத்தின் மூலம் இதைச் செய்து விடலாம். இந்த வழி மிகவும் தெளிவானது.

ஆனால் இந்த வழியில் அடி எடுத்துவைக்க த. நா. கா. கமிட்டியினர் விரும்பவில்லை. துணிவு இல்லை என்று கூடக் கூறலாம். ம. பொ. சி. யை இழக்காமலே அவர் சக்திக்கு அணை போட்டு வைக்க ஏதாவது ஒரு வழி இருக்கிறதா என்றுதான் த. நா. கா. கமிட்டியின் முக்கியஸ்தர்கள் கருதுகின்றனர்.

ம. பொ. சி. யின் சக்தியை ஒடுக்குவதானால் காங்கிரஸின் சக்தியும் தமிழகத்தில் ஓரளவு பலவீனப்படும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்திருக்கின்றனர்; என்றாலும் தன்னுடைய ஒரு கண் போனாலும் பரவாயில்லை எதிரியின் இரண்டு கண்கள் போக வேண்டும் என்று கூறிய புத்திசாலியின் கதைபோல காங்கிரஸ் பலவீனப்பட்டாலும் சரி ம. பொ. சி. போகவேண்டும் என்பது அவர்கள் முடிவு போலும்.

செயலாற்றும் பண்பும், சேவா உணர்ச்சியும் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியிலே இப்போது அருகிவிட்டது. பொது மக்கள் என்போர் தமிழகத்தில் இருப்பதையே மறந்து சுயநல, பதவி போராட்டங்களிலேயே காங்கிரஸ் பிரபலஸ்தர்கள் தீவிரமாக ஈடுபடத் தொடங்கிவிட்டனர். தமிழ் மக்கள் காங்கிரஸ் ஸ்தாபனத்திடமிருந்து எவ்வளவோ எதிர்பார்த்தனர். ஆனால் அவர்களுக்கு ஒரு விதப் பதிலும் கிடைக்காது போகவே தங்கள் நலனில் கருத்துக் கொள்ளும் வேறு கட்சிகள் ஏதாவது இருக்கின்றதா என்று கண்களை அலையவிடத் தொடங்கினர்.

இந்த சமயத்தில் தான் ம. பொ. சி. வரிந்து கட்டிக் கொண்டு தீவிரமாககாங்கிரஸ் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். ஆம், தமிழரசுக் கழகத்தையும் காங்கிரஸின் ஆக்க வேலைகளில் ஈடுபடுத்தி மக்களின் தேசிய உணர்ச்சி சிதறிவிடாதபடி காத்தார். இதனால் மக்கள் அவரை ஒரு முகமாக நம்பினர்.

இதைக் கண்டு தமிழ் நாடு காங்கிரஸ் பெருமைப்பட்டிருக்க வேண்டும். ம. பொ. சி.யை மட்டுமன்றி தமிழரசுக் கழகத்தின் கலாச்சார சேவைக்கும் மதிப்பளித்து அதை வாழ்த்தியிருக்க வேண்டும். ம. பொ. சி. யையோ, கழகத்தையோ கண்டு மிரள வேண்டிய அவசியமே இல்லை. அப்படி மிரளுவது அர்த்தமற்ற பீதி என்பதோடு, இந்த மனப்பான்மை கிட்டத்தட்ட தேசிய விரோதமானது என்று கூடக் கூறலாம்.

இந்தத் தேசிய விரோத சக்தியினர் துரதிருஷ்ட வசமாகப் பெருத்துவிட்ட காரணத்தால் தேசிய சக்திக்கு ஆக்கமளிப்பவர்களை விரட்டினலொழிய அல்லது அடக்கினலொழிய தங்கள் வாழ்வை நிலைப்படுத்த முடியாது என்று காங்கிரஸ் பிரபலஸ்தர்கள் அஞ்சினர். தமிழரசுக் கழகத்துக்கும் காங்கிரசுக்கும் உள்ள இன்றைய தகராறின் ரகஸியம் இதுதான்.

தமிழ் நாடு காங்கிரஸின் போக்கு இப்படியே போய்க்கொண்டிருந்தால் பொது மக்களுக்கும் காங்கிரசுக்கும் தொடர்பு இருக்கும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும். இப்படி அணு அணுவாக சித்திரவதை செய்வதைவிட தமிழ் நாட்டைப் பொறுத்த வரையாவது காங்கிரசைக் கலைத்து விடுவது எவ்வளவோ உயர்ந்தது என்று உண்மை தேசிய வாதிகள் எண்ணினால் அதில் வியப்பில்லையல்லவா!

நாமும் நீங்களும்

சென்ற இதழில் அறிவித்தது போல இந்த இதழ் ஆண்டு மலராக மலரவில்லை. இதைக் கண்டு பெரும்பான்மையான வாசகர்கள் ஏமாற்றமடைய மாட்டார்கள். ஏனெனில் வாசகர்கள்தான் இந்த மாற்றத்தை விரும்பினர்.

சாதாரணமாகக் குழந்தையின் பிறந்தநாளைக் கொண்டாடுவது தான் தமிழகத்தின் வழக்கம் என்பதை கடிதங்கள் மூலம் எங்களுக்கு நினைவூட்டி 'உமா'வின் பிறந்த மாதமான மே, மாதமே ஆண்டு மலர் வெளிவருவது நியாயம் என வாதாடினர். அதனால் எல்லா வித ஏற்பாடுகளைச் செய்திருந்தும் மலர் விஷயத்தை மே மாதத்துக்குத் தள்ளிப்போட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டு விட்டது.

ஆகவே, மே மாதம் ஆண்டு மலர் நான்கணா விலையில் 100 பக்கங்களோடு வெளியாகும்.

புது வருடத் திட்டமாக பல புதுப் புது கவர்ச்சிகரமான பகுதிகள் சேர்க்கத் திட்டமிட்டிருக்கிறோம். அவற்றின் சுருக்கமான ஒரு அறிவிப்பு வேறொரு பக்கத்தில் வெளியாகியுள்ளது; அறிவிப்பில் வெளிவராத இன்னும் எத்தனையோ அம்சங்களை மலரில் கண்டு களிக்கலாம்.

மே இதழில் நீங்கள் வெகு நாட்களாக எதிர்பார்த்த **தொடர் கதை** ஆரம்பமாகிறது என்பதை முன் கூட்டி அறிவித்துக் கொள்கிறோம்.

விற்பனையாளர்கள் தங்கள் அதிகபட்ச தேவைகளை உடனடியாக அறிவித்துப் பதிவு செய்துகொண்டு 'உமா'வின் வளர்ச்சியில் சகல வழிகளிலும் ஒத்துழைக்கவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

வணக்கம்.

மேலட்டைச் சித்திரம்:

பவளம் போன்ற செங்காய்களோடு நிற்கும் பாக்கு மரங்களில் தொங்கவிடப்பட்டிருக்கும் ஊஞ்சலில் அமர்ந்து அந்தப் பெண்கள் ஆடுவது, பாக்கு மரங்களுக்கே அழகு அணியாக விளங்குகிறது. ஊஞ்சலாட்ட வேகத்தில் அவர்கள் இடை நெளிவதைக் கண்டு மனம் பொறுமல்தான் அவர்கள் தலைகளைச் சூழ்ந்து வண்டினம் ஆர்பரிக்கின்றனவா? பாபம் சூழ்ந்த மனிதப் பிறவி, பிறந்து பிறந்து இறப்பதுபோல ஊஞ்சல் இங்குமங்கும் போய்வருவதைக் கண்ட இளைஞர்களின் நெஞ்சமெல்லாம் ஊஞ்சல் வேகத்துடன் இணைந்தல்லவா ஆடுகிறது.

பூசலின் எழுந்த வண்டு
  மருங்கினுக்(கு) இரங்கிப் பொங்க,
மாசுறு பிறவி போல
  வருவது போவ தாகிக்,
காசறு பவளச் செங்காய்
  மரகதக் கமுகு பூண்ட
ஊசலின், மகளிர் மைந்தர்
  சிந்தையோ(டு) உலவக் கண்டார்.

மிதிலை நகரின் தெருவில் நடந்து செல்லும் விசுவாமித்திரர், இராம இலக்குவர்களின் கண்களில் இப்படிப்பட்ட காட்சிகள் படுகின்றனவாம். இந்தக் கம்பச் சித்திர காட்சியை 'உமா'வின் அட்டைச் சித்திரமாக உங்களுக்குத் தருகிறார் சித்திரக்காரர்.

எமது புது வருடத் திட்டங்கள்!

வழக்கமான பகுதிகளுடன்

★ **புதுப் பார்வை**

தமிழர் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் மேற்கண்ட தலைப்பில் அரிய ஆராய்ச்சித் திறன் மிக்க கட்டுரைகளைத் தொடர்ந்து தருகிறார்.

★ **அரசியல் கட்டுரைகள்**

தற்கால — எதிர் கால அரசியல் சிக்கல்களுக்குப் பரிகாரம் தரும் உணர்ச்சிமிக்கக் கட்டுரைகளை திரு. ஜி. உமாபதி தருகிறார்.

★ **மொழி பெயர்ப்புக் கதைகள்**

தரம் மிகுந்த உயர்ந்த கதைகளைத் தேர்ந்தெடுத்து மொழி பெயர்ப்பில் பிரசித்திபெற்ற "அசோகன்" தொடர்ந்து தருகிறார்.

★ **புத்தகச் சுருக்கம்**

பிரசித்திபெற்ற மேல் நாட்டு நாவல், நாடக, இலக்கிய நூற்களின் சுருக்கம் ஒன்றை ஒவ்வொரு மாதமும் திரு. ரா. சு. கிருஷ்ணஸ்வாமி தமிழில் தருகிறார்.

★ **தொடர் கதை**

தன்னலமற்ற ஒரு தேச பக்தன் சுயநல வாதிகளின் கிடுக்கித் தாக்குதலில் சிக்கித் திண்டாடும் திடுக்கிடும் நிகழ்ச்சிகள் நிறைந்த மனதை உருக்கும் அருமையான தொடர் கதை....

ர. சண்முகம் எழுதும்

அலை ஓய்ந்தது!

மே இதழிலிருந்து தொடருகிறது

மற்றும் வழக்கம்போல தரமான கதைகள், இலக்கியக் கட்டுரைகள், ஆணித்தரமான அரசியல் விமர்சனங்கள், சினிமாப் பகுதி.... மற்றும் பல....

விபரங்களுக்கு

மானேஜர் 'உமா' தபால் பெட்டி நெ. 1377. சென்னை—1.

எதிரொலி

கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்!

திருவிதாங்கூர் கொச்சியில் காங்கிரஸ் அல்லாத மந்திரி சபை அமைந்துவிட்டது. புது மந்திரி சபையின் சக்தியைப் பற்றியோ, மந்திரிகளின் தகுதிகள் பற்றியோ நாம் விவாதம் செய்யவேண்டிய அவசியம் இல்லை. தன் மக்களுக்கு ஒழுங்காக சேவை செய்யும் எந்த மந்திரி சபையையும் பாராட்ட நாம் கடமைப் பட்டிருக்கிறோம். இதை எதிர்காலம்தான் தீர்மானிக்க வேண்டும்.

ஆனால் திருவிதாங்கூர்-கொச்சியில் காங்கிரஸ் ஏன் வெற்றியடையவில்லை, மந்திரி சபை அமைக்க முடியவில்லை என்பவைதான் சிந்தனைக்குரிய விஷயம்.

மூன்று ரகமான கோளாறுகளின் மோதல்கள் காரணமாகவே திருவிதாங்கூர் - கொச்சியில் காங்கிரஸ் செல்வாக்கிழந்தது.

திருவிதாங்கூர் தமிழ்ப் பகுதிகளை தனிக் காங்கிரஸ் மாகாணமாகவோ, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் நிர்வாக பகுதியாகவோ அங்கீகரிக்கப்பட வேண்டும் என தி. த. காங்கிரஸ் கமிட்டியினர் மேலிடத்தில் விண்ணப்பித்துக்கொண்டது பயனற்றுப் போனதும்;

மலையாள காங்கிரஸ் வாதிகள் ஆதிக்க வெறி பிடித்து தமிழ் காங்கிரஸாரை சற்றும் மதியாமல் வெறியாட்டம் போட்டு அவர்கள் மனக் கசப்பைத் தேடிக்கொண்டதும்;

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினர் இன்னும் தகுந்த முறையில், நல்ல பேச்சாளர்களின் உதவியுடன் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடாமல் விட்டதும் ஆகிய மூன்று பெரும் காரணங்கள்தான் திருவிதாங்கூர் - கொச்சியில் காங்கிரஸை மண்ணைக் கவ்வ வைத்தது என்றால் அதில் மிகையில்லை.

திருவிதாங்கூர் தமிழர் காங்கிரஸின் ஆதரவை நாடி தங்கள் பலத்தைப் பெருக்கிக் கொண்டு காங்கிரஸ் மந்திரிசபை அமைக்கக்கூட மலையாள ஆதிக்கவெறி மனப்பான்மை இடந்தரவில்லை என்றால் காங்கிரஸின் எதிர்காலத்தைப் பற்றி நாம் என்ன நினைப்பது?

இப்படியே சென்றுக் கொண்டிருந்தால் காங்கிரஸைக் காப்பாற்ற கடவுளைத்தான் பிரார்த்திக்க வேண்டியிருக்கும். தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகிகள் இனியேனும் சிந்திப்பார்களா?

தொழிலதிபர் மறைவு

பிரபல தமிழகத் தொழிலதிபர் திரு. சிதம்பரம் செட்டியாரின் திடுக்கிடக் கூடிய முடிவு தமிழகத்தை பெரிய அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது.

திரு. செட்டியார் தமிழகம் பூரணமாக தனியாட்சி பெற்று, தமிழ் மொழியால் ஆளப்படும் காலத்தில் தமிழகத்தின் செல்வ வளத்துக்கே பாதுகாப்பாளராக இருக்கப் போகிறவர் என்று எண்ணிப் பெருமிதமடைந்து நின்ற தமிழ் மக்கள், ஈடு கொடுக்க முடியாத இந்த நஷ்டத்தை எப்படி ஈடு கட்டுவதென்றே தெரியாமல் திண்டாடுகின்றனர்.

செட்டியார் அவர்களின் குடும்பத்தின் துக்கத்தில் பங்குகொள்கிறோம். எண்ணற்ற லட்சியங்களை தன்னுள் அடக்கிக் கொண்டிருந்த அவர் ஆன்மா சாந்தியடைப் பிரார்த்திக்கிறோம்.

இலக்கியத்தில் இளைஞர்கள்!

ஜி. உமாபதி

இளமைப் பருவத்திற்கு எப்பொழுதுமே மதிப்புண்டு. முதுமையில் இன்ப வாழ்வு வாழவேண்டுமாயின் இளமையில்தான் அதற்கு அஸ்திவாரம் இடவேண்டும். இளமையில் கைக்கூடிவராதது எதுவும் முதுமையில் பயனளிக்கும் என்று திட்டமாகக் கூறமுடியாது.

செயலாற்ற வேண்டும் என்ற துடிப்பும், துணிவும் இளமையில்தான் ஏற்படும். இன்னல்களைக் கண்டு கலங்காது அவற்றை எதிர்த்துப் போரிட்டு முறியடித்து இன்ப உலகுக்கு வழி அமைக்க வேண்டும் என்ற ஆர்வம் இளமையில்தான் உண்டாகும். செயற்கரிய செயல்களைச் செய்ய வேண்டும்; அதனைக் கண்டு பிறர் பிரமித்துத் திகைக்க வேண்டும் என்றெல்லாம் கனவு காணும் பருவம் இளமைப் பருவந்தான்.

வீரமும், எழுச்சியும், தெளிவும், இளைஞனுடைய சொந்த சொத்து. களைப்பும் சலிப்பும் அவனை அண்டுவதில்லை. இத்தகைய இயல்புகளுடைய இளைஞர்கள் பண்டைய இலக்கியங்களைப் படிக்கின்றபொழுது நமக்கு காட்சி அளிக்கிறார்கள்.

இலக்கியம் ஓர் பூஞ்சோலை, இளைஞர்கள் அதில் வட்டமிடும் ரீங்கார வண்டுகள். எதிர்காலத்தில் தோன்றப் போகும் இலக்கியங்கள் இளைஞர்கள் கையில்தான் இருக்கிறது.

உலகத்துக்கே புதிய பாதை காட்டிய சத்தியாக்கிரகப் போராட்டத்தை காந்தியடிகள் தமது இளம்பிராயத்தில்தான் தென்னாப்பிரிக்காவில் நடத்தினார். அதன் விளைவாக ஆசியா முழுதுமே எழுச்சியுற்றது.

பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிராக தேசியக் கப்பல் ஓட்டி அதன் விளைவாக இரண்டு ஜன்மத் தண்டனைப் பெற்ற தேசபக்தர் வ. உ. சிதம்பரம்பிள்ளை தமது முப்பதாவது வயதில்தான் இந்த அற்புதப் புரட்சியை நடத்தினார்.

தேசியப் போராட்டத்திலே அதிகமாக கலந்து தூக்குக் கயிற்றை முத்தமிட்டவர்கள் இளைஞர்களல்லவா?

அன்னிய ஆட்சி எதிர்ப்புப் போரில் குண்டாந்தடிபட்டு மண்டை உடைய, உதிர வெள்ளம் பெருக்கெடுத்தோட, வந்தேமாதரக் கோஷத்துடன் நம் தேசக் கொடியை விடாது பற்றியவாறு உயிர்விட்ட திருப்பூர் குமரன் ஒரு இளைஞர் தானே.

இப்படி இளமையின் சாதனை யின் பெருமையை ஆயிரமாயிரம் எடுத்துக் கூறலாம். இளைஞர்கள்தானே ஒரு நாட்டின் உண்மையான செல்வம். இளம் வீரர்களின் பாதுகாப்பில்தான் உலகம் நிம்மதியாக வாழ்கிறது.

இலக்கிய காலத்தில், அதாவது பண்டைக்கால தமிழகத்தில், இளைஞர்கள் சிலர் எப்படி வாழ்ந்தனர் என்பதை நாம் முதலில் புரிந்து கொண்டால் இன்றைய இளைஞர்களின் வாழ்வு பற்றி விமர்சனம் செய்ய முடியும்.

இலக்கியகால இளைஞர்களைப் பற்றி நினைக்கும்போது நம் கண்முன்னல் முதலில் தென்படுவது இளங்கோ அடிகளின் அதிசயிக்கத்தக்க துறவறந்தான்.

இளங்கோ சேரநாட்டு இளவரசர். செல்வமும் செல்வாக்கும் சூழ இன்ப வாழ்வு வாழ்ந்து வந்தவர். துயரமும் தொல்லைகளும் அணுக முடியாத வசதிகள் நிறைந்த நிலை. இவர் துறவு கொள்வார் என்று எப்படி எதிர் பார்க்க முடியும்.

யாரோ ஒருவர் இளங்கோவின் முகத்தைப் பார்த்து சொன்னர்; அரசுமுடி இளையவருக்குத்தான் கிடைக்கும் என்று. அதைக் கண்டு தமையன் சினந்தது அர்த்தமுள்ளது தான். இளங்கோ விட்டுக் கொடுக்க முன்வந்ததும் நியாயந்தான். தமையனுக்காக விட்டுக் கொடுத்த இளங்கோ அவர் நிழலிலேயே — செல்வாக்குக் குறையாமல் சுகவாழ்வு வாழ்ந்திருக்கலாம். ஆனல் அப்படிச் செய்யவில்லை. போக போக்கியங்களை துச்சமென மதித்து, அரண்மனை வாழ்வை விட்டு அறவே அகன்று, தனக்கென ஒரு சிறு துரும்பையும் கூட கொள்ளாது துறவியானர். துறவு என்ருல் உலகத்தைத் துறந்து, வாழ்வாவது மாயம், மண்ணுவது திண்ணம் என்று வேதாந்தம் பாடி வாழ் நாளை வீணக்கவில்லை. கலாதேவியிடம் அடைக்கலம் புகுந்தார். கவிதா தேவியின் அருள் பார்வை அவர் மீது விழுந்தது. அழியும் பொருட் செல்வத்தையும், கனவு மயமான சுகவாழ்வையும் ஒதுக்கிவிட்டு வந்தவர், அழியாத கல்விச் செல்வத்தை, இன்ப மயமான தமிழமுதை தனதாக்கிக் கொண்டார். பாடுபட்டார். அதன் பயனக இளங்கோவிற்கு தமிழும், தமிழுக்கு சிலப்பதிகாரமும் கிடைத்தது.

இலக்கியத்தில் இளங்கோ மறக்க முடியாத இலட்சியவாதியாகும். கல்வி கற்பதென்ருல் அதை எதிர்காலத்தில் கேவலம் பொன்காய்க்கும் மரமாகத்தான் பயன்படுத்தவேண்டும் என்று கருதி, பதவிக்காக மட்டுமே கல்வியில் கவனம் செலுத்தும் இக்கால இளைஞர்களுக்கு இளங்கோவின் துறவும், சிலப்பதிகாரத்தின் பிறப்பும் ஒரு சவாலாகும் என்றே கூறலாம்.

இளமையில் செயலாற்றும் திறனும், எத்தகைய சிக்கலான சூழ்நிலையிலும் எதையும் சாதிக்கும் அபார திறமையும் பண்டைய தமிழக இளைஞர்களுக்கு இருந்தது என்பதற்கு கரிகால் வளவன் என்ற இளம் மன்னவன் தக்கதோர் சான்ருக விளங்குகிருன். புறநானூற்றுப் பாடல்களில் இம்மன்னனது அளப்பறிய திறத்தைக் கண்டு நாம் வியந்து போற்றுகிருேம்.

கரிகால் வளவன் வயதில் மிகவும் இளைஞன். அரசனை நேரில் கண்டறியாத இரு முதியவர்கள் தம்முள் ஏற்பட்ட வழக்கொன்றை அரசனின் நியாயத்துக்காகக் கொண்டு வந்தனர்.

அரசனைக் கண்ட உடனே அவர்கள் எண்ணம் கலகலக்க ஆரம்பித்தது. இந்தச் சிறுவனு

நமக்கு நியாயம் வழங்கப் போகிருன் என்று வழக்குரைக்க வந்தவர்கள் மயங்கினர்.

அவர்கள் கருத்துணர்ந்த மன்னவன் அவர்களை நாளை வரச் சொல்லி அனுப்பிவிட்டான். மறுநாள் அவர்கள் முன்னிலையில் முதியவன் வேடந்தாங்கி வந்து ஆசனத்தமர்ந்து இருவரும் ஒப்புக் கொள்ளும் முறையில் நேர்மையுடன் நீதி வழங்கினன். தமக்கு நீதி வழங்கியது அரசன் என்றறியாது அவனைப் பாராட்டும்போது அரசன் தம் வேடத்தைக் களைந்து வழக்குரைக்க வந்தவர்களை வியப்பில் ஆழ்த்தினன்.

அரசனுகிய தன்னிடம் வழக்குரைக்க வந்து, தன் அறிவின் திறமையை அவர்கள் சந்தேகிப்பது கண்டு ஆத்திரப்பட்டு கரிகால் வளவன் அவர்களுக்கு தண்டனை விதித்திருந்தால் அதுவும் எதிர்பார்க்கக் கூடியது தான். ஆனல் மதியூகியாகிய மன்னவன் எவ்வளவு சிரமப் பட்டு, என்னென்ன தந்திரங்கள் செய்து, வந்தவர்களை திருப்திப் படுத்தினன். இந்த வரலாறு நீங்கள் அறிந்ததே. இருந்தாலும் முன் கோபத்தையும், துடிதுடிப்பையும் அணிகளாகக் கொண்டு நினைத்ததற்கெல்லாம் பெரியோரை எடுத்தெறிந்துப் பேசும் துடுக்குத்தனம் நிறைந்த இக்கால இளைஞர்கள் கரிகால் வளவனின் ராஜதந்திரத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும். பொதுவாழ்வில் சிறப்புப் பெற வேண்டுமானல், அர்த்தமின்றி சில சமயங்களில் தன் மீது படியும் பழிகளைப் பற்றிக் கவலையோ ஆத்திரமோ படாமல் பிறர் சந்தேகத்தை நீக்க முயற்சிக்க வேண்டும் என்னும் சீரிய வழி கரிகால் வளவனின் வாழ்வின் மூலம் நம்மால் அறிய முடிகிறது அல்லவா!

இனி பண்டைக் காலத்தில் இளைஞர்களின் வீர உணர்ச்சி எப்படி இருந்தது என்று கவனிப் போம்.

பண்டைத் தமிழரின் வீர வாழ்வு பற்றிய நிகழ்ச்சிகளை ஒரு குறுகிய காலத்தில் எடுத்துக் கூறிவிட முடியாது. அந்த வீரக் கதைகளை நாட்கணக்காக, மாதக்கணக்காக, ஏன் வருடக் கணக்காகக்கூட எடுத்துக் கூற முடியும். ஆகவே பண்டைய இளைஞர்களின் வீரத்தை விளக்கும் கதைகளை விடுத்து 'வீரம்' அக்காலத்தில் எப்படி போற்றப்பட்டது, என்பதை விளக்கும் புறநானூற்றுப் பாடல் ஒன்றின் கருத்தைக் கவனிப்போம்.

தன் வீட்டில் அமர்ந்து வீட்டு வேலைகளைச் செய்துக் கொண்டிருக்கிருள் ஒரு தாய். அடுத்த வீட்டிலிருந்த அவள் வீட்டுக்கு வந்த ஒரு பெண்மணி அந்தத் தாயின் குடும்ப நலனைப் பற்றி விசாரிக்கிருள். பெண் கேட்ட ஒவ்வொரு கேள்விக்கும் வெகு சாதாரணமாக பதிலளித்துக் கொண்டு வந்தாள் தாய்,

"உன் மகன் எங்கே? காணுமே" என்று அந்தப் பெண் கேட்டபோது அன்னையின் முகத்திலே ஆனந்தக் குறிகள் தாண்டவமாடுகின்றன. தாய்மையின் பெருமை அவள் முகத்திலே பிரகாசிக்கிறது. மிகவும் உற்சாகமாகப் பேச ஆரம்பிக்கிருள்.

"பெண்ணே.... என் மகன் எங்கே போயிருக்கிருன் என்று நீ கேட்கிருய். அவன் எங்கே போயிருக்கிருன் என்று குறிப்பிட்டுச் சொல்ல என்னல் முடியாது. ஆனல் நிச்சயம் அவன் எங்கு போயிருப்பான் என்பதை மட்டும் என்னல் யூகிக்க முடியும்...." என்று கூறிவிட்டு பெருமையுடன் தன் வயிற்றைச் சுட்டிக் காட்டி "இது புலியின் குகை", "இந்தக் குகையிலிருந்து புறப்பட்ட வீரம் செறிந்த புலிக்குட்டி வேறு எங்கு போயிருக்கும்? போர்க்

களத்துக்குத்தான்'' என்கிருள் தாய்.

மகன் வீட்டில் இல்லையென்ருல் அவன் போர்க்களத்தில் தான் இருக்க முடியும் என்று வீரத்துக்கு வணக்கம் செலுத்தும் அந்தத் தாயின் பண்பு எவ்வளவு மகத்தானது! இந்த வீரத் தாயின் வாக்கு பண்டைக்கால இளைஞர்களின் வீர வாழ்வுக்கு ஒரு பொது உதாரணம் என்று கூறலாம்.

பண்டைய தமிழ் இலக்கியங்களில் கூறப்படும் இளைஞர்களின் வாழ்வுதான் பண்டைய தமிழ் இளைஞர்களின் வாழ்வு என்று கொள்ளலாம். ஒரு நாட்டின் இலக்கியங்கள்தான் அந்நாட்டு கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் கண்ணுடி என்று கூறலாம். எனவே தமிழகத்தின் பண்டைய இலக்கியங்களின் ஆதாரந்தான் நமக்கு பயன்படுகிறது.

இன்றுள்ள நடைமுறையில் காணுகின்ற இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள இளைஞர்களை நோக்கினுல் உண்மையாகவே நாம் வருந்தத்தான் வேண்டியிருக்கிறது.

இன்றைய இலக்கியங்களிலுள்ள இளைஞர்களைப் பற்றிக் கூறுமுன் இன்று ''இலக்கியம்'' என்று ஒன்று இருக்கிறதா என்பதே சந்தேகமாக இருக்கிறது. சிலப்பதிகாரம், கம்ப ராமாயணம், மனேன்மணியம் போல லட்சிய இலக்கியம் என்று இன்று தமிழகத்திலே ஒன்று கூட இல்லாதபோது அதில் குறிப்பிடும் இளைஞர்களைப் பற்றி எங்கே எடுத்துரைக்க முடியும்?

இலக்கியம் என்ருல் ''லட்சியம்'' ''குறிக்கோள்'' என்றும் பொருள் உண்டு. ஆகவே ஒரு குறிக்கோள் உள்ள, லட்சியப் பாதையில் நடக்கும் இளைஞர்கள் இன்று அதிகமாக இருக்கின்றனரா? என்பதே நமது சிந்தனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

இம்மாதிரியான ஒரு நிலையை மாற்றவேண்டும் என்பதற்காகத்தான் காந்தியடிகள் நீண்ட நேரம் சிறுபிள்ளைகளைப் பள்ளியில் போட்டு அடைத்து வைப்பதற்குப் பதிலாக புத்தகப் படிப்புக்கு சிறிது குறைந்த நேரத்தைத் தந்து மூளை இயற்கையாக வளருவதற்கான தொழில் துறையில் இளம் வயதிலேயே கவனம் படியும் வண்ணம் செய்யவேண்டும் என்ருர்.

இன்றுள்ள இளைஞர்களின் இலட்சியமற்ற தன்மைக்கு இன்று பெருகி நிற்கும் வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு சரியான எடுத்துக் காட்டாகும்.

இந்த நிலைக்கு மூலகாரணம் இளைஞர்கள் ஒரு குறிப்பிட்ட துறையில் மட்டுமே பழகி வாழ்வுக்கு வழி தரக்கூடிய வேறு எந்தத் துறையையும் கையாண்டு வருமானத்தைப் பெற முடியவில்லை. கண்முன் தென்படும் எந்த வேலையையும் கொஞ்சமும் தயங்காது மேற்கொள்ளும் பண்பு இருந்திருந்தால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏன் தலை காட்டுகிறது?

ஒரு திடமான மனப்பண்பு இல்லாதது இன்றைய இளைஞர் உலகின் ஒரு பலவீனம் என்று கூறலாம். ஏதாவது ஒரு முயற்சியில் ஈடுபட்டால் அதில் எடுத்த எடுப்பில் வெற்றி காணுவது இயலாத காரியம். பல தடவை தோல்விகள்தான் நம்மை எதிர்கொண்டழைக்கும். தோல்விகளைக் கண்டு கலங்காமல் எந்த ஒரு செயலையும் திரும்பத் திரும்ப முயன்று செய்தால் நிச்சயம் எளிதில் வெற்றி கிடைத்துவிடும். ஆனுல் முதல் தோல்வி ஏற்பட்ட உடனே மனந்தளர்ந்து நிலைகுலைந்து விடுவதினுல் அவர்கள்

எந்த ஒரு லட்சியத்திலும் வெற்றி பெறுவதில்லை.

இளைஞர்களின் வாழ்வு இந்த நிலை என்றால் இன்றைய இலக்கிய உலகத்தைக் கவனித்தால் இன்னும் பரிதாபகரமாக இருக்கும்.

பண்டைய காலம்போல இலக்கியம் செய்யும் வசதிகள் இன்று எக்கச்சக்கமான நிலையில் இல்லை. அச்சு வசதி ஒன்றே இலக்கிய சிருஷ்டிகளை மேலும் மேலும் வளர்க்க எவ்வளவோ துணை புரியத் தயாராக இருக்கின்றது.

அச்சு வசதிகள் அதிகமிருப்பதை இன்று பெரும்பாலும் மக்கள் பயன் படுத்துகின்றனர். அதாவது சரியான முறையில் அல்ல; ஏராளமான புத்தகங்களையும், பத்திரிகைகளையும் வெளியிடுகின்றனர். ஆனால் இலக்கியச்சுவையுள்ள நூலோ பத்திரிகைகளோ மிகக் குறைவாகவே இருக்கின்றன.

எழுத்தாளர்கள் குறைவாக இருப்பதுதான் இதன் காரணம் என்று கூறிவிட முடியாது. ஏராளமான கதாசிரியர்களும், கவிஞர்களும், கட்டுரை ஆசிரியர்களும் இருக்கின்றனர். ஆனால் ஆழ்ந்த கருத்துள்ள நூல்களுக்குத்தான் பஞ்சமாக இருக்கிறது. காரணம் இன்றைய இளைஞர்கள் நீண்ட நேரம் சிந்தித்து எந்த விஷயத்தைப் பற்றியும் மனதிற்குள்ளாக தர்க்கம் செய்து ஒரு முடிவுக்கு வந்து, பின்னர் எழுதுகோலை கையில் எடுப்பதில்லை. பத்திரிகையில் பெயர் வந்துவிட வேண்டும், தன் பெயரால் புத்தகங்கள் நிறைய வந்துவிட வேண்டும் என்று மட்டுமே எண்ணிவிடுகின்றனர். இது மிகவும் தவறான மனப் பண்பாகும். வாழ்க்கைக்கு எப்படி ஒரு குறிக்கோள் வேண்டுமோ, அந்த மாதிரி "இலக்கியம்" செய்வதற்கும் ஒரு லட்சியம் வேண்டும். இந்த லட்சியத்தைப் பற்றி நீண்ட நேரம் சிந்திக்க வேண்டும். பின்னர் இலக்கிய சிருஷ்டிகளில் முனைய வேண்டும்.

ஊற்று நீராக இருக்கும் இளைஞர்கள், எதிர்காலத்தில் நல்லதோர் சமுதாயத்தை அமைக்க போகும் நீங்கள் திறமை வாய்ந்த இலக்கிய கர்த்தர்களாகி, தமிழ் மொழி அரசு மொழியாக காட்சியளிக்க வேண்டும் என்பதே என்னுடைய பேரவா.

[அகில இந்திய ரேடியோ சென்னை நிலைய அனுமதியுடன் பிரசுரிக்கப்பட்டது.]

பாரிஸ் அழகிகள்

அழகிற் சிறந்த பாரிஸ் யுவதிகளின் இயற்கை அழகை அப்படியே தத்ரூபமாகப் பலவகைப் படுக்கையறைக் கோலத்துடன் காண பிரமிக்க தக்கது.

24 வகை (Bromide) போட்டோ படங்கள் ரூ. 7.
36 கொண்ட முழுசெட் ரூ. 10.

தபாற் செலவு இலவசம்.
ஒவ்வொரு ஆர்டருடன் "பெண் இன்பம்" என்னும் புத்தகம் இனமாக அனுப்பப் படும்.

கர்ப்பத் தடை

ரப்பர் பாதுகாப்புக் கருவிகள்
(நீடித்து உழைப்பவை)

		ரூ.	அ.
ஆண்களுக்கு:—	ஒன்று	1	6
,,	மூன்று	3	12
பெண்களுக்கு:—	ஒன்று	1	12

(உபயோகிக்கும் முறையுடன்)
தபாற் செலவு 1-2-0 தனி. ஐந்து ரூபாய்க்கும் குறைந்த ஆர்டருக்கு முன் பணம் தேவை.

வீனஸ் டிரேடிங் கம்பனி (U) P. B. No 1693, சென்னை-1

பேனா மன்னர் உலகம்!

பேனா மன்னர்கள் உலகம். விசித்திரமும் சுவாரஸ்யமும் நிறைந்த ஒன்றாகும். பிறருக்குக் கண்ணாடியாக விளங்கும் எழுத்தாளர்கள் தங்கள் பிரதிபிம்பத்தை தாங்களே பார்த்துக் கொள்ள விரும்புவதில்லை. இந்த வழக்கத்துக்கு மாறாக சில பேனா மன்னர்கள் தங்களை— தங்கள் சூழ்நிலையைத் தாங்களாகவே பார்க்கின்றனர் இந்தப் பகுதியில். சொந்தக் குறைகளைச் சொல்லி அழுவார்களோ என்று யாரும் அஞ்சவேண்டாம். இங்கே தங்களைப் பார்த்து தாங்களே சிரிக்கின்றனர். அவ்வளவு தான்.... —ஆசிரியர்.

நோட்டீஸ்!

★

திருவாளர் 'மேஷம்', எழுத்தாளர். 'இதயத்தில் தேங்கி நிற்கும் இலக்கியச் சிற்பங்களுக்கு உருவம் தரும் மேதாவி' என்று சொன்னார்கள். 'மேஷ'த்தின் இலக்கிய சிற்பங்கள் வெள்ளைக் கற்களில் உருவானவை யல்ல. கருங்கற்களில் விழும் சில கீறல் கோடுகள். அவ்வளவு தான்'' என்று பலர் சொன்னார்கள். எழுத்தாளன் இதய நீதியைக் கடந்தவனல்லவா? ஆகவே பல இதயங்களின் ஒலியைக் கடந்தும் அவர் 'வேலை' செய்து கொண்டுதானிருந்தார்.

இப்பொழுது அவர் கதை எழுதும் வேலையிலே மனத்தை உறுத்திக்கொண்டிருக்கவில்லை.

அது அவருக்கு ஒரு பெரிய விஷயமுமல்ல. எங்கெங்கோ இருக்கும் ஒரு பயலையும், ஒரு குட்டியையும் இழுத்துக் கொண்டு வந்து நடுச் சந்தியில் நிறுத்தி, இரண்டு காதல் பார்வைகளைக் குட்டிக்கரணம் அடிக்கச் செய்து, நடுவில் ஒரு கஷ்டத்தை மட்டும் லாகவமாகக் கொடுத்துக் கதையை முடிப்பதில் என்ன சிரமம் இருக்கிறது? வாழ்க்கையில் தேவைப்படும் பணத்தையும் இதே மாதிரி சிருஷ்டிக்க முடியுமானால் எத்தனை நன்றாக இருக்கும்!

சிறந்த அறிவாளி ஏறக்குறையப் பைத்தியமாகத்தானிருப்பான் என்று கூறுகிறார்கள். அவருடைய இந்த ஆசையைக் கொண்டே பலரும் அவரைச் சிறந்த அறிவாளி என்று நினைக்கலாம். அது முக்கியமானதல்ல. அவர் ஏன் அப்படி நினைத்தார்? அதுவே தேவை.

போஜன் வாழ்ந்த காலத்திலே அவர் வாழவில்லை. 'முழத்திற்கு இன்ன விலை' என்று கெஜக்கோல் 'சாற்றி', 'இலக்கிய பேரம்' செய்யும் இருபதாம் நூற்றாண்டிலே வாழ்பவர். காளிதாஸனைப் போலக் கவியுமல்ல அவர். 'இலக்கியம்' என்ற பெயரால் தப்பில்லாத தமிழில் நவரஸக் கதைகளைப் புனைவார். அந்த இரண்டுமில்லாக் காரணத்தால் பேனாப் பிடித்த பெருங்குற்றத்திற்குத் தண்டனையாகக் கன்னிப் புகழ் பாடும் தமிழ், வேண்டிய வறுமையை அள்ளிக் கொடுத்திருந்தது. தமிழ் எழுத்தாளர்களுக்கு இது புதுமை அல்ல; தமிழ் மக்களறியாத புதுச் செய்தியுமல்ல இது. புதுமை செய்யத் தெரியாத அந்த அப்பாவி மனிதர் விளக்கைப் பிடித்துக் கொண்டே கிணற்றில் விழுந்ததோடு நிறுத்திக் கொண்டிருந்தால் ஒரு சுவாரஸ்யமற்ற மனிதரின் கதைக்குக் கண் மூக்கு வைக்கும் சிரமம் குறைந்திருக்கும்.

★ **வாசவன்** ★

இரவு இரண்டுமணி, அழுத பிள்ளையும் அடங்கும் நேரம். இரவுக் காவலர்களான ரிக்ஷா 'இசுக்கும்' தோழர்கள் கூட கண்ணை மூடச் சென்றுவிட்டார்கள். 'சிங்கிள் சாயா'வினுள் வாழ்க்கையை வைத்துக் கொண்டிருப்பவன் பணக்காரனைவிட நன்ருகத் தூங்க முடிகிறது. இந்த எழுத்தாளன் துப்புக்கெட்டவன். யாரோ சந்தோஷப்பட, பொழுது போக்கைப் 'போ, போ' என்று நெம்பித்தள்ள இரவும் பகலும் இவனுக்கு ஓயாத கவலை. இளநீரைத்தரும் தென்னையும், பொன்னைத் தரும் மணணும் பிரயோஜனத்தையா — பிரதி உபகாரத்தையா எதிர்பார்க்கின்றன?

பேனுவால் காகிதத்தில் அழுத்தமான புள்ளியொன்றை வைத்துவிட்டுத் தலை நிமிர்ந்தார். அந்தப் புள்ளிக்குப் பக்கத்தில் எண்ணிக்கையில் ரூபாயை எழுத வேண்டும். இல்லாவிட்டால்?....

நான்கு மாதங்களாக வீட்டுக்காரனுக்குக் குடிக்கூலி தரவில்லை. '''இருட்'டில் பணம் வரும்; 'மல்லிகை'ப் பத்திரிகை பணமாகப் பூக்கும்; 'தேன் நிலவு' பணமாகப் பொழியும்'' என்றெல்லாம் வீட்டுக்காரனுக்குக் கதை கட்டியாயிற்று. அவன் ரஸிகனல்ல கதையை ரஸிப்பதற்கு. ஒரு வாரத்திற்குள் பணம் வரவேண்டுமாம். இல்லாவிட்டால் மற்ற வீட்டுக்காரர்களைப் போலச் சாமான்களை வெளியே தூக்கி எறிய மாட்டானும். 'ராங்க்' செய்தால் 'கீச்சு'ப் பிடுவானும்!

பால்காரன் எகிறிக் குதித்துவிட்டான். அவன் 'ராவணன் வம்ச'மாம். பஞ்சவடியைப் போல வீட்டோடேயே தூக்கிக் கொண்டு போய் விடுவானும். அவன் தவணைப்படி பத்து நாள் பாக்கி. விறகுக் கடை நாடார் பதினைந்துநாட்களுக்குள் பாக்கி வரா விட்டால் 'பொளந்து' தள்ளி விடுவதாகக் கூறிவிட்டுப் போய் விட்டார்.

இப்படிப் பதினைந்து நாட்களுக்குள் நூறு ரூபாயாவது அவர் தயார் செய்தாக வேண்டும். அதற்கு வழி இல்லாவிட்டால் அவர் ஒரு போர் வீரராக வாவது தயாராக வேண்டும். அந்தச் சோனி உடம்பு பெருமூச்சுப் பட்டாலே கீழே உதிர்ந்துவிடும். கத்தியைப் பிடிக்க வலுவெங்கே இருக்கிறது? ஆகவே பணத்தைத் தயார் செய்தே ஆகவேண்டும். எழுத்தாளனை நம்பி எவன் பணம் கொடுக்கிருன்? கடன் வாங்க இந்தப் பரந்த உலகத்தில் இடமில்லை. வீட்டு வாடகைக்கு ஒரு கதை, பால் பாக்கிக்கு ஒரு கதை, நாடார் கடைக்கு ஒரு கதை என்ற முறையிலே விகிதம் வைத்து அனுப்பிய கதைகளெல்லாம், 'திருப்புவதற்காக வருந்துகிரேம்' என்ற ஆசிரியர்களின் முத்திரையுடன் 'மேஷத்' திடம் பிரிய மனமில்லாமல் திரும்பி விட்டன. இதைவிடப் பண்ட மாற்று முறை வந்தால் எத்தனை நன்ருக இருக்கும்? வாடகைக்கு இரண்டு கதை; பாலுக்கு இரண்டு கதை, விறகில் வைத்து எரிக்க இரண்டு கதை, பேப்பர் வாங்க ஒரு குட்டிக் கதை இப்படி மாற்றிக் கொள்ளலாமல்லவா?

இதெல்லாம் என்ன அசட்டு யோசனை? கற்பனையை எந்த முட்டாள் கேட்கிருன்? சுண்டிப் பார்த்தால் சுத்தமாகச் சத்தம் கேட்கும் அசல் நாணயமல்லவா வேண்டும்?— மூக்கைக் குடைந்து விட்டுக் கொண்டார்.

மறுபடியும் பேனுவை எடுத்தார்; எழுதினுர்:

''கடன் காரர்களின்
கத்தி வீச்சிலி
ருந்து தப்பித்துக்
கொள்ளத் தேவை 100-0-0

முடியா விட்டால் சந்நியாசம் வாங்கிக் கொள்ளக் காஷாயத் துணிச் செலவுக்கு ரூ. 2-8-0

இதனால் நஷ்டம்:
கடன்காரர்களுக்குரூ. 100-0-0

எனக்கு நஷ்டம்:
'விடி வெள்ளி'க்கு அனுப்பிய 'தற்கொலை'க்குச் சன்மானமாக வரவேண்டியது 20-0-0
பிரசுரமாகி விட்டால் கதை எழுதின வகைச் செலவு ரூ. 0-7-9''

அவர் ஒரு விபரீத மனிதர். லாப நஷ்டக் கணக்கை எழுதிப் பார்த்ததோடு இருந்திருக்கக் கூடாதா? சத்தம் போட்டு 'அல்லி அரசாணிமாலை' மெட்டில் பாடினர். நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருந்த அவர் மனைவி சுந்தரிக்கு பூனை உருட்டுவதைப் போன்ற சப்தம் கேட்டு விழித்துக் கொண்டாள். பூனையைக் காணோம். அவள் கைப் பிடித்த பூமான் தான் குரல் எடுத்துப் பாடினர்! அவள் அதைச் சாமான்யமாகக் கருதி விட்டுக் கண்ணை மூடச் செல்ல முடியவில்லை. 'முடியாவிட்டால் சந்நியாசம் வாங்கிக் கொள்ளச் செலவுக்கு ரூ. 2-8-0' என்றதை ராகமாலிகையாக்கிக் கொண்டிருந்தார். சுந்தரி இனிச் சும்மா இருக்க முடியுமா? விரைந்து சென்ருள். அவன் கரத்தில் இருந்த காகிதத்தைப் பிடுங்கி வாசித்துப் பார்த்தாள். அவள் நாகத்தைப் போலச் சீறினள். அவர் வெலவெலத்துப் போகவில்லை.

''கடன் கொடுக்க முடியாவிட்டால் சந்நியாசம் வாங்கிக் கொள்ளப் போகிறீர்களா? இந்தத் திருவோட்டுச் சாமியார் எந்த மடத்துக்குத் திக்விஜயமோ?'' என்று எகத்தாளமாகக் கேட்டாள்.

''இந்தக் காற்றடைத்த பைக்கு ஊர் ஏது, பேர் ஏது? உலகமெல்லாமே மடம்; திக்விஜயம்!'' என்று சளைக்காதவராய்ப் பதிலளித்தார்.

பால் பொங்கி வழிந்ததும் சாந்தமாகி விடுகிறதல்லவா! அதைப் போல அவளும் நிதானத்துக்கு வந்து விட்டாள்: ''உரம் இருக்க வேண்டிய உள்ளத்தில் இந்தக் கோழைத்தனம் ஏன்? கேவலம் இந்த ரூபாய்க்காகவா மனமாற்றம்?''

''இந்த ரூபாயைக் கேவலம் என்று தான் நானும் நினைக்கிறேன். கடன்காரர்கள் அப்படி நினைக்க வில்லையே. உன்னைப் போல பெரிய உள்ளம் அவர்களுக்குக் கிடையாதே, சுந்தரி!''

''என்னிடம் ஒரு அருமையான யோசனை இருக்கிறது. கொஞ்சம் கேளுங்கள்!'' என்று கூறியவாறு சிரிப்பில் பன்னீர் நிறைத்து அவர் முகத்தில் வீசினள்.

''இதோ பார். நீ சிரிப்பில் பன்னீரைத்தான் தெளித்தாய். ஆனல் 'முன்னிருட்டு'க் கதையிலே கதநாயகி வனஜாவின் சிரிப்பில் தேனைத் தெளித்தேன். அந்தப் பத்திரிகை ஆசிரியனே கதையைத் திருப்பி விட்டு என் முகத்தில் கரியைப் பூசிவிட்டான். வனஜாவின் தேன் சிரிப்பு முப்பது ரூபாயையாவது தந்து விடும் என்று தான் நினைத்தேன். திரும்பிய வகையில் ஓரணு நஷ்டம். நள்ளிரவிலே அந்தக் கொலை பாதகிகளின் சிரிப்புக்காகக் கிடைக்காத மல்லிகையையும், அத்தரையும், தேனையும், பன்னீரையும் கொண்டு வந்து நிறைத்ததுண்டு. நன்றி கெட்ட பிண்டங்கள். ஆகவே உன் சிரிப்பில் நாணயத்திற் கிடமான வழியை நான் நம்ப முடியாது!'' என்று கூறினர். சிரமப்பட்டவருக்குச் சொல்ல உரிமை இல்லையா?



கொலைப் பட்டினியாய்க் கிடந்து 'எழுதினால் இரண்டு காசு கிடைக்குமே!' என்ற பத்து வருஷ நப்பாசையின் விரிந்திட்ட நிழலாக, ஒழுகும் பேனாவில் கற்பனையைத் திணித்து நள்ளிரவிலே வடித்தெடுக்கும் போது இந்தப் பொல்லாத சிரிப்புக்காக அவர் தேன் எடுத்த கொடுமையையும், அந்தத் 'தேன் சிரிப்பு' திரும்பி விட்ட துன்பத்தையும் அவர் அடித்துச் சொல்லலாம்; உதைத்துச் சொல்லலாம். 'தாழ்ந்த தமிழகமே' என்று அலறும் 'காக்காய்க் குஞ்சுகள்' அதை அனுபவித்தே தீரவேண்டும்!

சுந்தரி இலக்கிய ரீதியில் வாழ்ந்து பழக்கப் பட்டவளில்லை. 'மேஷம்' எந்த ஒரு உதாரணத்தையும் தன் கதையின் ஒரு பகுதியைக் கொண்டு விளக்கும்பொழுது அவளால் சகிக்க முடியாது.

''உங்களுக்கு வாழத் தெரியவில்லை. உங்கள் பேனாவை ஒடித்துக் கொடுங்கள். நெருப்பில் போட்டு பொசுக்கிவிட்டு எங்கள் அப்பா வீட்டிற்குப் போவோம். பேனாவைப் பிடித்தவனுக்கு ஜென்மச் சனி. அவன் கற்பனை அவனுக்கு அஷ்டமத்துச் சனி. இந்தப் பீடைகளை ஒழித்து விடுங்கள். அப்பா சௌக்கியமாயிருக்கிறார். அவருக்கு எழுதுங்கள் உடனே பணம் வரும்!''

மேஷம் ஒரு சீறு சீறினார். சுந்தரி பாம்புக்கே பயப்பட மாட்டாள். மேஷத்திற்கா பயப்படப் போகிறாள்? அவளும் முறைத்தாள்.

''எழுதுகோல் தாங்குபவன் ஏழையாக இருக்கலாம்; ஆனால் கோழையாக மாட்டான்.''

''சந்நியாசம் வாங்கிக்கொள்வது மட்டும் வீரம் என்ற நினைப்பாக்கும்!''

''விளையாடாதே, சுந்தரி! வீட்டுக்காரன் கீச்சாலும், விறகுக்கடை நாடார் மண்டையைப் பிளந்தாலும் ஆஸ்பத்திரிக்குத்தான் போவேனே தவிர மாமனார் உருட்டும் பகடைக்காய்

மாப்பிள்ளையாகப் போக மாட்டேன். எத்தனை கதைகளைத் திருப்பி அனுப்பினாலும் பத்திரிகைக் காரர்கள் என் பரம விரோதிகளல்ல. அதைப்போல எத்தனை கொடுத்தாலும் மாமனார் என் பரம ஆப்தருமல்ல. மீண்டும் ஒரு முறை உன் அப்பா வீட்டிற்குப் போகும் பிரச்னையை எழுப்பாதே. நான் பொல்லாதவனாகி விடுவேன்!''

''இந்தத் துப்புக் கெட்டதனத்தால் தானே நம் வீட்டு அடுப்பில் பூனை தூங்குகிறது?

''அது தானே 'அடுப்புப்பூனை' என்ற என் கதைக்கு ஒரு நல்ல 'பிளாட்டாக' இருந்தது! எத்தனைபேர் அதைப் பாராட்டிப் பேசினார்கள்? நம் அடுப்பில் பூனை தூங்காவிட்டால், அந்தக் கதையை எழுதி இருப்பேனா? புகழ் கிடைத்திருக்குமா? ரஸனையற்றவள் நீ''

''வாழ்க்கை உங்களுக்குக் கதையாகிறது. எனக்குச் சோகமாகிறது!'' என்று சுந்தரி கூறும்பொழுது கண்களில் நீர் வலையாகி இருந்தது.

அவர் கதை எழுதுகிறவர். அந்தக் கண்ணீருக்குத் தன் கதாநாயகியாக இருந்தால் இப்படி விரிவுரை கூறி இருப்பார்: ''வாழ்க்கையை வாழ்ந்து விட்ட அளவில் தாக்கிவிட்ட புண்களில் நீர் வடிந்து கண்ணின் வழி நுழைந்தது!'' சுந்தரி சொந்த நாயகி. அதனால் கதைவகுக்கிற முறைப்படி அவள் கண்ணீருக்கு வாய்க்கால் விட முடியவில்லை அவரால். கொட்டுப் படப்பட பிள்ளைப் பூச்சி குளவியாகிறதல்லவா? அவரும் கொட்டுப்படப்பட மனிதப் பண்பிலிருந்து சிறிது மாற்றுக் குறையைப் பேசினார்: ''எழுதுகிறவனுக்கு மனைவியாக இருந்தால் சோறு கிடைக்காது. கற்பனை

இயற்கையின் வனப்பின் முன் மனிதனுல் அமைக்கப்பட்ட எந்தக் கலையின் அழகும் மதிப்பற்றதே. வானம், பூமி, இவ்விரண்டின் அழகுருபம்கலாரசிகனுக்குஆனந்த மளிப்பதற்குப் போதுமானது. அந்தக் கலையின் இன்பத்தை அனுபவிக்க முடியாத ஒருவன் மனிதனுல் அமைக்கப்பட்ட கலையின் ரசிகன் என்று கருதப்பட்டால் அவன் மயக்கும் காட்சிகளைக் கலை என்று கருதுபவனுகவே இருப்பான். உண்மைக் கலையை அவன் அறிந்தவனே அல்ல.

— கி. க. மஷ்ருவாலா

யைத்தான் ஆகாரமாகக் கொள்ளவேண்டும். இத்தனை வருஷங்களாக அது உனக்கு ஏன் தெரியவில்லை?''

''அது உங்கள் கடன்காரர்களுக்குத் தெரியவில்லையே! இது தெரிந்தால் அவர்களிடம் நீங்கள் ஏன் வாங்குகிறீர்கள்?''

''அதை எல்லாம் அனுவஸ்யம் என்று தெரிந்து கொண்டு தான் சந்நியாசம் வாங்கிக் கொள்ள நினைக்கிறேன். போ, உள்ளே!'' என்று கத்தினுர். சுந்தரிக்கு வாய் இருந்தது; வார்த்தை இல்லை. கண்ணிருந்தது; அழுகையுமிருந்தது. சென்று விட்டாள்.

இரவு பறந்தது. காலை புகுந்தது. சூரியன் தன் பொற்கிரணங்களால் மலர்களை அலம்பி இருப்பான்! புள்ளினங்களை ஆர்த்தெழ வைத்து கோலச் சிறகு விரித்து ஆனந்தப் பண் பாட வைத்திருப்பான், அந்த அற்புத நிகழ்ச்சிகளை அவர் பார்த்ததில்லை ஒரு நாளும். எழுதியதுண்டு. எழுந்து பார்த்ததில்லை. பாழும் கண்கள் மணி எட்டுக்கு முன்னுல் திறப்பதில்லை. அவர் என்ன செய்வார்? திறந்த ஜன்னல் வழியாக சூரியன் ஒளியைப் பாய்ச்சி விட்டான். அந்த ஒளியால் தாமரை சிரிக்கிறதே! அவருக்கு அது முள்ளாகக் குத்தியது. நிம்மதி இனி உண்டா? கண்களைக் கசக்கிக் கொண்டார். சோம்பல் முறித்து எழுந்தார். எதிரே இருந்த கிழட்டுக் கெடிகாரம் மணி ஒன்பது என்று ஓட்டை வாயைத் திறந்து அலறியது.

வழக்கத்திற்கு மாருக இன்று ஒரு மணி நேரம் அதிகமாகி விட்டது. அதனுல் என்ன? அவர் எழுத்தாளச் சக்கரவர்த்தி. யாருக்குப் பயந்து வேகாத சோற்றை விழுங்கி விட்டு வேலைக்கு ஓட வேண்டும்? படுக்கையில் அரை மணி நேரம் நெட்டி முறித்தார்; சோம்பல் முறித்தார்; கொட்டாவி விட்டார். பின்பு படுக்கையைச் சுருட்டினுர்.

அவர் கண்கள் தினசரி எழுந்ததும் ஜன்னலைப் பார்ப்பதுண்டு. அநேகமாக முதல் டெலிவரியில் ஏதாவது தபால் வந்திருக்கும். தபால்காரன் அந்த ஜன்னல் வழியாக எதையாவது வீசிவிட்டுப் போவான். வழக்கப்படி அவர் கண்கள் ஜன்னலில் விழுந்தன. ஒரு கவர் மட்டும் கிடந்தது.

அந்த மட்டில் அவருக்குத் திருப்திதான். கதைகள் திரும்பவில்லை என்ருல் மகிழ்ச்சிதானே? கவராக இருந்தால் யாராவது செக் அனுப்பி இருப்பார்கள் என்ற குதூகலத்தில் ஓடி எடுத்தார். உள்ளே இருந்த கடிதத்தை விரித்துப் பார்க்கும் முன்னுல் நிமிண்டிப் பார்த்தார்; வாயினுல் ஊதிப் பார்த்தார். செக்கில்லை! சற்றே அதிருப்தியுடன் கடிதத்தைப் பிரித்துப் படித்தார்:

''அன்புள்ள மாப்பிள்ளைக்கு, ஒரு சந்தோஷச் செய்தி!

''நான் 'கதாமலர்' என்ற பிரபலப் பத்திரிகையை

விலக்கி வாங்கி விட்டேன். பல வற்றையும் பரிசோதித்துப் பார்த்த பொழுது 'விடிவெள்ளி' என்ற உங்கள் கதையும் கிடைத்தது. படித்துப் பார்த்தேன். அற்புதமாக இருந்தது. எழுத்தில் வல்லுநரான தாங்கள் 'கதாமல'ருக்கு ஆசிரியராக இருந்தால் சாலப் பொருந்தும்.

"தங்களை மனத்தில் கொண்டே முற்றிலும் புதியதான இந்தப்பத்திரிகை தொழிலில் புகுந்திருக்கிறேன். தங்களுக்கு மாதச் சம்பளமாக ரூபாய் ஐநூறு தருகிறேன். இப்பொழுதே தாங்கள் வந்து சம்மதம் தெரிவித்து வேண்டுமென்கிற அட்வான்ஸ் வாங்கிச் செல்லவும்.

"தங்களுடைய மன நிலை தெரிந்தும் நான் ஏன் இந்த வேண்டுகோளை விடுத்தேன் என்பது இப்பொழுதைய பிரச்னை அல்ல. நேரில் பேசிக் கொள்ள வேண்டிய விஷயம் அது.

"பத்துமணி வரை வீட்டியே இருப்பேன். அவசியம் வந்து சந்தியுங்கள். இந்தப் புதுவித உறவின் மூலமாவது சுந்தரியை ஒரு முறை இங்கு வந்து போகச் செய்யச் சம்மதிப்பீர்களென நினைக்கிறேன்.

நீலகண்டம் பிள்ளை"

கடிதத்தைப் படித்து முடித்ததும் ஒரு துள்ளுத் துள்ளினார். அடுத்த கணம் 'மாமனார் நீலகண்டம் பிள்ளை' என்பது நினைவுக்கு வந்ததும் புடைத்தெழுந்த மகிழ்ச்சியை ஒரு தட்டுத் தட்டி அடக்கி வைத்தார். மனத்தின் உள்வளைசலாகக் கோபம் கொதித்தெழுந்தது.

"ஏய், சுந்தரி!" அடித்தொண்டை போட்டுக் கத்தினார்.

சமையல் அறையிலிருந்து தொங்கிய கண்களுடன் வந்தாள் சுந்தரி.

"நொப்பன் என்னை என்னடி நினைத்துக் கொண்டான்? சேவகத்துக்குக் கூப்பிடுகிறானே! கை கட்டி நிற்கிறவனடி நான்?"

சுந்தரிக்கு ஒன்றும் புரியவில்லை. அவருக்குக் கோபம் வந்து விட்டால் பிறர் புரிந்து கொள்ளும்படிப் பேசும் வழக்கமில்லை.

"நான் கஷ்டப்பட்டால் முதலைக் கண்ணீர் வடிக்க இவன் யார்? இவன் யாரென்று கேட்கிறேன்!"

இப்பொழுதும் அறிய முடியவில்லை. "விடிந்ததும் விடியாததுமாக இதென்ன பூகம்பம்? இரவுபகலாக அப்பா தலையைப் போட்டு ஏன் உருட்டுகிறீர்கள்?" என்றாள் விரக்தியுடன். அளவு கடந்த நிலைக்கு மேல் போனால் அந்த உணர்ச்சி தானே ஏற்படும்?

"இந்தக் கடிதத்தைப் பார்: விஷயம் விளங்கும்" என்று கூறியவராய், கடிதத்தை அவளிடம் விட்டு வீசினார்.

படித்தாள், முகத்தில் மலர்ச்சி படர்ந்து கிளைத்தது. கடிதத்தைக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள்.

"அப்பன் கடிதத்திற்கு பூப் போட்டுக் கும்பிடு!"

"நீங்கள் ஆடிக்குதிக்க என்ன இருக்கிறது கடிதத்திலே? நல்ல விஷயம் தானே?"

"நல்ல விஷயமல்லடி, நல்ல விஷம்! நீ போ, உள்ளே!"

'வா'வென்பதும், 'போ'வென்பதும் சர்வ சாதாரண நிகழ்ச்சிகள்தாம் அவர் வாழ்க்கையிலே. அதற்காக சுந்தரி கவலைப்பட முடியுமா?

நீலகண்டம் பிள்ளை கூட 'மேஷ'த்திற்கு சுந்தரியைக் கொடுக்கும் பொழுது கவலைப் படவில்லை. திரண்ட சொத்

துள்ள பிள்ளை, அவருக்குத் தன் குமாரியைக் கொடுக்கும் பொழுதே தெரியும் அவள் வாழ்க்கை முழுதும் கண்ணைக் கசக்குவாள் என்பது. இருந்தும் துணிந்தார்! ஏன் தெரியுமா? 'மேஷ'த்தின் கதைகளில் அவருக்கு ஒரு கவர்ச்சி உண்டு. பொதுவாக வர்த்தகப் பரம்பரையில் சம்பந்தம் உள்ள தன் குடும்பத்தில் எழுத்தாளன் ஒருவனையும் பிணைத்துவிட வேண்டுமென்பது அவர் ஆசை. 'மேஷ'மும் அவர் ஜாதிப் பிள்ளையாகச்சே வலியச் சென்று சுந்தரியை அவருக்கு கல்யாணம் செய்வித்தார்.

'மேஷ'த்திடம் அறிவு இருக்கிறது; அதற்குச் சமதையாக வறுமையும் இருக்கிறது. பணத்தைக் கொண்டு எழுத்தாளரின் வறுமையை ஓட்டிவிடலாம் என்று நினைத்தார் பிள்ளை. 'மேஷம்' செருக்கில் 'ரிஷப'த்தில் ஏறக்கூடியவர். "இயலாதவனாக இருந்தாலும் ஏற்கமாட்டேன். அது நான் எடுத்துக் கொண்ட எழுத்துலகுக்கே பெரிய அவமானம்" என்று கூறிவிட்டு சுந்தரியைக் அழைத்துக்கொண்டு வந்தவர்தான், மறுவிடு கூடப் போகவில்லை.

பிள்ளைவாள்கூட அதைப் பற்றி 'நாலுபே'ரிடம் பெருமையாகச் சொன்னார்: "என் மாப்பிள்ளை சரியான எழுத்தாளர். பரிசு பெறுவதுண்டு; தானம் வாங்குவதில்லை. இதுவரை என்னிடம் ஒரு செப்புக்காசைக்கூட எதிர்பார்க்கவில்லை!" என்றாலும் எந்தவிதமான உதவியையும் 'மேஷம்' பெற்றுக்கொள்ளவில்லை என்பதில் பெரிய ஆதங்கம். அதனால் செல்வத்தில் வளர்ந்த மகள் சீரழிகிறாளே என்ற கவலை. சில சமயங்களில் 'பொருந்தாத சம்பந்தமோ?' என்ற ஐயப்பாடு.

எதுவாக இருந்தால் என்ன? 'மேஷம்' தன்மானம் உள்ள தமிழர். 'இருக்கிறதோ?' என்று இரந்து கேட்கும் இனத்தில் பிறக்கவில்லை.

குன்றெடுத்தான் வேல் முருகன். மலைக்காற்று உடம்புக்கு நல்லது. கோபமெடுத்தார் 'மேஷம்'. அதனால் நல்லது என்ன?

அந்த வேளையில் உறுமல் ஒன்று கேட்டது. பழக்கப்பட்டதுதான். விறகுக் கடை நாடார்....!

"என்ன, எழுத்தாளரே! உங்க கதை அளப்பு இனிமே நடக்காது. வாங்கய்யா வெளியிலே!" என்று கத்தினார் நாடார்.

அதற்குச் சற்று முன்னால் வீரத் தமிழனாக இருந்த அவர், நாடாரின் இடி முழக்கத்தினால் கோழைத் தமிழனாக மாறி, வெளுறிய முகத்துடன் வெளியே வந்தார். குறட்டில் நின்று கொண்டிருந்த நாடார், "எங்கேய்யா பணம்?" என்றார்.

" 'கன்னிகா'வில் 'தேன் நிலவு' என்ற என் கதை பிரசுரமாகி இருக்கிறது. செக் வந்ததும்........"

"என்ன நிலவு வந்தாலும் வந்துட்டுப் போகும். அன்னைக்கி 'அமாவாசை இருட்டு'க்கு வந்த செக் பணத்தைக் கொடுக்கிறேன்னு சொன்னீங்களே, கொடுத்தீங்களா? எனக்கெதுக்கு இந்த வம்பெல்லாம்? அணா, பைசாப் பாக்கி இல்லாமே கொடுத்தாத்தான் இந்த இடத்தை விட்டுக் கிளம்புவேன்" என்று வாசற்படியில் உட்கார்ந்துவிட்டார் நாடார்.

"நாடார் அண்ணத்தைக்கு நடக்கிற கதைதான் எனக்கும். உமக்கு ஒரு மணி நேர நோட்டீஸ். பணத்தைக் கொடுத்தா எழுந்திருப்பேன். இல்லைன்னா உம்மைப் பத்தி பிட் நோட்டீஸ் போட்டு பத்திரிகைகாரங்க

ளுக்கு அனுப்புவேன், ஆமாம்!'' என்று கூறியவாறு நாடார் பக்கத்தில் அமர்ந்தான் வீட்டுக்காரன்.

''உனக்குப் பச்சைத் தண்ணியை ஊத்தல்லே. பாலே ஊத்தினேன், எனக்கென்ன வழி சொல்லறே?'' என்று புதிதாக வந்த பால்காரன் கர்ஜனை செய்துவிட்டு மூன்றுமவனுகக் குந்தினுன்.

எல்லாவற்றையும் பார்க்க மேஷத்திற்கு ஒரு நாடகம் போலிருந்தது. மூவரும்சேர்ந்து பேசித்தான் வந்திருக்கிருர்களோ? காஷாயம் பூண்டு ஓடி விடுவதற்குக்கூட முடியாது நந்திபோல் வழி மறைத்திருக்கிருர்களே!

வாய் மூடி மௌனியாகி உள்ளே சென்று நாற்காலியில் உட்கார்ந்தார். சகலத்தையும் கவனித்துக் கொண்டிருந்த சுந்தரி, மெதுவாகத் தலை நீட்டி ''விடமாட்டார்களோ?'' என்று கேட்டாள்.

''விடாமல் என்ன? அவர்கள் நோட்டீஸ் டயமான ஒரு மணிக்குள் என் உயிர் போய்விட்டால் விட்டுவிடுவார்கள்.''

''ஆபத்துக்குப் பாபமில்லை என்பார்கள். மானம் போய் வாழ்ந்து என்ன பிரயோஜனம்? நன்ருக யோசித்துப் பாருங்கள், ஆத்திரப்படாமல். எழுத்தாளர் ஆசிரியராவதும், ஆசிரியரை வேலைக்கமர்த்திக் கொள்ள அழைப்பதும் இன்றையச் சம்பிரதாயங்கள் தாமே! அப்பா உங்களுக்கு யாசகம் கொடுக்கவா கூப்பிடுகிருர்? உங்களைக் கெஞ்சித் தன் பத்திரிகைக்கு ஆசிரியராக அழைக்கிருர். உங்கள் புகழால் அவர் பத்திரிகைக்குப் பணம் பெருகும். அதற்கு ஈடாக உங்களுக்குப் பணம் தருகிருர். அந்த முறையில் பார்த்தால் உங்களால்தான் பத்திரிகையின்



''என் ஸார் **மெது** வடை கேட்டு ரொம்ப நாழி ஆச்சே.''

''வடை கொஞ்சம் **மெது**வாகத் தான் வரும். அவசரப்பட்டு பிரயோசனம் இல்லை.''

வளர்ச்சி இருக்கிறது. ஆகவே உடனே ஒப்புக் கொள்ளுங்கள்!''

'மேஷம்' சிந்தித்துப் பார்த்தார். சுந்தரியின் சொல்லில் அர்த்த முண்டு. ஆசிரியராக யார் அழைத்தாலும் செல்ல வேண்டியது தானே! உறவு முறையைக் கொண்டு உன்னதத் தொழிலை ஏன் உதறித் தள்ள வேண்டும்? அதுவும் ஒரு மணி நேரத்திற்குள் சுமார் நூறு ரூபாயை எப்படிச் சம்பாதிப்பது? அரிய சந்தர்ப்பத்தில் உபயோகமாக வந்த உத்தியோகத்தை ஏன் வெறுப்பது?

நெற்றி மேட்டைத் தட்டி விட்டார். ''சுந்தரி, 'கதாமல'ருக்கு ஆசிரியராக நான் தயார். உடனே உன் அப்பாவிடம் சென்று அட்வான்ஸாக ஏதேனும் வாங்கிவா. இந்த உபத்ரவத்தையாவது ஒழிப்போம். அட்வான்ஸாகக் கேள்; இனமாகக் கேட்டு விடாதே. என் கொள்கையைப் பாழாக்கி விடாதே'' என்ருர்.

சுந்தரிக்கு மனம் கொள்ளாத சந்தோஷம். 'மேஷ'த்தின் இரட்டை மண்டையில் ஒரு செல்ல குட்டு வைத்து விட்டு வெளியே போனுள். அவரும் உடன் சென்ருர்.

கடன்காரர்கள் அசையாது. உட்கார்ந்திருந்தவர்கள் சுந்தரியைக் கண்டதும் எழுந்தார்கள்.

''நீங்களெல்லோரும் போய் விட்டு மாலையில் வாருங்கள். நான் பணம் தருகிறேன்'' என்ருள்.

வாலைச் சுருட்டிக் கொண்டு போய் விட்டார்களே! சுந்தரியின் சொல்லுக்கு அத்தனை பெரிய சக்தியா?

* * *

''நாடாரே, நீங்கள் என் மகளின் குடும்ப விளக்கை ஏற்றி வைத்து விட்டீர்கள். அதற்கு என் நன்றி'' என்ருர் நீலகண்டம் பிள்ளை.

''நான் என்னத்தை செய்துட்டேன்? நீங்க சொன்னபடி செய்தேன். அவ்வளவு தானே?'' என்று நாடார் மொழிந்தார்.

''அவ்வளவு தான் என்று சுருங்கச் சொன்ஞல் முடியுமா? நான் சொன்னபடி அன்றைய தினம் நீங்களும், பால்காரனும், வீட்டுக்காரனும் என் மாப்பிள்ளைக்கு ஒரு நெருக்கடியை உண்டாக்கி விடாதிருந்தால் என்னிடம் வேலைக்கு வந்திருக்க மாட்டார்; உடன் உதவியையும் எதிர் பார்த்திருக்க மாட்டார். 'கதாமலர்' பத்திரிகையை விலைக்கு வாங்கியது அவருக்கு நன்மையைச் செய்யத்தான். அப்படிக் கில்லாமல் சொந்த முறையில் ஒரு காலணவை என்னிடம் எதிர்பார்த்திருப்பாரா என் மாப்பிள்ளை? அவர் 'கதாமல'ருக்கு ஆசிரியரானதும் சர்க்குலேஷன் ஏகமாகி விட்டது. உங்களுக்கும், பால்காரருக்கும், வீட்டுக்காரருக்கும் வருகிற ஞாயிற்றுக் கிழமையன்று ஒரு டீ பார்ட்டி வைக்கப் போகிறேன். அவசியம் வரவேண்டும்!'' என்று நன்றி உணர்ச்சி ததும்ப வேண்டுகோள் விடுத்தார் பிள்ளை.

''எனக்கா? ஹி, ஹி!.... நான் சின்ன மனுஷன், வேண்டாமுங்க!'' என்று கூறும்பொழுது நாடாரின் பற்கள் வெளியே தெறித்து விடுவதைப் போலத் தெரிந்தன.

''உங்களுக்குத் தெரியாது உங்களைப்பற்றி. என் சுந்தரி குடும்பத்துக்கு நீங்கள் தான் தெய்வம்!'' என்ருர் பிள்ளை.

* * *

அதே சமயத்தில் அலுவலகத்தில் அமர்ந்து 'கதாமல'ருக்காக 'மேஷம்' எழுதிக் கொண்டிருந்தார்: ''எழுத்தாளன் செருக்குள்ளவன், மறுக்க முடியாதுதான். ஆனல் சந்தர்ப்ப வலையங்கள் அவனை அறியாமல் அவன் கழுத்தில் விழும்போது ஏமாந்து போய்ப் பிறர் வலையில் விழுந்து விடுகிருன். அதற்குப் பின்னும் அவன் செருக்கு நிலை பெற்றதாகவே நினைக்கிருன். என்ன பேதமை....?''

மேஷம் பிறருக்குக் கண்ணாடியாக இருப்பவர். அதனல் தன் பிரதி பிம்பத்தை அவரால் பார்த்துக் கொள்ள முடிவதில்லை!

நம்மவர், பிறர், என்ற வித்தியாசம் பாராட்டுவதிலிருந்தே உலகத்தில் ஏற்படும் எல்லா உபத்திரவங்களும் ஆரம்பமாகின்றன. இந்த வேற்றுமைப் புத்தியே பிறரை அடக்கி ஆண்டால்தான் நாம் பிழைக்க முடியுமென்ற கொள்கைக்கு புகலிட மளிக்கிறது.

— அறிவுத்திரள்

இந்தப் பகுதி திரு. நையாண்டி பாரதியின் சொந்தக் கருத்துக்களே.
—ஆசிரியர்.

எழுத்தாளன் என்றாலே விசித்திரப் பிறவியாகத் தான் இருக்க வேண்டும் என்று அநேகர் எண்ணுவதாகத் தெரிகிறது. 'இவர் ஒரு எழுத்தாளர்' என்று யாராவது அறிமுகம் செய்து வைக்கப்பட்டால், எதிரே இருப்பவர்களின் பார்வையில் எவ்வளவோ அர்த்தங்கள் பதுங்கிக் கிடப்பதை உணர முடியும்.

பத்திரிகைகளிலோ, புத்தகங்களிலோ எழுத்தாளர்களின் எழுத்துக்களைப் படிக்கிறவர்கள் அவர்களைப் பற்றி தங்கள் இஷ்டம் போல் கற்பனை செய்து கொள்கிறார்கள். நேரே காண நேரிடும் போது ஏமாறுகிறார்கள். எழுத்தாளனும் — அவன் எவ்வளவு பெயர் பெற்ற திறமைசாலியாக இருந்தாலும் கூட — சாதாரண மனிதன் தான் என்ற நினைப்பு வாசகர்களில் பலருக்கு இருப்பதில்லை போலும்!

பரஸ்பரம் சந்தித்திராத எழுத்தாளர்களும் ஒருவரைப் பற்றி மற்றவர் கற்பனையில் கண்டு, 'இவர் இப்படி இருக்கலாம்' என்று ஒரு உருவம் தீட்டி வைத்திருப்பது இயல்பு. பிறகு எப்பொழுதாவது சந்திக்கும் பொழுது ஏமாறுவதும் இயல்பு தான்.

என்னைப் பற்றி எத்தனையோ பேர் எப்படி எப்படியோ கற்பனை செய்து, பிறகு ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். என்னிடமே அதைக் கூறியும் இருக்கிறார்கள். பலர் அப்படி அறிவிக்கும் அபிப்பிராயங்கள் விசித்திரமானவையாக ஒலிக்கும். அவை எனக்கு மகிழ்ச்சி அளிக்கத் தவறியதில்லை.

எழுத்தாளர்கள் என்றால் நிறைய வெற்றிலை போட வேண்டும்; சதா சிகரட்டை ஊதிக் கொண்டிருக்க வேண்டும்; குறைந்த பட்சம் பொடியையாவது மூக்கில் திணித்துக் கொண்டிருக்க வேணும். இவை எல்லோராலும் எதிர் பார்க்கப்படுகிற பண்புகள்.

இப் பண்புகள் பலவற்றையும் போற்றி வளர்க்கிறவன் உண்மையான எழுத்தாளன். அல்லது இவற்றில் ஒன்றையேனும் கலையாகக் கையாள வேண்டியது எழுத்தாளனின் கடமை. எழுத்தாளர்களும் ரசிகர்களும் கொண்டுள்ள எண்ணம் இது.

இத்தகைய 'நல்ல பழக்கம்' ஒன்று கூட இல்லாத அப்பாவி எழுத்தாளனைக் காணும் போது, அந்தப் பிரகிருதி பரிதாபத்துக்கு உரியவனாக விளங்குகிறான். அல்லது அதிசயப் பிராணி மாதிரிக் காட்சி தருகிறான்.

'ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறதே! நீர் வெற்றிலை கூடப் போடுவதில்லையா?' என்று வியப்போடு கேட்பவர்கள் பலர் என் முன் அடிக்கடி எதிர்ப்படுகிறார்கள்.

ஒருவர் என்னிடம் விசாரித்தார்: 'நீங்கள் எப்பொழுது எழுதுவது வழக்கம்? எப்படி எழுதுவீர்கள்? நீங்கள் எப்போ சிந்திக்கிறீர்கள்?'

"ஏன்" என்று கேட்டேன் நான்.

'எழுத்தாளர்கள் எழுதுகிற போது வேடிக்கையாக இருக்

கும் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். தலைமயிரைப் பிய்த்துக் கொண்டும், எங்காவது பார்த்து முறைத்த படியும், பேனவைக் கடித்து சுவைத்தவாறும் எழுதுவார்களாமே? நீங்கள் எப்படி எழுதுவீர்கள் என்று ஆராய விரும்புகிறேன்' என்று விளக்கம் கூறினார் அவர்.

நமது எழுத்தாளர்களைப் பற்றி விந்தைக் கதைகள் இல்லை; சுவையான குறிப்புகளைச் சேகரிக்க வேண்டியது அவசியம் தான். ஆனால் இதுவரை ஏனோ யாரும் அந்த நல்ல காரியத்தைச் செய்ய முன் வரவில்லை!

பெர்னாட்ஷா அப்படிச் செய்தார், இப்படிச் சொன்னார்; அந்த விமர்சகர் இந்த சந்தர்ப்பத்தில் இன்ன விதமாக ஓங்கி அடித்தார் என்றெல்லாம் நயமாக எடுத்துச்சொல்லும் குறிப்புகள் உலக எழுத்தாளர்களைப் பற்றிக் கதை கதையாகப் பேசுகின்றன. பல விநோதமாகவும் உள்ளன. மேதைக்கும் 'லூஸ் தன'த்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என நிரூபிக்கின்றன பல.

ஜான்சன் என்கிற ஆங்கிலப் பேராசிரியர் தெருவில் நடந்து செல்கிற போது, தெருவிளக்குகளின் கம்பங்களைத் தட்டிக் கொண்டே போவார்; ஒரு கம்பத்தைத் தட்டிக் கொடுக்கத் தவறி விட்டால், ஓடிப்போய் தட்டி விட்டுத் தான் மீண்டும் நடை வண்ணம் காட்டுவார். இச்செய்தி அநேகமாக எல்லோருக்கும் தெரிந்தது தான்.

அண்ணன் எமிலி ஸோலாவுக்கும் அப்படி ஒரு வழக்கம் இருந்ததாம். அது ரொம்பப் பேருக்குத் தெரியாது. அவர் வீதி வழியாகச் செல்லும் போது, வரிசையாக ஒளி வீசித் திகழும் 'கேஸ் லைட்டு'களை விடாது எண்ணிக் கொண்டே போவாராம்.

எழுதுவதற்கு 'மூடு' வேண்டும் என்பர் பலர். 'மூடு' (இதை 'எழுச்சி' என்று தமிழ்ப் படுத்தியிருக்கிறார்கள் சிலர்.) உண்டாவதற்குப் பலர் பல முறைகளை அனுஷ்டிப்பது வழக்கம். சிகரட், வெற்றிலை, காப்பி, தேநீர் வகையரா கை கொடுத்துக் காப்பாற்றும். மதுவிலக்கு இல்லாத காலத்தில், 'திவ்யமது, திராட்சை ரசம்' முதலியன ஒரு சில எழுத்தாளர்களுக்கு உற்சாகமூட்டும் ஜீவசத்துக்களாகத் திகழ்ந்தன.

என்றாலும், மேல்நாட்டு எழுத்தாளர்களில் சிலர் கையாண்ட முறைகளையோ, அவை போன்ற விசித்திரமான செயல்களையோ, அனுஷ்டிக்கும் அளவுக்கு நம் நாட்டு எழுத்துலக மேதைகள் முன்னேறியதாகத் தெரியவில்லை.

அலெக்ஸாண்டர் டுமாஸ் என்கிற பிரபல நாவலாசிரியர் பல ரகமான தாள்களை உபயோகித்தாராம். நாவல் எழுத ஒரு வர்ணமான காகிதம், கட்டுரை எழுத வேறு நிறமான தாள், சிறு கதை எழுதுவதற்குத் தனி வர்ணக் காகிதம் என்று தான். இந்த முறையை மாற்றிக் கொண்டதே இல்லையாம் அவர். மேலும் அவர் நீல நிற மை உபயோகிக்க ஆசைப்பட்டதே கிடையாதாம்.

ஒரு ஆசிரியருக்கு அழுகல் ஆப்பிள் பழம் மேஜை மீது இருந்தால் தான் கற்பனை ஓடுமாம். வேறொருவர் கற்பனை எழுச்சிக்காகத் தனது காலடியில் ஐஸ் கட்டிகளை வைத்துக் கொண்டு தான் எழுதுவாராம். நம் நாட்டு எழுத்தாளர்களுடன் பேசிப் பழகி அவர்களிடம் இத்தகைய அற்புதக் குணங்கள் ஏதாவது இருந்தால் அவற்றைப் பற்றி எழுத வேண்டியது அவசியம் தான்; ஆர்வமுள்ள ரசிகர் எவராவது இக்காரியத்தைச் செய்யலாமே!

எழுதியது: ஜி. சுவாமிநாதன்

உங்கள் ஞாபக சக்தி...!

நான் இடை நிலை வகுப்பில் படிக்கும்போது ஒரு மாணவ நண்பர் இருந்தார். அவரை, மாலை நேரத்தில், பாரிஸ்கார்னர் போன்ற போக்குவரத்து அதிக முள்ள ஒரு இடத்தில் நிறுத்தி ஒவ்வொரு காராகக் காட்டினால் அது யாருடையது என்று தவ ராமல் சொல்லிவிடுவார். சென்னையிலுள்ள எல்லா கார் எண் களும், அவைகளுடைய உரிமை யாளர்களும் அவருக்கு தலைகீழ் பாடம். கார் எண்களைப் பொருத்த வரையில் இவ்வளவு ஞாபக சக்தியுள்ள, சரித் திர மாணவரான அவர், பாடத் தில் வருகிற ஆண்டுகளை கவ னத்தில் வைக்க முடியாமல் கஷ்டப்படுவது பரிதாபமாக இருக்கும். எதில் நமக்கு மனப் பூர்வமான விருப்பம் ஏற்படு கிறதோ அதில் நம்மையறியா மலே ஞாபக சக்தியை வளர்த் துக்கொண்டு விடுகிறோம்.

நம்மில் அனேகருக்கு நெடுங் காலமாக உபயோகிக்கும் பொருள்களைப் பற்றியே விவ ரம் தெரியாது. கைக்கடியாரம் கட்டிக்கொண்டிருக்கும் உங்கள் நண்பரை அழைத்து அவரு டைய கடிகாரத்திலுள்ள எண் கள் ரோமன் முறையிலுள்ளதா? அராபிக் முறையிலுள்ளதா? என்று கேளுங்கள் (ரோமன் I, II........ அராபிக் 1, 2........) 6, 12 போன்ற எண்கள் சிவப்பு நிற மாகவுள்ளதா? அல்லது ஒரே மாதிரிதானா? கடிகாரத்தில் வினாடி முள் இருக்கிறதா? இருந்தால் என்ன நிறம்? அனே கமாக அவருக்குத் தெரியாது. மற்றவர்களை யென்ன? உங் கள் கடிகாரத்தைப் பற்றி நீங் களே நினைத்துப் பாருங்களேன்.

சமீபத்தில் மைசூரைச் சேர்ந்த சகுந்தலா என்ற பெண் ணின் அபார ஞாபக சக்தியை பற்றி அடிக்கடி பத்திரிகைகள் பிரசுரித்தன. நூற்றுக் கணக் கான எண்களைக் கொடுத்தால் மனத்தாலேயே அவற்றைப் பெருக்கி குறுகிய நேரத்தில் அப்பெண் விடையளித்திருக் கிறாள்.

முன்னால் அமெரிக்க ஜனாதி பதியான பிராங்கிளின் ரூஸ் வெல்டுக்கு, அவருடைய ஓட் டர்கள் எல்லோருடைய பெயர், தங்கியிருக்கும் இடம், செய் யும் தொழில் ஆகியவை யெல் லாம் நன்றாகத் தெரியுமாம். லட்சக்கணக்கானவர்களை அவர் எப்படி ஞாபகத்தில் வைத் திருக்க முடிந்தது!

விஞ்ஞானிகள் இன்னும் நமது மூளையைப் பற்றிய முழு விவ ரத்தை அறியவில்லையாயினும் மூளை எல்லையில்லாத சக்தி யுடையதென்பதையும், அதன் மிகச்சிறு பகுதியையே நாம் உபயோகிக்கிறோம் என்றும் உறுதியாகக் கூறுகிறார்கள்.

சமீபத்தில் மேக்கில் (Megill) பல்கலைக் கழகத்தில் டாக்டர் பென்டீல்ட் என்பார் ஞாபக சக்தியைப்பற்றி ஒரு பரிசோ தனை நடத்தினார். மின்னணு கொண்ட மெல்லிய இருப்புக் குச்சியொன்றைத் தயாரித்து அதை ஒருவருடைய தலையின் வெவ்வேறு இடங்களில் பொருத்தினார். ஒரு இடத்தில் குச்சியின் வழியாக மின்னணு பாய்ந்தபோது பரிசோதிக்கப் பட்டவருக்கு விசித்திரமான ஞாபகசக்தி யெல்லாம் எழுந் ததாம். தாம் மறந்துவிட்டதாக எண்ணிக் கொண்டிருந்த பல

விஷயங்கள் அப்படியே நேரடியாக அனுபவிப்பது போன்று தோன்றியதைக் கண்டு அவர் பிரமித்துப்போனார். நாம் சிறு குழந்தையாக இருந்ததிலிருந்து இன்றுவரை நமது ஐம்புலன்களால் ஈர்த்த எல்லா விஷயங்களும் நம் மனத்தில் உள்ளன. ஆனால் அவற்றில் சிலவற்றையே நாம் விரும்பும்போது திருப்பி எண்ணமுடிகிறது. நம் மனத்தை சினிமா பிடிக்கும் கருவிக்கு ஒப்பிடலாம். நமது வாழ்க்கையில் நடைபெற்ற எல்லா விஷயங்களும் ஒன்று விடாமல் படத்தில் (மனத்தில்) பதிவாகியிருக்கிறது. ஆனால் அவற்றை எப்படி மனத் திரையில்....ஓடச் செய்வதென்பதைத் தெரியாமலிருக்கிறோம்.

இதைத் தெரிந்து கொள்ள முடியுமா? தெரிந்து கொண்டால் பயனுண்டா? என்ன பயன்?

யாராவது 'யானை' என்ற வார்த்தையை நம்முன் உச்சரித்தால் பலவிதமான ஞாபகங்கள் உள்ளத்தில் உருவாகின்றன. நீண்ட துதிக்கை, அகன்ற காதுகள், பெரிய கால்கள் ஆகியவையோ, அல்லது யானையைப் போன்ற மிகப் பெரிய மிருகங்களான நீர்யானை, காண்டா மிருகம் முதலியவையோ நினைவுக்கு வரலாம். யானையினுடைய மனப்பான்மை, நன்றி கெட்ட தன்மை, ஆகியவையும், யானையைப் பற்றி நாம் படித்தவை, நமது சொந்த அனுபவம் ஆகியவற்றையும் எண்ணுவோம். இதைத் தவிர, யானையைப் பற்றி எண்ணும்போது, 'டென்சிங்கைப் பற்றியோ, மைக் கூட்டைப் பற்றியோ, தேன் கூட்டைப் பற்றியோ ஞாபகம் வருவதில்லை.

யானையைப் பற்றி நினைக்கும் போது துதிக்கையைப்போல, டென்சிங் ஏன் ஞாபகத்துக்கு வரக் கூடாது? ஞாபகம் என்பது தொடர்பு பற்றி வரும் ஒரு திறமை. பொருள்களுக்கிடையேயுள்ள தொடர்பை நான்கு வகையாகப் பிரிக்கலாம். முதல் பிரிவு **வகுப்பு** எனப்படும்: யானையைப் பற்றி எண்ணும்போது அதே வகையைச் சேர்ந்த காண்டா மிருகம், கடல் யானை முதலியவை ஞாபகத்துக்கு வருகின்றன; இரண்டாவது, **பகுதிகள்:** யானையினுடைய உறுப்பு அல்லது பகுதிகளாகவுள்ள, துதிக்கை, காதுகள், கால்கள் ஆகியவை; மூன்றாவது, **தன்மை:** யானையினுடைய குணம், அதன் வலிமை, கூர்மையான பார்வை: நான்காவது, **தொடர்பு;** புத்தக வாயிலாகவோ, கேள்வி ஞானத்தாலோ, அனுபவ ரீதியாகவோ, நமக்கும் யானைக்கும் ஏற்பட்டுள்ள தொடர்பையும் அதனால் ஏற்படுகிற ஞாபகத்தையும் இப்பிரிவு குறிப்பிடுகிறது.

ஒரு பொருளைப் பற்றி தெரிந்தது முழுவதையும் ஞாபகம் கொள்ள விரும்புவோர், மேற்குறிப்பிட்டுள்ள நான்கு பகுதிகளாகவும் அதைப் பற்றி எண்ணுதல் வேண்டும். ஒவ்வொரு நாள் அதிகாலையிலும், குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி வைத்து தனியே வரிசைப்பட எண்ணத் தொடங்கினால் மன ஒருமையும் (Concentration) ஞாபக சக்தியும் ஏற்படும்.

கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளை மூன்று முறை படித்து திருப்பிக் கூறிப் பாருங்கள். சந்திரன், பால் பண்ணை, தலை, தாள், கூரை, பால், புகழ், கண்கள், வெள்ளை, கொட்டகை, கீர்த்தி, பூனை, உச்சி, சூரியன், புத்தகம். இவ்வார்த்தைகளில் சிலவற்றைக் கூட வரிசையாகக் கூறுவது கஷ்டம். பிறகு கீழ்க்கண்டவற்றையும் மூன்று முறை படித்து வரிசையாகச் சொல்லிப் பாருங்கள் பூனை, பால்,

பால் பண்ணை, கொட்டகை, கூரை, உச்சி, தலை, கண்கள், படிப்பு, புத்தகம், தாள், வெள்ளை, சந்திரன், சூரியன், கீர்த்தி, புகழ், முன்பைவிட இம்முறை, மிக விரைவில், வரிசையாகக் கூற முடிவதைக் காண்பீர்கள். முன்பிருந்த வார்த்தைகளே இருந்த போதிலும். அவ் வார்த்தைகளூடே தொடர்பு இருப்பதால் அவற்றைச் சுலபமாக ஞாபகத்தில் வைக்க முடிகிறது. விஷயங்களை ஞாபகப் படுத்திக் கொள்ள விரும்புவோர் அவற்றிற் கிடையேயுள்ள தொடர்பைக் கண்டு பிடிக்க வேண்டும்.

காரியாலயத்துக்குச் செல்லும்போது நண்பர் ஒருவர் கொடுத்த புத்தகமொன்றை எடுத்துச் செல்ல வேண்டும் என்று வைத்துக் கொள்வோம். அப்புத்தகத்தை நாம் காரியாலயத்துக்கு எப்பொழுதும் எடுத் செல்லும் ஒரு பொருளோடு சேர்த்து வைக்கிறோம். உதாரணமாக பணப் பையோடு புத்தகத்தைச் சேர்த்து வைத்தால் பையை எடுக்கும் போது புத்தகமும் கண்ணில் படுகிறது. இதை நேரடியாகச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அடுத்த நாள் காரியாலயத்துக்குச் செல்லும் போது பணப் பையை எடுப்பது போலவும், அப்போது புத்தகமும் அங்கு சேர்ந்திருப்பது போலவும் கற்பனை செய்து ஒரு நிமிடம் மனக் கண்ணால் படரூபமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். அடுத்த நாள் பர்சை எடுக்கும் போது புத்தகமும் கட்டாயம் கவனத்துக்கு வரும். இது அநாவசியமான வேலையாகத் தோன்றலாம். சிறிய விஷயங்களுக்கே ஞாபக சக்திக்கு வேலையளிக்காவிட்டால், அது சோம்பி பெரிய காரியங்களுக்கு பயனளிக்காமற் போய் விடும்.

பல சமயங்களில் நாம் எண்களை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. எண்ணங்களைப் போல, எண்களை மனதில் சுலபமாகத் தொடர்பு கொள்ள முடிவதில்லை, எனவே எண்களைப் பொறுத்த வரையில் நமது மறதி அதிகமாக இருக்கக் காண்கிறோம். 8715 என்ற டெலிபோன் எண்ணை ஞாபகத்தில் கொள்ள வேண்டும் என்று வைத்துக் கொள்ளலாம். அந்த நான்கு எண்களுக்கும் இடையேயுள்ள தொடர்பை நன்றாக ஆராய வேண்டும். 8715-ல் முதல் எண்ணான '8' இரட்டைப்படை எண் என்பதோடு, அந்த நான்கில் அது தான் பெரியது. மற்ற மூன்று எண்களான 7 — 1 — 5 ஆகியவை ஒற்றைப் படைகள். இந்த மூன்று ஒற்றைப் படை எண்களில் பெரியதான '7' அவை மூன்றிற்கும் முதலில் உள்ளது. நடு எண்ணான '1' எண்களிலேயே மிகச் சிறிய எண். கடைசி இரண்டு எண்களையும் கூட்டினால் (1+5=6) முதலிலிருந்து ஒவ்வொன்றாகக் குறைந்து கொண்டே வருகிறது (8, 7, 6=1+5)………… இது தொல்லையான, பயனற்ற ஆராய்ச்சியாக முதலில் தோன்றினாலும், இப்பழக்கத்தை நாம் ஏற்படுத்திக் கொண்டால் சில நாட்களில் நம்மையறியாமலே நம் அக மனம் இந்த ரீதியில் தொழிற்பட ஆரம்பிக்கும். பிறகு எண்களை ஞாபகத்தில் கொள்வது மிகவும் சுலபமாகி விடும்.

ஒருவர், பத்து விஷயங்களை எண்மாற்றிக் கூறி அதை வரிசையாகக் கூற வேண்டுமென்பதாக வைத்துக் கொள்வோம். இதை மற்றவர்கள் பிரமிக்கும்படி சுலபமாகவும், சரியாகவும், சீக்கிரமாகவும் கூற வழியிருக்கிறது.

கீழே கொடுக்கப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்.

ஒன்று : அஜந்தா

இரண்டு : இங்கிலாந்து
மூன்று : மஞ்சூரியா
நான்கு : நேபாளம்
ஐந்து : அயர்லந்து
ஆறு : அமெரிக்கா
ஏழு : எகிப்து
எட்டு : எல்லோரா
ஒன்பது : ஒரிசா
பத்து : பிரான்ஸ்

இவற்றை ஒவ்வொரு நாளும், பார்த்து, படித்து, எண்ணி மறக்காதவாறு மனத்திற் கொள்ள வேண்டும். இவை உங்களுக்குப் பிடிக்காவிட்டால் ஏதாவது பத்து பொருளை நீங்களே எழுதி மனப் பாடம் செய்து கொள்ளலாம். ஆனல் எண்ணின் பெயரோடு, இடத்தின் பெயரோடு, பொருளின் பெயரோ தொடர்ந்து ஞாபகத்துக்கு வரவேண்டும். உதாரணமாக ஆறு என்ற எண் சொல்லப்பட்டால் 'அமெரிக்கா' மனக்கண்முன் தோன்ற வேண்டும்.

இப்பொழுது; கண்ணுடி (எட்டாவது வார்த்தை); கடிகாரம் (5); விஞ்ஞானம் (1); தாஜ்மஹால் (6); கவர்னர் (9); புகையிலை (4); நேரு (3); ஹிட்லர் (10); அணுகுண்டு (2); தத்துவம் (7); என்ற வார்த்தைகளை ஒருவர் மேல் குறிப்பிட்டிருப்பது போல் கூறி, ஒன்றிலிருந்து வரிசையாக ஒவ்வொன்ருக கேட்கிருர் என்று வைத்துக் கொள்ளலாம்.

எட்டாவது வார்த்தை 'கண்ணுடி' என்று அவர் ஆரம்பித்ததும் நமக்குப் பழக்கத்திலுள்ள 'எல்லோரா' ஞாபகத்துக்கு வரும். உடனே 'கண்ணுடிச்சிலைகளைப் போன்று அழகிய கருங்கற் சிலைகள் எல்லோராவில் உள்ளன' என்று ஏதோ ஒரு தொடர்பை, கண்ணுடிக்கும், எல்லோராவுக்கும் இடையே ஏற்படுத்தி எண்ணிக் கொள்ள வேண்டும்.

இதே போன்று அடுத்தபடி கடிகாரம் ஐந்தாவது வார்த்தை என்று அவர் கூறியவுடன் 'அயர்லந்து' நம் ஞாபகத்துக்கு வரும் அயர்லந்தின் முன்னுள் தலைவரான டி. வேலரா, கடிகாரத்தைப் போல நேரந் தவராமல் வேலை செய்பவர் என்று தொடர்பு கொள்ள வேண்டும்.

விஞ்ஞானம், ஒன்ருவது வார்த்தை என்றவுடன், அஜந்தாவின் அழியாத சித்திரங்கள் விஞ்ஞான ரீதியால் வர்ண வேலைகள்' என்று எண்ணி, இப்படி ஒவ்வொன்றையும் நமக்கு முன்பு தெரிந்த பத்து இடங்களோடும் இணைத்து விட்டால் அவர் கூறி முடித்தவுடன், ஒன்றிலிருந்து வரிசையாக அவர் கூறிய 10 வார்த்தைகளையும் சொல்லி விடலாம். நாளடைவில் மிக விரைவாக, சொற்களையும் பொருள்களையும் இணைக்கும் ஆற்றல் பெற்று விடலாம். எழுதுவதற்கு ஆகும் நேரம் எண்ணுவதற்கு ஆகாது. மேற்குறிப்பிட்ட பத்து இடங்களைப் போல, நூறு இடங்களை நினைந்து இணைக்கப் பழகுவதும் அரிதல்ல.

எல்லாத் திறமைகளையும் போன்றே ஞாபக சக்தியும் பழக்கத்தால் வளர்ச்சியடையக் கூடியது. நாம் ஞாபக சக்தியை எவ்வளவு உபயோகிக்காமல் போகிருேமோ அவ்வளவு அது கெட்டுப் போகிறது. நமது ஞாபக சக்தியை முழு மனதோடு நம்பினல் அது நமக்கு அன்புள்ள பணியாளாக இருக்கும். நம்பாமற் போனல் அதுவும் தொழில் படாது சோம்பிப் போகும். ஞாபக சக்தியை வளர்க்கும் ஆற்றல் பெற்றவை 'நம்பிக்கை, பழக்கம்' இரண்டுமே. சென்ற காலத்தில் ஞாபகத் திறமைக்கு உலகெங்கும் பெயர் பெற்ற நம் நாடு இன்று அத்துறையில் குன்றியிருப்பது வருத்தத்திற்கு உரியதாகும்.

தனக்கு எது வந்தாலும் பரவாயில்லை. ஆனால் தன் கணவனுக்கு ஒன்று மில்லாமலிருந்தால் போதும்! இந்த நினைவில் அவள் தன்னை மறந்தாள்

கோமதி சுப்பிரமணியம்
எழுதிய

நிம்மதி!

கவர்மெண்ட் பெரிய ஆஸ்பத்திரி இரவின் அமைதியிலே ஆழ்ந்து போயிருந்தது. ஜனசந்தடியற்ற அந்த இரவிலே அவள் மட்டும் அழுதாள், அழுதாள். அழுது கொண்டே இருந்தாள். எங்கும் நிசப்தம் நிலவிய நேரம். வியாதியின் வேதனையைத் தாளாத ஒன்றிருவரின் முணகலைத் தவிர மற்றையோர் நிம்மதியுடன் நித்திரையில் ஆழ்ந்து போயிருந்தனர். அரை மணிக்கொரு முறை "நைட்" நர்ஸ் அங்குமிங்கும் உலவி நோயாளிகளுக்கு யார் யாருக்கு என்னென்ன தேவை என்பதை சுற்றி ஆராய்ந்து கொண்டிருந்தாள். "சுடு தண்ணி" கேட்ட நோயாளி ஒருத்திக்கு கோப்பையில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்து விட்டுத் திரும்பிய நர்ஸ் ரீடாவின் செவிகளில் சாந்த குமாரியின் விம்மல் ஒலி லேசாக மோதிச் சென்றது. பெரிய விளக்கின் பட்டனைத் தட்டி விட்டு சாந்த குமாரியின் படுக்கையைக் கூர்ந்துகவனித்த நர்ஸ் பச்சாதாபத்துடன் சாந்தாவின் படுக்கையை நெருங்கினாள். படுக்கையில் நிலை கொள்ளாமல் தத்தளித்த சாந்தாவின் நிலைக்கிரங்கி "உனக்கு என்னம்மா வேண்டும். சுடு தண்ணீர் ஒத்தடம் கொடுக்கவா? அல்லது மருந்து தடவவா" என்று கேட்ட நர்ஸை நோக்கி பரிதாபமாக விழித்த சாந்தா "வேண்டும்... ஒன்றே ஒன்று வேண்டும்.... எமனுலகுக்கு செல்லும் வழி தெரிய வேண்டும். அது ஒன்று தான் வேண்டும்" என்று மனக் கசப்புடன் மொழிவதைக் கேட்டு ஆறுதலாக இரண்டு வார்த்தை சொல்லத் துடித்தது மனம்.

"மனதைத் தளர விடாதே சாந்தா. கொஞ்சம் தைரியமாக இரு. நாளை நிலைமை சரியாகி விடும். இன்று நரம்பு ஊசி கொடுத்திருக்கிறார்கள் அல்லவா? டாக்டர் அம்மா உன் விஷயத்தில் மிகவும் அக்கரைக் காட்டுவதை நீ அறியவில்லையா?"

"அறிந்திருக்கிறேன் ஸிஸ்டர். ஆனால் என்னால் தாங்க முடியவில்லையே. ஐயோ அப்பப்பா.... என்று கால்களைப் பிடித்துக் கொண்டு கதறத் தொடங்கினாள். அவள் தவித்த தவிப்பைக் கண்டு மனம் வருந்திய நர்ஸ் ஓடிப்போய் தைலம் எடுத்து வந்து காலில் தடவி வெந்நீர் பையால் சிறிது நேரம் ஒத்தடம் கொடுத்தாள். மருந்து தடவிய வேகத்திலும் ஒத்தடத்தின் சுகத்திலும் தன்னை மிஞ்சிக் கிறக்கம் காணுவதைக் கண்ட நர்ஸ் தூக்க மாத்திரை ஒன்றை எடுத்து அவள் வாயில் போட்டு சிறிது தண்ணீர் ஊற்றிய பின் கைத் தாங்கலாக படுக்கையில் படுக்க வைத்தாள். நித்திரையின் அறைகுறை மயக்கத்திலே அவள் மனதில் பல பல எண்ணங்கள்.....

ஞாயிற்றுக்கிழமை குழந்தைகளுக்கு விடுமுறை நாள். எக்ஸிபிஷனுக்குச் செல்ல வேண்டுமென்கிற உற்சாகத்தில் காலையில் எழுந்தது முதல் வேலை சுறுசுறுப்புடன் ஓடிக் கொண்டிருந்தது. "அம்மா நான் ஸில்க் பாவாடை கட்டிக் கொள்ள வேண்டுமா... நான்.... புதிதாக தைத்த 'பாண்ட்' போட்டுக் கொள்ள வேண்டுமா" என்று குதித்துக் கொம்மாளமிட்டக்

குழந்தைகளின் வேண்டுகோளை பொறுமையுடன் ஏற்றுக் கொண்டு அவரவர்கள் கோரிக்கையை நிறைவேற்றுவதாக வாக்குக் கொடுத்து அவர்களை உற்சாகமூட்டினாள். வீடு ஒரே கோலாகலத்தில் மிதந்தது.

மத்தியான சாப்பாடு முடிந்த கையோடவே குழந்தைகளுக்கு தலைவாரி விடவும் டிரஸ் செய்து கொள்வதுமாக ஆயத்தமாகி மாலை நாலு மணிக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

எக்ஸிபிஷனில் இரண்டு மணி நேரமாகச் சுற்றிச் சுற்றி நடந்ததில் காலை வலிப்பது போலிருந்தது. வீட்டிற்கு வந்ததும் 'அம்மா' வென்று காலைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டாள்.

''செல்லப் பிள்ளை! எக்ஸிபிஷனில் நடப்பதற்குக் கூட டாக்ஸி விட்டிருந்தால் தேவலை....பாவம் பல மைல் நடந்ததில் களைத்துப் போய்விட்டாய்'' என்று கணவன் கூறியது அப்போதைக்கு விளையாட்டாகத் தோன்றினாலும் அவளுக்கென்னவோ வேதனையாக இருந்தது.

படுக்கைக்குப் போகுமுன் வீட்டிலிருந்த தைலத்தை தடவி விட்டு வெந்நீர் விட்டுக் கொண்டு படுத்தாள். அவ்வளவுதான் அலுப்பில் கண்ணயர்ந்து விட்டாள். இரவு இரண்டு மணி இருக்கும். காலில் ஏதோ வேதனை தோன்றவே திடுக்கிட்டு விழித்த சாந்தா எழுந்திருக்க முயன்றாள். ஐயோ இதென்ன அவதி! காலை யாரோ பற்றி இழுப்பது போன்ற வேதனை. எழுந்திருக்கவும் முடியவில்லை. உயிர் போகும் வேதனையில் பல மணி நேரம் போராடி எப்படியோ தட்டுத் தடுமாறி எழுந்திருந்துவிட்டாள். உடம்பு முழுவதும் ஒரே வியர்வை வெள்ளம். தலை சுற்றி



மயக்கம் வரும் நிலையில் கணவனது கைத் தாங்கலில் சிறிது நேரமிருந்து அவன் அன்போடு கரைத்துக் கொடுத்த ஹார்லிக்ஸையும் சிறிது பருகியபின் தன் நிலை வந்தது. ஆனால் அதன் பின் பலமுறை எழுந்திருக்க முயன்றாலும் எழுந்திருக்க முடியாமல் இருந்த இடத்திலேயே உட்கார்ந்த நிலையில் உட்கார்ந்துவிட்டாள்.

வாய்வு பிடிப்பு என்றனர். சிலர் ரத்தக் கட்டு என்றனர். இன்னும் சிலர் ஒவ்வொருவரும் வைத்தியம் சொன்னார்கள். சிலவற்றைக்கேட்டும் சிலவற்றைத் தள்ளியும் இரண்டொரு நாள் கழிந்தது. ஒன்றிலும் குணம் தோன்றாமையால் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார் அவள் கணவன்.

நாலு நாள் இங்கேயே இருந்து வைத்தியம் செய்வதானால் தான் வியாதியைக் கண்டு பிடிக்க முடியுமென்று லேடி டாக்டர் அபிப்பிராயம் கூறிவிடவே அங்கேயே சேர்த்து விட்டு வீடு திரும்பினார் அவள் கணவன்.

அவள் ஆஸ்பத்திரிக்கு வந்து அன்றோடு ஒருவாரம் ஓடி விட்டது. இந்த ஏழு நாளிலும் இன்றைய நிலையைவிட நாளை தெளிவு கண்டு விடும் என்கிற நம்பிக்கையிலேயே ஒவ்வொரு நாளையும் ஓட்டி வந்தாள். அவள் நம்பிக்கைக்கு மாறாக நிலைமை மோசமாகி வந்ததே தவிர அவர் எதிர் பார்ப்பது போல் தெளிவு காணவில்லை. பகல் பொழுதாவது ஒரு வகையாக சிரித்த முகத்துடன் வேதனையைச் சற்றுசமாளித்துப்பொழுதைப்போக்கி விடுவாள். ஆனால் இரவு நெருங்க நெருங்க வியாதியின் வேதனை அதிகரித்து கண்ணீரும் கதறலுமாக தவித்துத் துடிப்பாள். அவள் வேதனையைக் கவனித்த ஆஸ்பத்திரி டாக்டரும் மருந்தை மாற்றி மாற்றி தன் திறமை முழுவதையும் பிரயோகித்துப் பார்த்ததென்னவோ குறைவில்லை. ஆனால் அவள் வரை சிறிதும் மாறுதல் காணாமையால் அவள் மனம் எண்ணாததெல்லாம் எண்ணத் தொடங்கியது.

நர்ஸின் பலவந்தத்தின்பேரில் படுக்கையில் சாய்ந்த சாந்தாவின் நினைவில் பல பல நினைவுச் சுடர் தெரித்துச் சிதறின..

* * *

இரண்டு மாதத்திற்கு முன் குழந்தைகளின் விடுமுறைக்காக பிறந்த வீடு சென்றிருந்தாள். வருஷந்தோறும் விடுமுறைக்குப் பிறந்த வீடு போய் விடுவது அவள் வழக்கம். வருஷத்திற்கு ஒரு முறை தன் பந்துக்களையும் நண்பர்களையும் சந்தித்து அவர்களோடு பல நாள் தங்கிக் கழிப்பது அவளுக்குப் பரமானந்தம், வழக்கத்தைப் போலவே அந்த வருஷ விடுமுறையும் உற்சாகத்துடனே போய்க்கொண்டிருந்தது. பக்கத்து ஊர்களில் வசித்துவந்த பந்துக்களின் வீடுகளில் தங்கியிருந்ததில் பாதி நாள் கழிந்து விட்டது. மிகுதி நாள் விடுமுறையை பிறந்த வீட்டிலேயே நிம்மதியுடன் கழித்துவிட கருதி இருந்தாள். பின்னும் ஒரு வாரம் ஓடியது.

விளையாட்டாய் உட்கார்ந்து பலரும் பேசிக் கொண்டிருந்த போது வாசலில் ஒரு கிழவன் ஜோஸ்யம் பார்ப்பதாகக் கூறி அவர்களிடையே வந்துநின்றான். ''தாத்தா ஜோசியம் பார்ப்பதாகக் கேட்கிறாயே முதலில் நாங்கள் ஜோஸ்யம் பார்க்கத் தயாராய் இருக்கிறோமா என்று உன் ஜோஸ்யத்தில் கண்டுபிடிக்கத் திறமையில்லையா?'' என்று பாதி விளையாட்டாகவும் பாதி கேலியாகவும் கேட்டு நிறுத்தினாள் சாந்தா. ''யார் கேட்டாலும் கேட்காவிட்டாலும் நீ கேட்பாய் என்கிற நம்பிக்கையில்

பட்டணத்தான்: ஹோட்டல் எவ்வளவு தூரம்?

பட்டிக்காட்டான்: கூப்பிடு தூரந்தானுங்க

பட்டணத்தான்: (ஆத்திரத்துடன்) கேக்கிறவன் காது செவிடா இருந்தா?

தான் இங்கு வந்தேனம்மா'' என்று கிழவன் தன் திறமையை நிரூபிக்கப் பார்த்த போது அதை ஆமோதித்தான் சாந்தாவின் தம்பி ரகு.

''பிறக்கப் போற குழந்தை யாவது ஆண் பிள்ளையாக இருக்குமா என்பதை அக்கா கேட்கத் துடிக்கிருள் என்பதை தாத்தா எப்படியோ தெரிந்து கொண்டு விட்டாரே'' என்று பரிகாசமாகக் கூறிய தம்பியை செல்லமாகக் கடிந்து கொண்டாள் சாந்தா.

அவன் கூறியதென்னவோ உண்மை. வரிசையாக ஐந்து பெண்களை பெற்று விட்ட சாந்தாவுக்கு ஆருவது குழந்தை யாவது பிள்ளையாகப் பிறக்கக் கூடாதா என்கிற ஆவல் எழுவது சகஜந்தானே. பின்னும் நாலு மாதம் கழித்து அறிய வேண்டியதை எதிரே நின்ற ஜோஸ்யர் திறமையால் அப்பொழுதே அறிந்துவிடத் துடித்ததிலும் அதிசயமில்லை.

''சரி தாத்தா! எனக்குப் பார்த்துச் சொல்லு. ஜோஸ்யம் பார்க்க என்ன வேண்டும்'' என்று கூறிவிட்டு ஜோஸ்யம் பார்க்கத் தயாராளுள் சாந்தா. ''ஏதோ கொடுத்ததைக் கொடம்மா. காசு பெரிதில்லை. ஆனால் இந்தக் கிழவன் சொன்னால் சொன்னதுதான். இப்பொழுது சொன்னால் தெரியாது. ஆனால் பின்னால் தெரிந்து கொள்வாய் இந்தக் கிழவனின் திறமையை.

இப்பொழுது தரவேண்டாம் எதுவுமே. இந்தக் கிழவ்னின் வாக்குப் பலித்து ஏதாவது காரியம் சித்தியாகியிருந்தால் நான் பின்னொரு தடவை வரும் போது கொடுத்தால் போதும்'' என்ற முன்னுரையுடன் ரேகையைப் பார்க்கத் தயாரானர். அவள் தக்ஷணையாக வைத்த இரண்டணவை எடுத்து பையில் போட்டுக் கொண்ட கிழவன் அவள் கரத்தில் ஓடிய ரேகையை ஆராயத் தொடங்கினர். சிறிது நேரம் அவளது கரத்தை இப்படியும் அப்படியும் புரட்டி ஏதேதோ பலன்களைக் கூறி வந்தவர் சிறிது நேரம் திகைத்தாற் போலிருந்துவிட்டார்.

''ஏன் தாத்தா ஜோஸ்யம் ஓடவில்லையா? அல்லது இரண்டணக் காசுக்குண்டான ஜோஸ்யம் அத்துடன் தீர்ந்துவிட்டதா'' என்று கூறிய சாந்தாவின் பரிகாசத்தை அவ்வளவாக ரஸிக்கவில்லை யென்பதை ஜோஸ்யரின் கவலைக்கோடு படிந்த முகம் எடுத்துக் காட்டிற்று.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லையம்மா. ரேகையில் தோன்றும் பலன் நல்லதோ கெட்டதோ எதையும் ஒளிக்காமல் கூறினால் அதற்காக என்

மீது வருத்தப்பட்டுக் கொள்ள மாட்டீர்களே'' என்ற மொழிகள் ஜோஸ்யரின் வாயினின்று தயக்கத்துடன் வெளிப்புறப்பட்டது.

''ஜோஸ்யரே எது சொன்னலும் சொல்லும். ஆனல் பிறக்கப் போவது பெண் என்று மட்டும் சொல்லிவிடாதீர். அக்கா அப்படியே அயர்ந்து விடுவாள்'' என்று ரகு கேலியாகக் கூறியதை அவர் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை.

''சொல்வதை தயங்காமல் சொல்லுங்கள். தாத்தா நீங்களாக ஒன்றும் சொல்லவில்லையே. ரேகைக் காட்டுவதைத் தானே நீங்கள் விளக்கிக் கூறப் போகிறீர்கள். அதற்காக ஏன் உங்களைக் குறைப்படப் போகிறோம். நீங்கள் முன் கூட்டியே அறிவிப்பதின் மூலம் வரப் போகும் கெட்ட பலன்களை ஓரளவு தடுக்க முயற்சி செய்யலாமல்லவா'' ஒருவகை குழப்பத்தோடு புறப்பட்டன வார்த்தைகள்.

''அதை உத்தேசித்துத் தான் சொல்ல விரும்பினேன். நீ என் சொந்தக் குழந்தை மாதிரி. உனக்குண்டாகும் லாப நஷ்டத்தில் நானும் பங்கு கொள்வதைப் போன்று என் மனம் துடிக்கிறது.''

''சொல்வதை சீக்கிரம் சொல்லுங்கள் தாத்தா'' ஆத்திரம் ஆவலை முந்திக் கொண்டு புறப்பட்டது.

''கைரேகை சொல்லுகிற கணக்குப் படி பார்த்தால் உன் ஆருவது குழந்தை பிறப்பதற்குள் ஏதாவது உயிராபத்து....''

''நிறுத்தும் ஜோஸ்யரே'' என்று பதறிய குரலில் கத்தினள் அம்மா.

''இல்லையம்மா! அவர் சொல்லட்டும். அவராக ஒன்றும் சொல்லவில்லையே. நீங்களெல்லாம் சற்று பொறுமையாக இருங்கள். அவர் சொல்ல வந்ததை சொல்லி முடிக்கட்டும்'' என்று அவர்களை கையமர்த்தி விட்டு ஜோஸ்யரின் பக்கம் திரும்பினள்.

''தாத்தா உயிராபத்து என்ருல் எனக்குத்தானே...'' சோகம் ததும்ப வினவினள்.

''உனக்கொன்றுமில்லையம்மா.... குழந்தையின் தந்தைக்கு....''

''ஐயோ'' என்று அலறித் துடித்தாள். அவளது உள்ளமும் உடலும் பயத்தால் நடுங்கத் தொடங்கின. தன் மகளின் பரிதாப நிலையைக் கண்டு மனம் பொறுக்காத தாயார் ''பெரியவரே, ஏதோ பொழுது போக்காக கேட்க வந்தால் எதையெதையோ கூறி கர்ப்பிணிப் பெண்ணை கலங்க விடலாமா?'' என்று வெறுப்போடு பேசி அவரை வெளியே அனுப்ப முயன்ருள்.

''அப்படியானல் தாத்தா அந்தக் குழந்தையை உயிருடன் பிறக்காமல் அழித்து விட்டால்....'' தாயன்பையும் மீறிப் புறப்பட்டது பயம்.

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாமம்மா. ஏதோ எனக்குத் தெரிந்த பரிகாரம் ஒன்றைக் கூறுகிறேன், நம்பிக்கையோடு அதைச் செய்து வந்தால் அவருக்கு ஒன்றுமில்லை. நல்லபடியாக பிரவசமாகி ஆண் அரசைப் பெற்றெடுப்பீர்கள்.''

வரண்டுகிடந்த பூமியில் நீர் ஊற்றைக் கண்டவனின் நிலையை எய்தினள் ஆண் அரசு என்ற வார்த்தையைக் கேட்டதும்.

''பரிகாரம் என்ன செய்ய வேண்டுமென்பதை விளக்கிச் சொன்னல்....'' சாந்தா கேட்டாள்.

ஜோஸியர் ஏதோ கூறி முடித்தார். தன் பர்ஸிலிருந்து ஒரு

முழு ரூபாய் நாணயத்தை எடுத்து பயபக்தியுடன் நீட்டினுள் சாந்தா.

"பணம் இப்பொழுது தேவையில்லையம்மா! நாலைந்து மாதங்களுக்கப்பால் வருவேன். நான் சொல்லுகிறபடி நீ நடந்து உன் கணவருக்கோ உன் குழந்தைக்கோ ஒன்றுமில்லாமல் நன்ருயிருந்தால் அது சமயம் நீங்களாக விரும்பிக் கொடுப்பதை சந்தோஷத்தோடு ஏற்றுக் கொள்வேன்" என்று கூறிவிட்டு அங்கிருந்து எழுந்து போய்விட்டார்.

பெரியவர் கூறிச் சென்ற அனுஷ்டானங்களை சிறிதளவும் குன்ருமல் பயபக்தியுடன் செய்து முடித்து விட்டதில் மனதிற்கு பெரிதும் ஆறுதலாக இருந்தது என்ருலும் ஒவ்வொரு நாளைப் பொழுதையும் பெருந் திகிலுடன் போக்கி வந்தாள். எந்த நேரம் என்ன அதிர்ச்சி நேர்ந்து விடுமோ என்கிற அச்சத்துடனே நாட்களை ஓட்டி வந்தாள்.

மாதங்கள் ஓடிக் கழிந்தன. அவள் எதிர்பார்த்து பயந்தபடி எதுவுமேநேரவில்லை. வழியோடு போகிறவன் பேச்சைக் கேட்டு சாந்தா இடியுண்டு இறுமாந்திருந்தது அவள் அம்மாவுக்குபிடிக்கவில்லை. இப்படியும் ஒரு பெண் இருக்குமா என்று வருத்தப்பட்டுக் கொள்வாள். யார் என்ன சொன்னபோதிலும் அவள் மனம் நிலை கொள்ளவேயில்லை.

* * *

காலப்போக்கில் அந்தநினைவு கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கியது. இந்நிலையில் அவளும் உடல் நிலைகெட்டு ஆஸ்பத்திரியோடு வந்து விடவே ஜோஸியரையும் அவர் கூறிய மொழிகளையும் அடியோடு மறந்து விட்டாள்.

ஆஸ்பத்திரி வாழ்வு அவள் மனதில் பெரும் வேதனையைக் தந்திருந்தது. தன் கால் ரணத்தோடு இதர வியாதியஸ்தரின் வேதனைக் குரலையும் கேட்டு அவள் மனம் வேம்பாய்க் கசந்தது. மாலை நாலு மணி அடித்ததும் ஆஸ்பத்திரி அனுமதியின் பேரில் தன்னைக் காணவரும் தன் ஜனங்களைத் தேடி ஆவலுடன் எதிர் பார்த்திருப்பாள் தினமும். அன்றும் அப்படித்தான். ஆஸ்பத்திரி கதவு திறந்ததும் முதலில் வந்து விசாரித்துப் போய்விட்டார் கணவர். பின்னல் வந்தனர் உறவினரில் சிலரும், அந்தப் பக்கத்து குடித்தனக்காரர் இருவரும்.

அவள் நிலைக்கிரங்கி தன் பச்சாதாபத்தை வெளியிட்டு பறிமாறிக் கொண்டனர் வந்திருந்தவர்கள்.

தன் வேதனை தீராத வருத்தத்தோடு பிறரது அனுதாபமொழிகளும் சேர்ந்து கண்களில் நீரை வருவித்தது சாந்தாவுக்கு.

"வியாதியின் வேதனையோடு கண்ணீரும் சிந்தாதே அம்மா. ஏதோ உன் பொல்லாத காலம் உன்னை இப்படிப் படுத்துகிறது. இன்னும் சிறிது நாளில் குணமாகிவிடும்" என்று டாக்டர் கூறிவிட்டார். "இந்த மட்டும் உயிருக்கு வரவேண்டியது இம் மட்டோடு நின்றது. நீ அடிக்கடி பயந்து பலம்புவாயே. உன் கணவர் உயிருக்கு ஏதோ ஆபத்து இருக்கிறதென்று.... அந்தக் கிரகம்தான் உன்னை இப்படிப் படுக்கையில் தள்ளி விட்டது...." பக்கத்து வீட்டம்மா கூறிய அந்தச் சொல் அவள் உள்ளத்தில் புத்துணர்ச்சியைக் கிளப்பி விட்டிருந்தது.

"அந்தக் கிரகம் என்னைப் படுக்கையில் தள்ளிவிட்டது. அப்படியானல் இனிமேல் அவருக்கு ஒன்றுமில்லை......." இந்த நினைவு வியாதிவின் வேதனையை மறக்கச் செய்து உடம்பில் ஒருவகை தெம்பை ஊட்டியிருந்தது. அன்று மாலை தன்னைப் பார்க்க

வந்த தாயிடம் அதைச் சொல்லி ஆறுதல் கொண்டாள்.

"நீ செய்த பரிகாரம் உன்னையே தாவியது." என்றாள் அம்மா. ஆனால் அவளுக்கு அது தவறாகத் தோன்றவில்லை. அந்த நினைப்பில் தான் அவளுக்கு எத்தனை பெருமிதம்! தனக்கு எது வந்தாலும் பரவாயில்லை. ஆனால் தன் கணவனுக்கு ஒன்றுமில்லாமல் இருந்தால் போதும். இந்த நினைவில் தன்னை மறந்தாள். தன் வேதனையை மறந்தாள்.

தன்னை மறந்து சற்று கண்ணயர்ந்து விட்டாள். அவள் அயர்வைக் கலைக்க விரும்பியதைப் போன்று சற்றே தணிந்திருந்த குத்து வலி எங்கிருந்தோ கிளம்பி அவளை விழிப்படையச் செய்தது. திடுக்கிட்டுவிழித்தசாந்தா அரைமயக்கத்தில் அவள் மனதில் மடிந்த எண்ணங்களை மீண்டும் நினைத்துப் பார்த்துக் கொண்டாள்.

கணவருக்கு நேரவிருந்த உயிராபத்து தன்னை படுத்துவதன் மூலம் நிவர்த்தியாகி விடும் என்கிற திருப்தியில் உயிரைச் சுண்டி இழுக்கும் கால் வேதனையைக் கூட சற்று மறந்து நிம்மதி அடைந்தாள். அதோடு மட்டுமல்ல தன் உடல் துன்பத்தை மனமுவந்து ஏற்கவும் முன் வந்திருந்தாள்.

படுக்கையிலிருந்து எழுந்ததும் "ஐயோ அப்பா" என்று அலறும் சாந்தா பல்லைக் கடித்துக் கொண்டு மூச்சு விடாதிருந்ததைக் கண்ட நர்ஸ் அதிசயித்து நின்றாள். அவள் வியாதியில் குணம் காணத் தொடங்கியிருப்பதின் அறிகுறி என்று நினைத்து அப்பால் நகர்ந்து விட்டாள் நர்ஸ் ரீடா. ஆனால் அவள் மனதில் தோன்றியிருந்த திருப்தியின் காரணமே வியாதியின் வேதனையைத் தாங்கும் சக்தியை அளித்திருக்கிறதென்பதை நர்ஸ் எங்கே தெரிந்திருக்க முடியும்.

எழுதியவர் :
ஹேமு

★

"வெற்றி கண்ணப்பனுக்குத் தான். நீங்கள், நான் அருணாசலம் மூன்று பேரும் தோல்விதான் அடைந்தோம்……"

— கந்தப்ப பிள்ளை



வெற்றியும் தோல்வியும்!

அன்றைக்கு எப்படியாவது 'அல்லி' ஆசிரியர் அருணாசலத்தைப் பார்த்து விட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார் கந்தப்ப பிள்ளை. அவரைப் பார்க்க வேண்டிய காரியம் ஒன்று வெகுநாளாகவே பிள்ளையவர்களுக்கு இருந்தது. ஆனால் ஏதோ பலவித தொல்லைகளினால் அதைச் செய்ய முடியாமலிருந்தது.

அருணாசலம் அவரிடம் படித்தவர். பிள்ளையவர்களிடம் அவருக்கு அபார மதிப்பு உண்டு. கந்தப்ப பிள்ளையும் தன் மாணவனிடத்தில் அன்பும் பரிவும் வைத்திருந்தார். 'தம்பி', என்று தான் உரிமையோடு அருணாசலத்தை அழைப்பார். எனவே தான் சொன்னால் உடனே அருணாசலம் அதற்கு இணங்கி வேண்டியதைச் செய்வார் என்ற நம்பிக்கை இருந்தது பிள்ளையவர்களுக்கு.

விஷயம் வேறொன்றும் இல்லை. கோயமுத்தூரில் இருந்த அவருடைய தொழில் நண்பர் ஒருவரின் பிள்ளைக்கு ஒரு வேலை வேண்டியிருந்தது. பையன் எஸ். எஸ். எல். ஸி. படித்துத் தேறியிருந்தான். தமிழில் நல்ல தேர்ச்சியடைந்திருந்ததோடு அடிக்கடி பத்திரிகைகளில் கதை கட்டுரைகளும் எழுதி வந்தான். மேலே அவனைப்படிக்க வைக்க அவன் தகப்பனாருக்கு வசதி இருக்கவில்லை. ஆகவே பையன் எங்காவது ஒரு உத்தியோகத்தைத் தேடிக் கொண்டால் தேவலை என்று அவர் நினைத்தார்.

நினைத்ததைத் தான் கந்தப்ப பிள்ளையிடமும் சொன்னார். அப்போது அவன்—கண்ணப்பன்—தன் அபிலாஷையைப் பிள்ளையிடம் தெரிவித்துக் கொண்டான், "எந்த வேலையாயிருந்தாலும் எனக்கு செய்வதற்கு ஆட்சேபனை இல்லை மாமா. ஆனால் எனக்குப் பிடித்தது பத்திரிகைத் தொழில். ஏதாவது நல்ல பத்திரிகை ஒன்றில் நுழைத்துவிட்டு விட்டீர்களா

னால் சந்தோஷமாக இருக்கும்.'' என்று.

''வாஸ்தவம் தான். அவரவர்களுக்கு எந்தத் துறையில் நாட்டம் இருக்கிறதோ அந்தத் துறையில் தான் ஈடுபட வேண்டும். அப்பொழுது தான் வேலையில் ஒரு ஆர்வம் இருக்கும்; முன்னுக்கு வரவும் தோதாக இருக்கும். பட்டணத்தில் எல்லாப் பத்திரிகைக்காரனையும் எனக்குத் தெரியும். எங்காவது நுழைத்து விட்டு விடுகிறேன். நீ ஒன்றும் கவலைப்படாதே'' என்று அவனுக்கு ஆறுதல் கூறியிருந்தார்.

உண்மையில் 'அல்லி' ஆசிரியர் அருணாசலத்தைத் தவிர பத்திரிகை உலகில் வேறு யாரையும் கந்தப்ப பிள்ளைக்குத் தெரியாது. வெறும் படாடோபத்திற்காகத்தான் அப்படிச் சொன்னார். ஆனால் அப்படிச் சொல்லும் போது அருணாசலத்தை நம்பித்தான் சொன்னார்.

சென்னைக்கு வந்த பிறகு கண்ணப்பனுக்குக் கொடுத்த வாக்குறுதியை மறந்தேவிட்டார். சில நாட்கள் கழித்து கண்ணப்பனிடமிருந்து அவருக்கு ஒரு கடிதம் வந்ததும் தான் அதைப் பற்றிய நினைவு வந்தது. ஆனால் உடனே காரியத்தில் ஈடுபட அவருக்கு முடியாமல் இருந்தது. மனத்தில் மாத்திரம் நினைவு வைத்துக் கொண்டே இருந்தார். ஆகவே கோயமுத்தூரிலிருந்து மறுபடியும் 'ரிமைண்டர்' வருவதற்குள்ளாக ஏதாவது செய்துவிடவேண்டுமென்று எண்ணிக்கொண்டு மற்ற வேலைகளையெல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு 'அல்லி' காரியாலயத்திற்குக் கிளம்பினார்.

'என்ன தம்பி! சௌக்கியந்தானா?'' என்று கேட்டுக் கொண்டே அருணாசலத்தின் அறையில் சுவாதீனத்துடன் நுழைந்தார் பிள்ளை.

''வாங்க ஐயா, வாங்க வாங்க!'' என்று அருணாசலம் பக்தி சிரத்தையுடன் எழுந்து நின்று கை கூப்பி அவரை வரவேற்றார்.

உள்ளே சென்று நாற்காலியில் உட்காரும்போது தான் அந்த அறையில் இன்னொருவர் உட்கார்ந்திருப்பதைக் கவனித்தார் பிள்ளை. அவர் வேறு யாரும் அல்ல. பிள்ளையின் ஆப்த நண்பர் சிவசங்கரன், சென்னையில் பிரசித்தி பெற்ற விளம்பர ஏஜன்சி ஒன்றில் மானேஜராக வேலை பார்த்து வந்தார்.

''ஓஹோ, சிவசங்கரனா? நமஸ்காரம்'. என்று வணக்கம் தெரிவித்துக் கொண்டார்.

''நமஸ்காரம்.எங்கே காணவே முடிகிறதில்லையே!'' என்று சிவசங்கரன் குசலப்ரச்னம் செய்ய ஆரம்பித்தார்.

சிறிது நேரம் பொதுவான விஷயங்களைப் பற்றிப் பேசிவிட்டு கந்தப்ப பிள்ளை, தான் வந்த விஷயத்தைக் கூற முற்பட்டார்.

''இப்ப ஒரு காரியமாத்தான் உன்னைப்பார்க்க வந்தேன், தம்பி! 'இல்லை'ன்னு சொல்லாம நீ 'சரி'ங்கணும்.''

''சொல்லுங்க, கண்டிப்பாகச் செய்கிறேன். என்னிடம் கேட்பதற்கு இவ்வளவு தயக்கம் எதற்கு?''

'' ஒண்ணும் பிரமாதமில்லை. நமக்கு வேண்டிய பையன் ஒருத்தன் இருக்கான். எஸ். எஸ். எல். சி. பாஸ் பண்ணியிருக்கானும். கதை கிதை ஏதோ எழுதிகிட்டிருக்கான். உன் ஆபீஸில் அவனுக்கு, ஒரு வேலை போட்டுக் கொடுக்கணும்'' என்று கூறி அருணாசலத்தின் முகத்தை நோக்கினார்.

அருணாசலம் முகத்தில் அசடு வழிய பிள்ளையின் முகத்தையும்



போலீஸ்: என்னு ஸார் இவ்வளவு வேகமா ராங் சயிட் போறீங்க!

சைக்கிள்காரர்: ம், ம்,. வந்து பிரேக் இல்லீங்க!

சிவசங்கரன் முகத்தையும் பார்த்துச் சிரித்தார். சிவசங்கரனும் பிள்ளையைப் பார்த்து முறுவலித்தார்.

பிள்ளைக்கு ஒன்றும் புரியவில்லை.'' என்ன இரண்டு பேரும் சிரிக்கிறீர்களே!'' என்று கேட்டார்.

''மிஸ்டர் சிவசங்கரனும் அதே காரியமாகத்தான் வந்திருக்கிறார். இப்பொழுதுதான் அவர் கேட்டு வாய் மூடினார். அவருக்கு நான் பதில் சொல்லுவதற்குள் நீங்கள் உள்ளே வந்தீர்கள். நீங்களும் அதே விஷயம் பற்றிக் கேட்டதால் சிரிப்பு வந்தது'' என்று விளக்கினார் அருணசலம்.

பிள்ளையவர்களும் சிரித்துக் கொண்டே, ''அப்படியானல் இரண்டு பேருக்கும் சேர்த்து ஒரே பதிலாகச் சொல்லி விடேன் இப்ப'' என்றார்.

''அது தான் யோசிக்கிறேன். நீங்கள் இரண்டு பேரும் எனக்கு ரொம்ப வேண்டியவர்கள்...''

''வேலை காலி இருக்கிறதா இல்லையா?'' என்றார் பிள்ளை.

''இருக்கிறது. ஆனல் தற்போதைக்கு ஒருவனைத் தான் வைத்துக் கொள்ள முடியும். அதனல் தான் யோசிக்கிறேன்'' என்று இழுத்தார் அருணசலம்.

''இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது மிஸ்டர் அருணசலம். முதலில் கேட்டவன் நான். ஆகையால் நீங்கள் எனக்குத்தான் சலுகை காட்ட வேண்டும்'' என்றார் சிவசங்கரன்,

''நீங்கள் முதலில் கேட்டது வாஸ்தவம். ஆனல் அவர் உங்களுக்கு வாக்குக் கொடுத்து விடவில்லையே. ஆகையால் எனக்கும் சம உரிமை உண்டு'' என்று வாதாடினார் பிள்ளை.

அருணசலத்திற்கு நிலைமையை எப்படி சமாளிப்பதென்று தெரியவில்லை. பிள்ளையிடமோ அவருக்கு தேவதா விசுவாசம். அவர் மனத்தைப் புண்படுத்துவதென்பது இயலாத காரியம். அதற்காக சிவசங்கரனையும் பகைத்துக் கொள்ள முடியாது. அப்படிப் பகைத்துக் கொண்டால் ஆறு பக்கம் விளம்பரம் கோவிந்தா ஆகி விடும். இருவரையும் சமாதானப் படுத்த வேண்டுமென்றல் இரண்டு காலிஸ்தானங்கள் வேண்டும். இருப்பதோ ஒரு ஸ்தானம் தான். அநாவசியமாக இன்னொரு காலிஸ்தானத்தை சிருஷ்டி செய்வதென்பது பொருளாதார ரீதியாக சரியில்லை.

கடைசியில் சமாதான முறையில் அவர் சொன்னர்: ''நான் ஒன்று சொல்லுகிறேன். நீங்கள் இருவரும் தயவு செய்து என்னிடம் கோபித்துக் கொள்ளாமல் கேட்க வேண்டும். நீங்கள் இருவருமே பேசி ஒரு முடிவுக்கு வாருங்கள் உங்களுக்குள். அந்தப் பையனுக்கு நான் வேலை கொடுத்துவிடுகிறேன். அநேக

மாக இன்னும் நான்கைந்து மாதங்களில் இன்னொரு ஆள் தேவைப்படலாம். அப்போது கண்டிப்பாக மற்றவனுக்கு சான்ஸ் கொடுத்து விடலாம்''

பிள்ளை ஆத்திரத்தோடு குறுக்கிட்டார். ''அதற் கல்ல தம்பி, நான் சொல்லுவது. நான் அந்தப் பையனுக்கு உறுதி சொல்லி விட்டேன், இந்த மாதக் கடைசிக்குள் வேலை வாங்கித் தருவதாக. உனக்குத் தெரியும் நான் உன்னை விட்டால் வேறு யாரையும் கேட்க மாட்டே னென்பது. சிவசங்கரனுக்கென்ன! எவ்வளவோ பேரைத் தெரியும். வேறொரிடத்தில் சம்பாதித்துக் கொள்வது அவருக்குக் கஷ்டமல்ல. நீ இந்த வேலையை என் சிபாரிசுக்குத்தான் கொடுக்க வேண்டும்'' என்று கட கட வென்று பேசி முடித்தார்.

''பிள்ளை வாள். இது நியாயமில்லை. நீங்கள் பெரியவர், இப்படிப் பேசக் கூடாது. இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக் கொள்வதனால் ஒன்றும் கெட்டுக் போகாது. உங்களை விட முன்பே தான் கேட்டுவிட்டேன். ஆகையால் நியாயப்படி அருணாசலம் எனக்குத்தான் சலுகை காட்டவேண்டும்'' என்றார். சிறிது முறைப்பாகவே.

''ஏன் வீண் மனஸ்தாபம்? இப்பொழுது நான் ஒருவரையுமே வேலைக்கு வைத்துக் கொள்ளப் போவதில்லை. இன்னும் இரண்டே மாசம் பொறுத்துக் கொள்ளுங்கள். உங்கள் இரண்டு பேர் இஷ்டத்தையும் ஒரே சமயத்தில் பூர்த்தி செய்து விடுகிறேன்.'' என்று வினயமாக வேண்டிக் கொண்டார்.

''உன்னாலே நான் கெட்டேன், என்னாலே நீ கெட்டாய் என்ற கதையாயிற்று'' என்று சிவசங்கரனைப் பார்த்து உறுமினார் பிள்ளை.

நிலைமை மேலும் விரசமாகி விடாமல் அருணாசலம் அவ்விருவரையும் சமாதானப்படுத்தினார். தன் மேலும் அவர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது என்று வேண்டிக் கொண்டார்.

''சரி நான் வருகிறேன் தம்பி'' என்று எழுந்தார் பிள்ளை.

''நானும் போய்விட்டு வருகிறேன்'' என்று சிவசங்கரனும் விடை பெற்றுக் கொண்டு சென்றார்.

அருணாசலம் வியாகூலத்துடன் நாற்காலியில் சாய்ந்தார்.

மேற் கூறிய சம்பவம் நடந்து சுமார் ஒன்றரை மாதங்கள் இருக்கும். கந்தப்ப பிள்ளை மறுபடியும் அருணாசலத்தைப் பார்த்து விட்டு வரலாமென்று 'அல்லி' காரியாலயத்தில் நுழைந்தார்.

ஏனோ அருணாசலத்தின் முகம் களையிழந்தது ''ஐயா கோபித்துக் கொள்ளக்கூடாது; என்னவென்றால்...'' என்று ஆரம்பித்து ஏதோ கூற முற்பட்டவர் பிள்ளையின் செய்கையைக் கண்டு சொல்ல வந்ததை நிறுத்திக் கொண்டார்.

கையில் நான்கைந்து காலி ப்ரூப்களை எடுத்துக் கொண்டு அருணாசலத்தை நோக்கிவந்துக் கொண்டிருந்தவனைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார் பிள்ளை.

அவன் குனிந்த தலை நிமிராமல் வந்து கொண்டிருந்தான். அருகில் வந்து அவன் தலை நிமிர்ந்ததும், ''என்னடா இது, கண்ணப்பனடா?'' என்று ஆச்சரியத்துடன் கூவிவிட்டார் பிள்ளை.

கண்கள் மலர மரியாதையுடன் கண்ணப்பன், ''நமஸ்காரம் மாமா?'' என்றான்.

"என்னடாது? இங்கே எப்படி வந்தே?"

"இன்று காலையில் தான் மாமா, ஹோட்டலில் வந்திறங்கிக் கொண்டு இங்கே நேராக வந்து சேர்ந்து விட்டேன். வேலையை முடித்துக் கொண்டு சாயங்காலம் உங்களை வந்து பார்க்கலாம் என்றிருந்தேன்" என்ருன்.

"ஐயாவுக்கு இவனைத் தெரியுமா?" என்று வியப்புடன் கேட்டார் அருணுசலம்.

"நாசமாய்ப் போச்சு போ. இவனுக்கு வேலைக்காகத்தான் அன்று உன்னிடமும் சிவசங்கரனிடமும் சண்டை போட்டேன்!" என்ருர்.

"ஆச்சரியமாயிருக்கே".

"ஆமாம். நீ எப்படி இவனைப் பொறுக்கினே?"

"அவசரமாக ஒரு ஆள் தேவையாயிருந்தது. வேலை கேட்டு வந்திருந்த மனுக்களில் ஒன்றைப் பொறுக்கி எடுத்து ஆர்டர் அனுப்பினேன். இன்று காலையில் இவன் வந்து சேர்ந்தான். நல்ல வேளையாக உங்களிடமிருந்து தப்பினேன்" என்று கூறினுர்.

"நீ என்னிடம் சொன்னதல்லாமல் மனுவும் போட்டிருந்தாயா?" என்று கண்ணப்பனைக் கேட்டார் பிள்ளை.

"பல இடங்களில் போட்டிருந்தேன். அதே போல் இங்கும் ஒரு மனுப் போட்டிருந்தேன்" என்ருன்.

"இது நல்ல கூத்து!" என்று பிள்ளை ஆச்சரியப் பட்டுக் கொண்டிருந்தார்,

அப்பொழுது, "நான் உள்ளே வரலாமா?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்த சிவசங்கரனைக் கண்டதும் அருணுசலத்திற்கு நெஞ்சம் 'பக்' 'பக்' கென்று அடித்துக் கொண்டது. தான் யாரோ ஒருவனை வேலைக்கு அமர்த்திக் கொள்ளப் போக, அவன் கந்தப்பப் பிள்ளைக்குத் தெரிந்தவனுகப் போய் விட்டான். பிள்ளை கண்டிப்பாக இதை எடுத்துக் காட்டி சிவசங்கரனைக் குத்தலாகப் பேசுவார், சிவசங்கரன் தன்னைப்பற்றி என்ன நினைத்துக் கொள்ளுவார்? உண்மையை சொன்னுல் நம்புவாரா?' என்று கலங்கினுர்.

உள்ளே நுழைந்த சிவசங்கரன் ஒரு கணம் கண்ணப்பனை உற்றுப் பார்த்தார்.

கண்ணப்பன் அவரை நோக்கி முறுவலித்துக் கொண்டே, "நமஸ்காரம் சார்" என்ருன்.

"நீ வடிவேலுவின் மருமான் கண்ணப்பன் தானே?" என்ருர்.

"ஆமாம் சார்."

அருணுசலத்திற்கு உச்சியில் ஐஸ் வைத்தமாதிரி இருந்தது. "என்ன மிஸ்டர் சிவசங்கரன், கண்ணப்பனை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

"நன்ருகத் தெரியும். என் பாலிய சிநேகிதன் வடிவேலுவின் மருமான். இவனுக்குத் தான் நான் அன்று உங்களிடமும் பிள்ளையிடமும் சண்டை போட்டேன்" என்று கூறி பிள்ளையை நோக்கி மிடுக்காக, "நமஸ்காரம் பிள்ளைவாள்" என்ருர்.

"கடைசியில் வெற்றி எனக்குத்தான் பார்த்தீர்களா" என்ருர் வீராப்புடன்.

"மண்ணுங்கட்டி! வெற்றி கண்ணப்பனுக்குத்தான். நீங்கள், நான், அருணுசலம் மூன்று பேரும் தோல்வி தான் அடைந்தோம்." என்று பிள்ளை கூறியதும் சிவசங்கரன் முகத்தில் அசட்டு விழியும் கேள்விக் குறியும் தோன்றின.

சென்ற இதழ் தொடர்ச்சி ;

கே. ஆர். கௌஸல்யா

கானல் நீர்...?

கைப்பிடித்து மாலையிட்ட காதல் மனைவி தன்னுடன் வந்து வாழத் தயங்குவதன்காரணம் என்ன என்று குழம்பிக் கொண்டிருந்த ஸ்ரீதரனை வனஜாவின் கடிதம் திகைக்க வைத்து விடுகிறது. கடிதத்திலிருந்த அந்த மர்மம் ?

வனஜாவின் கடிதம் இதுதான் ;

நமஸ்காரம்.

என்னுடைய கடிதம் தங்கள் கைக்குக் கிடைத்தவுடனேயே மறுபடியும் நான் 'இப்போது வரவில்லை' என்பதற்கு ஏதோ சாக்குப் போக்குச் சொல்லப் போகிறேன்; இல்லற வாழ்க்கையின் இன்பங்களை நுகரத் துடித்துக் கொண்டிருக்கும் தங்களுக்கு மீண்டும் ஏமாற்றம் என்று தான் நினைப்பீர்கள். ஆனால் இந்தக் கடிதமும் - ஒரு வகையில் தங்களுக்குக் கனவில் கூட நினைத்திராத வகையில்ஒரு பெருத்த ஏமாற்றத்தை யளிப்பதுதான். என்றாலும் கூட முள்ளை முள்ளால் வாங்குவதைப் போல், இதுகாறும் தாங்கள் என்னால் அனுபவித்து வந்த ஏமாற்றங்களி லிருந்து தங்களுக்கு விடுதலையை அளிக்கும் ஒரு ஏமாற்றம்! சுற்றி வளைப்பானேன் !

தங்கள் திருக்கரத்தால் புனிதமான திருமாங்கல்யத்தைக் கட்டிக் கொண்டது ஒன்றைத் தவிர மற்றபடி தங்கள் மனைவி என்ற முறையில் தங்களுடன் இல்லற வாழ்க்கையைத் தொடங்கி வேறு எவ்வித இன்பத்தையும் அடையக் கொடுத்து வைக்காத —அருகதையற்ற துர்பாக்கியசாலி நான்.

என்னுடைய பதினாலாவது வயசு தொடங்கும்போது திடீரென நான் ஒரு புதுமையான பிணிக்கு இலக்காக நேர்ந்தது. வெகு சாதாரணமாக இதை எண்ணி நானும் பெற்றோரும் மிக அலட்சியமாகவே இருந்து வந்தோம். நாளடைவில் பிணியின் நிலை பயங்கரமான பாதையில் செல்லவே நாங்கள் எல்லோரும் திகிலடைந்து விட்டோம்.

என் தந்தையின் நெருங்கிய நண்பர் ஜெகதீசன் என்பவர் ஒரு பிரபல டாக்டர். எங்கள் குடும்பத்துடன் நெருங்கிய பழக்கமுள்ளவர். நான் அவரை 'சித்தப்பா' என்று உரிமையுடன் அழைப்பது வழக்கம். எங்கள் குடும்பத்தின் கஷ்ட நஷ்டங்களில் எப்பொழுதும் அவர் தயங்காது பங்கு கொள்வார். என்னுடைய உடல் நிலையை அறிந்ததும் அவர் ஓடோடியும் வந்து கவலையுடன் என்னைப் பரிசோதனை செய்தார். எனக்கு வந்திருப்பது தீர்க்க முடியாத ஒருசருமநோய் என்றும், சில வருடங்களில் அது என் உடலெங்கும் பரவி என் அழகைக் கெடுத்து விகார தோற்றத்தை உண்டாக்கி விடலாம் என்றும் தான் கருதுவதாக டாக்டர் கூறிவிட்டு மிகவும் சங்கடப்பட்டார்.

என்னுடைய நிலைமையைப் பற்றி உலகத்தார் அறிந்தால், என்னுடன் கூடப் பிறந்த சகோதரிகளையும் பெண் கொள்ள அஞ்சி, என்னால் அவர்களும் விவாகமாகாமலே நித்தியக் கன்னிகளாய் நின்று விடுவார்களோ என்ற அச்சத்தினால் என் நிலைமையைப் பற்றியே மறைத்து வைத்து விடுவது

என்று என் பெற்ருேர் தீர்மானித்தனர். விஷயம் பரவி அம்பலமாவதற்குள் என் மூத்த சகோதரியின் விவாகத்தை முடித்து விடவேண்டும் என்ற எண்ணத்தில் என் தந்தைவெகு மும்முரமாய் அலைந்து தேடி அவள் விவாகத்தை முடித்து விட்டார். எனக்கு அடுத்தபடியாக ஒரு பெண் பிறந்தில்லாமலிருந்தால் எவ்வளவோ நன்ருக இருக்கும்? இப்போது எனக்கு விவாக மாகாமல் என் தங்கைக்கு எப்படி வரன் தேடுவது' என்று என் தந்தை எனக்கு வரன் தேடும் படலத்தில் இறங்கினர். அழகும் அறிவும் ஒருங்கே நிரம்பப்பெற்ற என்னை நீங்கள் வந்து பார்த்த போது, நியாயப்படி உவகையும் பெருமையும் அடைந்து பூரிக்க வேண்டிய நான் உள்ளுக்குள்ளேயே குமுறிய ழுதேன்.

விவாக மாகித் தங்களுடன் குடித்தனம் செய்ய ஆரம்பித்து விட்டால் அதற்குப் பிறகும் என்னுடைய நிலையைப் பற்றிய ரகசியத்தை மூடிவைக்க முடியாது. நாளடைவில் என் தந்தை உங்களை ஏங்கி வாடவைத்து என்னைக் கொண்டு விடாமல் ஏதேதோ சாக்குப் போக்குகள் சொல்லித் தட்டிக்கழித்து என் தங்கைக்கு வரன் தேடும் படலத்தில் மும்முரமாக இறங்கினர். சிறுவயதிலிருந்து என்னுடன் சொந்த சகோதரன் போல் பழகிவந்த என் அத்தான் சந்துரு அடிக்கடி என்னை வந்து பார்த்துப் பேசிவிட்டுப் போவான். மற்றபடி அவன் கள்ளங் கபடமற்றவன். அவனுக்கு என்ன தெரியும் என் மன வியாதியைப்பற்றி! அவனும் நானும் களங்கமற்ற தூய உள்ளத்தோடு பழகியதைப் பற்றி ஊரார் கூறிய எவ்வளவோ வம்புப் பேச்சுக்களைக் கூட நாங்கள் காதில் போட்டுக்கொள்ளவில்லை.

நல்ல வேளையாக என் தங்கைக்கும் வரன் கிடைத்து விவாகமும் ஆகிவிட்டது. அவளைப் புக்ககத்தில் கொண்டுவிட என் பெற்ருேர் பம்பாய் சென்றிருக்கின்றனர். இன்றிரவு திரும்பப் போகின்றனர். அவர்கள் வருவதற்குள், அவர்களுக்கும், என் கைப்பிடித்த கணவராகிய தங்களுக்கும் எந்தவிதமான தொல்லையும் நேராத வகையில் நான் என் ஆயுளை முடித்துக் கொள்ள வழிதேடிக் கொண்டுவிட்டேன். 'நம் வாழ்க்கை அஸ்தமித்துவிட்டது' என்று உள்ளுக்குள் இவ்வளவு பெரிய மனக் குறையை வைத்துக் கொண்டிருந்தாலும், அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் என் சகோதரிகளுக்கு விவாகமாகி அவர்கள் வாழ்க்கையிலாவது இன்பம் பொங்கி நிற்கட்டும் என்று வெளியில் மிகவும் சந்தோஷமாக உள்ளவள் போல் என்னைப் பற்றி எந்தவிதமான சந்தேகமும் நேராதவகையில் நடித்து என்னைப் பெற்று வளர்த்துப் பெரியவளாக்கிய என் பெற்ருேர்களுக்கு அவர்கள் பெண் என்ற முறையில் நான் செய்ய வேண்டிய கடமையைச் செய்துவிட்டேன்.

வெப்ப மிகுதியால் தூரத்தே தெரியும் கானல் நீரைக் கண்டு, குடிப்பதற்கு அருமையான தண்ணீர் ஓடும் சுனை என்று எண்ணி ஏமாந்த ஒருவன், அந்த நம்பிக்கையில், நடக்க நடக்க வழி மாளாமல் கால் கடுப்பதையும் பொறுத்துக் கொண்டு, அருகே நெருங்க நெருங்க தூர விலகிக் கொண்டே செல்லும் கானல் நீரை நோக்கி நடந்து கொண்டே இருப்பதைப்போல், நாங்கள் ஒவ்வொரு முறையும், ஒவ்வொரு காரணம் கூறி, இப்போது - அப்போது என்று தவணை கேட்டுத் தட்டிக்கழித்த போதும், என்னுடைய— என் பெற்ருேருடைய— சூழ்ச்சியையும் எண்ணத்தையும் அறியா

மல், அந்தத் தவணை கழிந்த பிறகு நான் வந்து விடுவேன் என்று மனத்தைத் தேற்றிக் கொண்டு, பொறுத்துப் பொறுத்துப் பார்த்து நீங்கள் எவ்வளவுகாலம் உங்கள் வாழ்க்கையை— இளமையைக்காட்டில் காய்ந்த நிலாவாக ஆக்கிக் கொள்ளும் படியாகி விட்டது. அதற்காக என்னை மனப்பூர்வமாக மன்னித்து விடுங்கள்.

பதினெட்டு வயது கூட நிரம்பாத—பருவத்தின் எல்லைக் கோட்டிலே நின்று கொண்டிருக்கும் இளம் பெண்ணான நான்—நியாயப்படி இந்த வயதில் என்னேடொத்த இளம் பெண்களைப் போல் எதிர்கால இன்பங்களைப் பற்றிக் கனவு கண்டு பூரிக்க வேண்டிய நான், பூர்வ ஜன்மத்தில் செய்த மிதமிஞ்சிய பாபத்தின் காரணமாகக் கை நிறையக் காசு சம்பாதிக்கும் கண் நிறைந்த குணசாலியான தங்களை வாழ்க்கைத் துணைவராக அடைந்தும் தங்களுடன் இல்லற வாழ்க்கையைத் தொடக்கி இன்பம் பெற கொடுத்துவைக்கவில்லை.

தன்னை வேரிலிருந்து ஒரு விஷப்புழு அரிக்கத் தொடங்கி விட்டதையறிந்தும், இன்னும் சில நாட்களில் பட்டுப் போகப் போகிறேம் என்பதை உணர்ந்தும், பட்டுப்போக விருக்கும் முல்லைக்கொடி ஒன்று அதுவரை யாவது அலைந்து தத்தளிக்காமலிருந்து ஆறுதல் பெறுவோமே என்று ஒரு பற்றுக் கொம்பை நாடி சுற்றிக் கொள்ளுவதைப் போல், என் வாழ்வு அஸ்தமித்து விட்டது என்று தெரிந்தும் கூட தற்காலிகமாகவாவது தங்கள் ஆசைப் பிரவாகமெடுத்துப் பொங்கி வழியும் கடிதங்களைப் படித்து இன்பம் பெற சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறதே என்று நான் மகிழ்ச்சியடைந்தேன்.

இவ்வளவு சிறுவயதிலேயே என் இளமையின் இன்ப ஜோதி அணைந்து விட்டது; வாழ்வின் வஸந்தம் பறந்து மறைந்து விட்டது. புத்தி தெரிந்து உலகம் என்பது இன்னதென்று அறியும் வயதிலிருந்து இன்னும் எவ்வளவோ காலம் இந்த உலகில் வாழ்ந்து எத்தனையோ சுகங்களை அடைய வேண்டும் என்றெல்லாம் எதிர் பார்த்து ஏங்கிய பெண் உள்ளம் இப்போது கசப்புடன் அதிலிருந்து விடுதலை பெறவேண்டியிருக்கிறது. இதைத்தான் விதியின் பயனுய் மனிதனுக்கு ஏற்படும்துன்பக்கனல் என்று சொல்லுவது.

நான் பிறவி எடுத்ததன் பயனை நிறைவேற்ற நான் செய்யவேண்டிய இன்னுமொரு முக்கியமான காரியம் இருக்கிறது. என்னுடைய கணவர் என்று என் கைப்பிடித்து அதன் மூலம் என் சகோதரிகளுக்கும் வாழ்வளித்த தங்களுக்குத் தங்கள் மனைவி என்ற முறையில் நான் செய்ய வேண்டிய மற்றெரு கடமை இருக்கிறது.

இந்த துர்பாக்கிய சாலியைக் கைப் பிடித்ததன் காரணமாக இவ்வளவு நாட்களாக உங்கள் வாழ்க்கையை நீங்கள் வரண்ட பாலைவனமாகப் பாழ்படுத்திக் கொண்டது போதும். இனியாவது என்னை மறந்துவிட்டு அழகும், அந்தஸ்தும், அறிவும் நிறைந்த ஒரு இளம் பெண்ணை உங்கள் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டு என்னுல் பெறநினைத்த இன்பங்களை அவள் மூலம் அடைந்து மகிழ்ச்சியடையுங்கள்!

இறுதியாக ஒரே ஒருவிஷயம். அன்று என்னை நீங்கள் கடைசியாக வந்து பார்த்து விட்டுச் சென்றபோது தெருவிலிறங்கியவுடனே விளக்குகளெல்லாம் அணைந்து ஒருகணம் கரிய இருளைப் பாய்ச்சிவிட்டுப் பிறகு மீண்டும் சுடர்விட்டன அல்லவா? அந்த சகுனத்தின் பலனை நீங்கள் அப்போது எப்படிக் கற்பனை செய்து பார்த்தீர்

களோ! ஆனல் அதன் விளைவு இது தான் என்று நான் அப்போதே ஊகித்துக் கொண்டு விட்டேன். என் மீது தாங்கள் எவ்வளவு பாசமும், காதலும் வைத்திருந்தீர்கள் என்பது எனக்குத் தெரியும். அதனல் முதன் முதலில் இந்தக் கடிதத்தைப் படித்து முடிந்தவுடன் சிறிது நேரம் வரை—சில காலம் வரை—உங்களுக்கு உலகமே இருண்டு விட்டதைப் போன்றுதான் தோன்றும். ஆனல் விரைவிலேயே மனத்தைச் சமாதானப் படுத்திக் கொண்டு வேறு ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு விட்டீர்களானல், மறுபடியும் பளீரென்று தெரு விளக்குகளெல்லாம் பிரகாசித்து ஒளியைப்பரப்பியது போல், வரப் போகும் மனைவியால் உங்கள் வாழ்வும் புத்தொளி பெற்று, தற்போதுள்ள துயரம், விளக்குகள் மீண்டும் எரியும் வரை சில கண நேரம் தற்காலிகமாக நீடித்திருந்த இருளைப் போல் மறைந்து விடும். இவ்வளவு காலமாக நீங்கள் அனுபவித்து வந்த ஏக்கத்திற்கும் ஒரு முடிவு ஏற்பட்டு விடும்.

நீங்கள் விரைவிலேயே மறுமணம் செய்து கொண்டு உங்கள் வாழ்வின் ஜோதி சுடர் விட வேண்டும்; உங்களுடைய வாழ்க்கை வீணை இன்ப சுருதி கூட்ட வேண்டும். அது தான் என்னுடைய மனப் பூர்வமான பிரார்த்தனை! ஆசை!.... கடைசி வேண்டுகோள். என் இதயத்துக்குச் சாந்தியளிக்கும் காரியம்.

அபலை வனஜா.

கடிதத்தைப் படித்து முடித்த ஸ்ரீதரன் பைத்தியம் பிடித்தவன் போல் "வனஜா!...." என்று உரத்த குரலில் கத்தினன். அவன் கையில் இருந்த கடிதம் கீழே நழுவி வீழ்ந்தது. தன் கரங்களில் முகத்தைப் பதித்துக் கொண்டு விம்மி விம்மியழுதான் அவன்.

அந்தமான் தீவுகள்

போளூரான்

அந்தமான் இந்தியா, பர்மா, தூரக்கிழக்குப் பிரதேசங்கள் ஆகிய நாடுகளின் வர்த்தகத் துறைப் பாதைகளுக்கிடையிலிருக்கிறது. அந்தமானில் வசித்து வந்த மக்களளித்த வரவேற்பின் காரணமாக கப்பல் மாலுமிகளுக்கும் இதரர்களுக்கும் அது சிறந்த இடமாக ஆரம்ப முதல் கருதப்படுகிறது.

அந்தமான் தீவு வடக்கு தெற்காக 220 மைல் தூரமும், சராசரி 15 மைல் அகலமும் உடையது. பொதுவாக அந்தமான் கரடு முரடானது. பல குன்றுகளும் குறுகிய பள்ளத் தாக்குகளும் உடையது. அந்தமான் தீவுகளை வடக்கு, மத்திய, தெற்கு என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

பிரதானமாக உள்ள தீவினின்றும் பிரிந்துள்ள சிறிய அந்தமான் தீவு 32 மைல் தொலைவிலுள்ளது. அது தன்னிச்சையாகவே எதையும் நடத்துகிறது. அந்தமான் தீவுகள் மொத்தம் 204 தீவுகளைத் தன்னகத்தே கொண்டது. இவை யனைத்தும் இயற்கை வனப்புமிக்கவை. தீவின் உடைப்பு நிறைந்த கடற்கரைப் பகுதி மிகவும் கவர்ச்சிகரமாகயிருக்கிறது.

இந்தத் தீவுகள் நடத்தி வந்த சுதந்திர வாழ்க்கைக்கு 1788-ல் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அப்பொழுது இந்திய வைசிராயாக இருந்த லார்டு கார்ன்வாலிஸ் என்பவர் லெப்டினெண்ட் பிளர் என்பார் தலைமையில் அந்தமான் தீவுகள் மீது போரிடுமாறு ஒரு படையை அனுப்பிவைத்தார்.

அந்தப் படையினர் இறங்கிய தீவுக்கு சாத்தம் என்று பெயர். வில்லியம் பிட் (எர்ல் ஆப் சாத்தம்) என்பவர் நினைவாக இப்பெரிடப்பட்டது.

கார்ன்வாலிஸ் துறை முகம் என்ற பெயர் வேறு ஒரு துறைமுகத்துக்கு இடப்பட்டது. இங்கேயிருந்த பழைய துறைமுகத்துக்கு போர்ட்பிளேர் என்று பெயர். போர்ட்பிளேர் இத்தீவுகளின் தலைநகரமாக இன்று விளங்குகிறது.

பூலோக நரகமாக இருந்த இந்தத் தீவுகளை சுவர்க்கமாக்க இந்திய அரசாங்கம் இப்பொழுது முனைந்திருக்கிறது. இத்தீவுகள் பற்றிய சில விவரங்களை திரு. போளூரான் மேலே தருகிறார்.

போர்ட்பிளேர் நகர் பிறகு முக்யமான அரசியல் முக்யத்துவம் வாய்ந்த நகரமாகி விட்டது. 1857-ல் இந்தியாவில் சிப்பாய் கலகத்தில் ஈடுபட்ட தேசபக்தர்களை அடைத்துவைக்கப்படுவதற்கான முகாமாக மாறிற்று.

இந்தத் தீவில் தங்கியிருந்து ஆட்சி நடத்திய முக்யமான ஐரோப்பியர் டாக்டர் வாக்கர் என்பவராகும். இவரது கொடுங் கோன்மையான ஆட்சி விவரிக்க முடியாததாகும். இவரது அட்டுழியம் காரணமாகவே 1872ல் ஏர்ல் மேயோ என்ற இந்திய வைஸ்ராய் போர்ட்பிளேருக்கு விஜயம் செய்த பொழுது அவர் கொல்லப்பட்டார். இதன் காரணமாக நீண்ட காலமாக எதிர் பார்க்கப்பட்டு வந்த பல சிறை சீர்திருத்தங்கள் உடனடியாக ஏற்பட்டன.

இந்தியாவிலிருந்தும் பர்மாவிலிருந்தும் தீவாந்தர சிட்சையடைந்தவர்களுக்கு இங்குள்ள சிறைச்சாலைகளில் இடமளிக்கப்பட்டு வந்தது. பிறகு இது நின்றுவிட்டது.

30 ஆண்டுகள் கழிந்து விட்டாலும் போர்ட்பிளேரின் கொடுஞ் செயல்களை எண்ணும்பொழுதெல்லாம் மனதிற்குத் துன்பத்தையே தருகின்றது.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜப்பானியர்கள் இந்தத்தீவை 23- 3- 42ல் கைப்பற்றிக் கொண்டார்கள். அவர்களது குறுகிய காலஆட்சி மிகக் கடுமையான எதிர்ப்புக்கிடையே பயங்கரமாக நடைபெற்றிருக்கிறது.

யார் யாரை உபயோகமற்றவர்கள் எனக்கண்டனரோ, எவரெவர்களை சந்தேகித்தனரோ அவர்களை எல்லாம் தீர்த்துக் கட்டிவிட்டனர் ஜப்பானியர்கள். அந்தமான் தீவை விட்டு 7—10—1945-ல் ஜப்பானியர் வெளியேறினர். இவர்களது கொடுங்கோன்மையாட்சி மட்டுமன்றி இவர்களால் விட்டுச் செல்லப்பட்ட எல்லா ராணுவ தளவாடங்களும் கடலில் எறியப்பட்டன.

இங்குள்ள மக்கள் ஜார்வாஸ்' ஓங்கஸ் என்றும் அழைக்கப்படுவர். இவர்கள் காடுகளில் வசிக்கின்றனர். வெளியாட்களைப் பார்த்ததும் தங்கள் வசமுள்ள அம்பாலும் வில்லாலும் அவர்களைக் கொல்லுகின்றனர். இன்றைக்கும் இந்நிகழ்ச்சி நடைபெற்ற வண்ணமேயிருக்கிறது. இதைத் தடுக்க எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

ஜார்வாக்கள் மிகவும் சிறியவர்கள். அடர்ந்த மயிருள்ளவர்கள். கருப்பு நிறமுள்ளவர்கள். இவர்கள் பயிரிடுவதில்லை. பயிரிடுவதை விட உணவினை சேகரிப்பதில் தான் அதிகம் ஈடுபடுகின்றனர்.

இவர்கள் அதிகமாக சர்க்கரை, உப்பு, புகையிலையை விரும்புகின்றனர். பெரும்பாலும் இலை, பட்டைகள், கொட்டைகள், மீன் முதலியவற்றை உண்கின்றனர்.

வட அந்தமானுகிய மாயாபந்தரில் இந்தியாவிலிருந்து சென்ற குற்றபரம்பரையினரின் சந்ததியாரும் பர்மாவிலிருந்து வந்த குற்றப் பரம்பரையினரின் சந்ததியாரும் உள்ளனர்.

1922-ல் நடைபெற்ற மலபார் மாப்பிள்ளைக் கலகம் காரணமாய் அந்தமானுக்கு அனுப்பப்பட்ட பல மாப்பிள்ளைமார் அங்கே நெற்பயிர் விளைவிக்க தொடங்கினர். அவர்கள் தாங்கள் இந்தியா செல்ல வேண்டும் என்பதையே மறந்து நாட்டின் வளத்துக்குப் பாடுபட்டனர்.



பிரசித்திபெற்ற அந்தமான் சிறைச்சாலையின் முன்புறத் தோற்றம்

மலபார், கிழக்கு வங்கம், போன்ற பகுதிகளிலிருந்து அஸ்ஸாம் வரும் மக்களுக்கு அந்தமான் சிறந்த விவசாய பூமியாயிருக்கிறது.

அந்தமான் அழகிய காடுகள் அடர்ந்த இடம். இக்காடுகளால் பெருத்த வருவாய் கிடைக்கிறது. அந்தமான் தீவு மொத்தம் 2500 சதுர மைல் விஸ்தீரணமுள்ளது. இதில் 90 சதவீகிதம் காடு அடங்கியிருக்கிறது.

இங்கு விளையும் பூந்தேக்கு, பிளைவுட் போன்றவைகள் கல்கத்தா, சென்னை போன்ற பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றன.

பாதௌக் எனப்படும் அந்தமான் தேக்கு மிகவும் கடினமான மரமாகும். இங்கு விளையும் அழகிய தேக்குமரங்களுக்கு இந்திய நாட்டிலும் வெளி நாட்டிலும் நல்ல கிராக்கியிருக்கிறது.

அந்தமான் காடுகளிலிருந்து ஆண்டுதோறும் 1 லட்சம் டன் தேக்கு விற்பனைக்குத் தயாராகிறது.

அந்தமான் தீவுகளுக்குள் போக்குவரத்து சரியாகஇல்லை.

போர்ட்பிளேர், சென்னையிலிருந்து 750 மைலில் உள்ளது. கல்கத்தாவிலிருந்து 800 மைல். பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை கப்பல் பயணம் உண்டு. கப்பல் போர்ட்பிளேருக்குள் செல்லமட்டும் 3 தினங்கள் ஆகின்றன.

போர்ட்பிளேருக்கு அருகேயுள்ளது ரங்கூன் துறைமுகமாகும். இது 350 மைல் தொலைவிலுள்ளது. உள்நாட்டுக் கடலில் சிறிய படகுகள் நடமாடுகின்றன.

இங்கு ஆகாயவிமான சர்விசுக்கு வசதியில்லை. ஜப்பானியர் இதற்கான வசதிகள் செய்து விட்டுப் போனாலும் அதனை உபயோகிப்பதில்லை.

இதைச் சுற்றிப் பார்க்க வருபவர்களுக்கு ஏற்ற வசதிகள் சரிவர செய்து தரப்படுவதில்லை.

இங்கு நல்ல குடிதண்ணீர் வசதியில்லை. காட்டு மிருகங்களும் அதிகமில்லை. பன்றி, முதலைகள் தவிர இதர மிருகங்கள் அதிகமாகத் தென் படுவதில்லை.

புள்ளி மான்கள் வளருவதற்காக விடப்பட்டன. அவை இன்று பலமாகப் பெருகி

நீரிழிவு

ஏழு நாட்களில்

குணமாகும்

சிறு நீரில் அதிக சர்க்கரை இருப்பின் நீரிழிவு (**DIABETES**) என்று சொல்லப்படும் இப் பயங்கர வியாதியுள்ள நோயாளி நாளுக்கு நாள் தன் முடிவு நெருங்குவதைக் காண்கிருன். இதை நிவர்த்திக்க டாக்டர்கள் இன்ஸுலின் இன்ஜக்ஷன் ஒன்றைத்தான் கண்டு பிடித்தார்கள். இதைக் குத்திக் கொள்வதால் பூரண குணம் ஏற்படுவதில்லை; இன்ஜக்ஷன் மருந்து உள்ளவரை சர்க்கரை தற்காலிகமாக மறைந்து விடுகிறது.

அபரிமிதமான தாகம், பசி, அடிக்கடி சிறு நீர் சர்க்கரையுடன் போதல், எரிச்சல் ஆகியவைகள் இந்த வியாதியின் முக்கிய அறிகுறிகள். வியாதி முற்ற ராஜப் பிளவை கட்டிகள் சாலேஸ்வரம் இதர கொடிய வியாதிகள் ஏற்படும். வீனஸ் சார்ம் நவீன விஞ்ஞான அதிசயமாகும். அதை உபயோகித்ததால் பலர் மரணத்தினின்று தப்பியுள்ளனர்.

வீனஸ் சார்ம் உபயோகித்த 2-வது அல்லது 3-வது நாளில் சிறு நீரில் சர்க்கரை குறைந்து அடிக்கடி போகும் சிறு நீரும் குறைகிறது. 3-வது அல்லது 4-வது நாளில் வியாதி பாதிக்குமேல் குணமடையும். இந்த மருந்துக்கு பத்தியம் கிடையாது; இன்ஜக்ஷன் கிடையாது. நன்கு விளக்கும் **இலவச ஆங்கில புத்தகத்திற்கு எழுதிக் கேளுங்கள்.**

50 வில்லைகள் கொண்ட
புட்டி 1-க்கு ரூ. 6-12-0

[பாக்கிங் தபாற் செலவும் இனம்]

வீனஸ் ரிஸர்ச் லாபரட்டரி (U. M.)
தபால் பெட்டி நெ. 587, கல்கத்தா.

பெருத்த சேதத்தை விளைவிக்கும் அளவு வளர்ந்துவிட்டன.

காடுகளிலிருந்து மரங்களைக் கொண்டுவர யானைகள் உபயோகிக்கப் படுகின்றன.

கடற்கரையில் அழகிய நத்தை யோடுகளும் விதவிதமான பவழங்களும் நிறைய கிடைக்கின்றன.

1947 சுதந்திரத்துக்குப் பிறகு இத்தீவுகள் இந்தியா அரசாங்க நிர்வாகத்துக்கு, குறிப்பாக கைதிகளாக யிருந்து ஆளும் வர்க்கத்தாராக அமர்ந்துள்ளக் கட்சியாரிடம் வந்துள்ளது.

இப்போது இதனை மேலும் பழைய நோக்குடன் விளங்காமல் புதிய முறையில் மாற்றியமைக்கத் திட்டமிட்டு அதற்கான வேலைகள் தீவிரமாக நடைபெறுகின்றன.

இத்தீவை நல்ல செழிப்பு நாடாக, பிற நாட்டினர் வந்து பார்த்து இதன் அழகைப் பருக விரும்பும் வண்ணமமைக்க முயற்சிகள் நடைபெறுகின்றன.

இதனடிப்படையில் இந்தியாவில் உள்ள வேலையற்ற விவசாயக் குடும்பத்தினரை அந்தமானில் குடியேறச் செய்து அவர்களுக்குத் தலா பத்து ஏக்கர் நிலமும் ஆரம்பச் செலவுக்கென உடனடியாக ரூபாய் இரண்டாயிரமும், இதைத் தவிர விவசாய அபிவிருத்திக்கென மேலும் தொகையை அளிக்க முன் வந்துள்ளனர்.

சென்ற மாதத்தில் திருவாங்கூர் பகுதியிலிருந்து சில குடும்பங்களை யனுப்ப முயற்சி செய்யப்பட்டது.

அந்தமான் சிர்திருத்தத்துக்கு என்று தனி இலாகாவும் அதிகாரியும் மத்திய சர்க்காரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒளி பிறந்தது

எஸ்.டி.வீரராகவன்

அவன் ந்யூஸ் பேப்பர் விற்கும் பையன். எங்கள் வீட்டுக்கு அவன்தான் பத்திரிகைகளைக் கொண்டு வந்து போடுவான். அவனை முதன் முதலில் பார்த்ததிலிருந்தே எனக்கு அவன் மீது ஒருவிதமான பரிதாபம் ஏற்பட்டுவிட்டது. அதனால்தான் எங்கள் வீட்டுக்குப் பத்திரிகைகளைக் கொண்டு வந்து போட அவனையே ஏற்பாடு செய்து கொண்டேன். அவ்வப்போது அவனுக்கு ஓரணா, இரண்டணா கொடுப்பேன். சிறிது சிறிதாக அவனைப் பற்றிய விவரங்களை அவன் வாயிலாகவே தெரிந்து கொண்டேன்.

அவன் பெயர் கபாலி. அவன் ஒரு பள்ளிக் கூடத்தில் எட்டாவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான். அவனுக்குத் தாய் தந்தை கிடையாது. ஐந்து வருஷங்களுக்குமுன் இறந்து விட்டார்களாம். உலகில் இருந்ததெல்லாம் ஒரு பாட்டியும் ஒரு தம்பியும் தான். அந்தப் பாட்டிதான் அவனைக் காப்பாற்றி வந்தது. அவனைப் பற்றி விவரம் கேட்டபோது அவன் சிறிது தயக்கத்துடன் கூலி வேலை செய்கிறாள் என்று தெரிவித்தான்.

சீக்கிரத்திலேயே எனக்கு அந்தப் பையனைப் பற்றி திகைப்பளிக்கும் ஒரு விவரமும் கிடைத்தது. ஒரு நாள் நான் தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்தபோது இன்னொரு பையன் கபாலியுடன் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

''டேய், உங்க பாட்டி ஒரு பிச்சைக்காரியாமே! நீ எனக்கு அப்படிச் சொன்னதேயில்லையே'', என்றான் அந்தப் பையன்.

''என்னடா உளர்றே?'' என்றான் கபாலி ரோஷத்தோடு.

''நான் ஒண்ணும் உளறலே. அன்னிக்கு நான் கூட பஸ்டாண்டிலே பாத்தேன் அவ பிச்சை கேட்டுண்டிருந்ததை''.

பளார் என்று அவன் கன்னத்தில் ஒரு அறைவிட்டான் கபாலி. ''டே உன்னே இந்த வாட்டி சும்மாவிட்டேன். நீ இந்த மாதிரி வேறே யாரிட்டே யாவதோ, பள்ளிக் கூடத்துப் பசங்ககிட்டவோ சொன்னே உன் தோலை உறிச்சுடுவேன்'', என்று மிரட்டிவிட்டு அங்கிருந்து மின்னல் வேகத்தில் மறைந்தான்.

எனக்கு இந்தச் சம்பவம் மிகுந்த பிரமிப்பை அளித்தது. அந்தப் பையனின் பாட்டி உண்மையிலேயே பிச்சைக் காரியாய்த்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்தேன். இல்லா விட்டால் அந்தப் பையனுக்கு ஏன் அவ்வளவு கோபம் உண்டாக வேண்டும்? என்னுடைய எண்ணம் சீக்கிரத்திலேயே ஊர்ஜிதமாயிற்று.

அன்றொரு நாள் காரியாலயத்திலிருந்து திரும்பிக்கொண்டிருந்தபோது ஒரு சந்து மூலையில் கபாலி ஒரு கிழவியுடன் பேசிக்கொண்டிருந்தான். அவள் தான் அவனுடைய பாட்டி என்று அவன் சொன்னதிலிருந்தே தெரிந்தது.

'ஏ சனியனே, நீ கண்ட எடத்திலும் போய் பிச்சை எடுக்கிறயாமே. எனக்குத் தெரிஞ்ச பையன் ஒருத்தன் உன்னே பஸ் ஸ்டாண்டிலே பார்த்ததாகச் சொல்ருனே. எனக்கு எவ்வளவு வெக்கமாயிருக்கு தெரியுமா. இன்னும் ரெண்டு மூணு பேர் கூட என்னே கேலிபண்ணுங்க. இருக்கிறதை வச்சிண்டு மானத்தோட பிழைக்காமே இதென்ன பொழைப்பு. நீ பிச்சை எடுக்கிறதானு நான் சோறு திங்கமாட்டேன். இனிமே நீ எங்கயாவது பிச்சை கேக்கறதைப் பார்த்தேனு, உம்பாடு அவ்வளவுதான்,'' என்று அவளே மிரட்டிவிட்டுப் போனன் கபாலி. கிழவி ஒன்றுமே பதில் பேசவில்லே. அவள் கண்களில் மட்டும் நீர் மல்கியது.

தன் பாட்டி பிச்சை யெடுக்கிருள் என்பதில்தான் அந்தப் பையனுக்கு எத்தனே அருவருப்பும் அவமானமும்! அது தெரிந்தும் அவனுக்கு எவ்வளவு கோபம் வந்தது! ஏற்பது இகழ்ச்சி தான் ஆனல் சூழ்நிலே அதை அவசியமாக்கினல்? மூன்று ஜீவன்களேக் காப்பாற்றிப்பையனே வேறு படிக்கவைப்பதென்ருல்?

எனக்கு ஏன் பிச்சை யெடுக்கிருய் என்று அவளேயே கேட்டுவிட வேண்டுமென்று தோன்றிற்று, நான் அவளே முன்னமே எவ்வளவோ தடவைகள் பார்த்திருக்கிறேன். அவளுடைய கூன் விழுந்த முதுகும், இடிந்தக் கண்களும், உலர்ந்த உடலும், பார்ப்பவர்களுக்குப் பரிதாப மூட்டுபவையாயிருந்தன. அவளுடைய பரட்டைத் தலே சுருங்கிப்போன அவள் முகத்தின் சோகக் களேயை மிகைப் படுத்தியது.

ஒரு தடவை நான் அவளேக் கேட்கவே கேட்டுவிட்டேன், ''நீ ஏன் பிச்சையெடுக்கிருய், உன் பேரன்தான் உன்னேத் திட்டுதே'' என்று.

'அதுக்கு வீட்டுக் கயிட்டம் என்னங்க தெரியுது? கூலி வேலேயிலே ஒரு நாளேக்கி ரெண்டு ரூபா கெடைக்கும். ஒரு நாள் வேலேயே இருக்காது. அது சொல்லுதேன்னு நான் இருந்துட முடியுமா?' என்ருள்.

சிலசமயங்களில் நம் வாழ்க்கையில் சிறிதும் சம்பந்தப் படாத சிலர் நம் மனத்துள் பெருங்கலவரத்தை உண்டாக்குவதோடு நம் சிந்தனே உலகத்திலும் இடைவிடாது இடம் பெற்று விடுகின்றனர். கபாலியையும் அவன் பாட்டியையும் தெரிந்து கொண்டது முதல் எனக்கு அவர்களின் நினேவு அடிக்கடி தோன்றிக்கொண்டேயிருந்தது. ஒருபுறம் பையனேப் படிக்க வைத்துப் பெரியவனுக்க ஏழ்மையோடு போராடிப் பிச்சையெடுக்கவும் துணியும் கிழவி; மறுபுறம் பிச்சைக் காரியின் பேரன் என்கிற இகழ்ச்சிப் பெயரைத் தாங்க முடியாமல் துவளும் சிறுவன், இப்படியாக அவர்கள் மாறி மாறி என்கண் முன் காட்சியளித்தார்கள். இப் பரந்த உலகின்கண் இவர்களேப் போல் இன்னும் எத்தனே பேரோ! இதுபோன்ற எண்ண

அலைகள் என் மனத் தடாகத்தில் ஓங்கி எழுந்தன, சில நாட்களுக்குப் பிறகு பள்ளியில் கபாலியின் வகுப்பில் நடந்த ஒரு நிகழ்ச்சியை கேள்விப் பட்டேன்.



கபாலி வகுப்புக்குள் நுழைந்தான். உடனே பள்ளிப் பிள்ளைகளனைவரும் அவனைச் சூழ்ந்துக் கொண்டு எக்காளம் செய்யத் தொடங்கினர்கள். ''டேய் பிச்சைக்காரி மவனே'' என்ருன் ஒருவன். ''அவங்கிட்டேயிருந்து ஒண்ணும் வாங்கிக்காதேடா! பிச்சைக் காசாலே பிழைக்கிறவன்'' என்ருன் இன்னெருபையன் 'பிச்சைக்காரப் பயலுக்கு படிப்பென்னடா, அவன் பக்கத்திலே யாரும் உட்காராதீங்க' என்ருன் பாக்கெட்டில் பணம் கொழிக்கும் பெருமிதத்தால் பித்தம் பிடித்தப் பணக்காரப் பையன் ஒருவன். கபாலிக்கு அழுகையே வந்துவிட்டது. உபாத்தியாயரிடம் சென்று அதைப் பற்றி முறையிட்டான் விம்மலுக்கிடையே, 'அவர்களெல்லாம் சொல்வது உண்மையாடா?' என்ருர் அவர். ''ஆமாம் சார், அதுக்கு நான் என்ன செய்யமுடியும்,'' என்ருன் அவன். ''உன் தலைவிதி அப்படி யிருந்தால் நான்தான் என்ன செய்வது? பேசாமல் நீ எங்காணும் வேலைக்கு போறது தானே நீ ஏன் படிக்கிருய்?'' என்ருர் உபாத்தியாயர். அவரிடம் பேசி ஆவதொன்றுமில்லை என்று தெரிந்து அங்கிருந்து நடந்தான் கபாலி.

இந்தச் செய்தியைக் கேள்விப் பட்டபோது கபாலிக்காக என் மனம் மிகவும் பரிதாபப்பட்டது.

அதற்குப் பின் சிலமாதங்கள் வரை கபாலியையோ அவன் பாட்டியையோ நான் பார்க்கவேயில்லை. பையனிடம் பயந்து கொண்டு அவள் வேறெங்காவது பிச்சையெடுக்கப் போய் விட்டாளோ என்னமோ. கபாலியைப்பற்றி அவனுடைய பள்ளிக்கூடத்துப் பையன்களை விசாரித்ததில் அவன் படிப்பை நிறுத்திவிட்டான் என்று தெரிந்தது. பொறுப்பாகக் கவனித்துக் கண்டிப்புடன் படிக்கவைக்கப் பெற்ருேரில்லாத காரணத்தால், குடும்பக் கஷ்டங்களைப் பற்றிச் சிறிதும் கவலையின்றி பாட்டியின் ஊதியத்தை யெல்லாம் விரயம் செய்து கொண்டு, சீர்கெட்டலையும் சோம்பேறிகளுடன் கபாலியும் சேர்ந்து விட்டிருப்பான் என்று அனுமானித்தேன்.

இந்த சமயத்தில் தான் அந்த எதிர்பாராத சம்பவம் நடந்தது. காரியாலயத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்தேன். அந்தத் தெரு மூலையில் பெரிய கூட்டம். என்ன வென்று விசாரித்ததில்

ஒரு சிறுவன் உயரத்திலிருந்து விழுந்து பலத்த காயமுற்றிருந்ததாகவும் அவனை வண்டியில் போட்டு ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் செல்வதாகவும் சொன்னூர்கள். அருகில் போய்ப் பார்த்த நான் திடுக்கிட்டேன். அந்தச் சிறுவன் வேறு யாரும் இல்லை, கபாலி தான்! பக்கத்திலிருந்தவர்களிடமிருந்து அந்த விபத்து எப்படி நடந்ததென்று கேட்டுத் தெரிந்து கொண்டேன்.

அந்தத் தெருவில் ஒரு பெரிய ஐந்தடுக்கு மாடிவீடு கட்டிக் கொண்டிருந்தார்கள். நூற்றுக் கணக்கான ஆட்கள் அங்கே வேலை செய்து கொண்டிருந்தனர். அங்கே கபாலியும் வேலை செய்து கொண்டிருந்தான். செங்கற்களை அடுக்கடுக்காகத் தலைமேல் தூக்கிக் கொண்டு ஏணி மேல் உயர ஏறிப்போய் நான்காவது மாடியில் வேலை செய்கிறவர்களுக்குக் கொண்டு போய்க் கொடுப்பது அவன் வேலை. இவ்வளவு பெரிய வேலையை அந்தச் சிறு பையனல் செய்ய முடியுமா? பாரத்தைத் தூக்கிக் கொண்டு உயர ஏறிப் போவதென்ருல் அவன் சக்திக்கு மீறின வேலையல்லவா? இருந்தாலும் ரொம்பக் கஷ்டப்பட்டு சிரமத்தைப் பொருட் படுத்தாமல் அந்த வேலையைச் செய்து வந்தானும். அன்றைய தினம் வேலைக்கு வரும்போதே பையன் மிகவும் களைத்துப் போயிருந்தானும். ஆனாலும் அதைக் கவனியாமல் வேலையிலிறங்கினன். உடம்பு நாம் சொன்னபடி யெல்லாம் கேட்கிறதா! அன்று பிற்பகல் கபாலி கூடையில் கற்களைத் தூக்கிக் கொண்டு மேலே ஏறிக் கொண்டிருந்த போது திடீரென்று மயக்க மடைந்து உயரத்திலிருந்து கீழே விழுந்தானும். உடம்பெல்லாம் பலத்த அடி. வலது கால் முறிந்து விட்டாற்போல் தெரிந்தது. கீரைத் தண்டைப்போல் வாடி வதங்கி மெலிந்துகிடந்தது அவன் உடல். அவன் மட்டும் இன்னும் அதிக உயரத்திலிருந்து விழுந்திருந்தால் கட்டாயம் செத்துப்போயிருப்பான். கடவுள் அவ்வளவோடு காப்பாற்றினரே என்று எல்லோரும் அபிப்பிராயப் பட்டார்கள். கபாலியைப் பற்றி தவருக எண்ணினேமே என்று நினைத்தபோது என் மனம் ஒரு நிலையிலில்லை.

கபாலியை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் சென்ருர்கள். பெரிய டாக்டர்கள் வந்து அவன் காயங்களுக்கு சிகிச்சை செய்தார்கள்.

கிழவிக்கு விஷயம் எட்டியதும் ஓடோடி வந்தாள். நெஞ்சு பிளக்கும்படி அரற்றிக் கொண்டு. பேரனிருந்த நிலைமையைக் கண்டதும் அவளடைந்த சோகம் அளவிட முடியவில்லை. டாக்டர் பையனின் உயிருக்கு ஆபத்தொன்றுமில்லை யென்றும் ஆனல் காலில் எலும்பு முறிந்திருப்பதால் குணமாக ஒரு மாதமாகும் என்றும் தெரிவித்தார். ஒரு இஞ்செக்ஷன் செய்ததன்பேரில் கபாலி சிறிது நேரத்தில் மயக்கம் தெளிந்து கண்களைத்திறந்தான். முதலில் அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"ஐயோ மவனே' உனக்கெப்படி இந்த ஆபத்து வந்தது?" என்று கிழவி கேட்டபிறகுதான் அவன் பேச ஆரம்பித்தான்.

"பாட்டி! நா உன்னிண்டே இத்தினி நாளா ஒண்ணையுமே சொல்லலே. இப்போ எல்லாத்தையும் சொல்லிடறேன். அண்ணைக்கு ஒருநாள் பிச்சை எடுத்ததற்காக உன்னை நான் கோவிச்சுண்டது உனக்கு ஞாபகம் இருக்கும். நெஜமாகவே நீ பிச்சை யெடுக்கிறதைப் பற்றி எனக்கு ரொம்ப வெக்கமாயிருந்தது. இருக்கிறதை வச்சிண்டு எப்படியோ காலம் தள்ளாமே எதுக்கு இந்தக் கேவலமான வழிக்குப் போவனும்னுதான்

நான் கேட்டேன். ஆனாலும் எனக்கு வீட்டு நெலமை தெரியாமே போகலே. உன்னைக் கோவிச்சுண்டேனே தவிர என்னைப் படிக்க வைக்கறதுக்காக நீ பிச்சை எடுத்ததை பாக்க எனக்கு மனசுக்கு ரொம்ப வருத்தமாயிருந்தது. உடனே உன்னிண்டே சொல்லிக்காமே நான் படிப்பை நிறுத்திட்டு இந்த கூலி வேலைக்குப் போனேன். வேலை ரொம்ப கஷ்டமாகத்தான் இருந்திச்சு. ஆனா நீயே கஷ்டப்படும்போது நான்மட்டும் சுகமா திங்கறதா? எப்படியோ இந்த மூனு மாசமா வேலை செய்திண்டிருந்தேன். இப்போ கொஞ்ச ரூபாய் கூட சேர்த்திருக்கேன். இந்த சமயத்தில்தான் இந்த ஆபத்து வந்துடுச்சி. கால் குணமானப்புறம் நான் வேலைக்குப் போரேன். இனிமே உன்னே கஷ்டப்பட விட்டுட்டு நா சும்மா இருக்கப் போறதில்லே ஆனால் நீ மட்டும் பிச்சை யெடுக்கப் போகவே கூடாது'' என்றான் கபாலி.

''தம்பீ! உன் குணம் எப்படி பட்டதுன்னு எனக்கே இத்தனை நாள் தெரியாம இருந்ததே'' என்று சொல்லி ஆதுரத்துடன் அவனைக் கட்டிக்கொண்டாள் கிழவி. உணர்ச்சி மேலிட்டு அவளால் சிறிது நேரம் பேசமுடியவில்லை.

பேரனைப் படிக்க வைத்துப் பெரியவனாக்க எண்ணிப் பிச்சை யெடுக்கத் துணிந்தாள் பாட்டி. பாட்டியையே மிஞ்சிவிட்டான் பேரன். ஏழ்மையிலும் நேர்மையைக் கடைப்பிடித்தான். முதிர்ந்தவர்களுக்கும் இயலாத தத்துவத்தை நடைமுறையிலேயே அனுசரித்துக் காட்டினான். மானத்தைக் காப்பாற்றத் தன் உடலை வருத்திக் கொள்ளவும் தன் சக்திக்கு மிஞ்சின வேலையைச் செய்யவும் கூடத் தயங்கவில்லை. சிறுவனின் பெருந்தன்மையின் முன் கிழவியின் சிரம் பணிந்தது.

''திடீர்னு நான் கண்ணை மூடிட்டா நீ கஷ்டப்படுவாயேன்னு தான் நான் அந்த மாதிரி செய்தது. என்னுடைய கவலை அனாவசியமானதுன்னு இப்போதல்ல தெரியுது. உன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் திறமை உனக்கே இருக்குன்னு தெரிஞ்சப்புறம் எனக்கு என்ன கவலை. நான் எதுக்கு இனிமே பிச்சை எடுக்கப் போவணும், நீயும் இந்த மாதிரி உன் ஒடம்பை கஷ்டப்படுத்திக்காதே. பாவம், இந்த சின்ன வயசிலே நீ என்னவெல்லாம் செய்திருக்கே'' என்று நிம்மதி பெற்ற மனதுடன் கூறிமுடித்தாள் கிழவி. அவள் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது.

ஆம், வறுமை இருள் கவிந்திருந்த அவர்களுடைய அந்தகார வாழ்வில் நம்பிக்கை ஒளி பிறந்தது. ஒளி பிறக்கச் செய்தான் சிறுவன் கபாலி.

சங்கராபரணம்

"கோகுலன்"

குணசேகரன் தன் அறையில் கண்ணாடிமுன் நின்று கலைந்து போன கிராப்பை வாரிக்கொண்டிருந்தான். அவன் உள்ளம் அர்த்தமில்லாத எண்ணங்களை எண்ணிக்கொண்டு அலைபாய்ந்து கொண்டிருந்தது. திடீரென்று மல்லிகை மணம் 'குப்' பென்று வீசவே கிராப்பை சரி செய்வதை நிறுத்தி சற்று திரும்பிப் பார்த்தான். வாசனை வீசிக்கொண்டிருந்ததே தவிர, அதற்கு சொந்தக்காரர் யார் என்று விளங்காமல் திகைத்தான் குணசேகரன். புதுப் புடவை சலசலக்க ஒய்யாரமாய் அறைக்குள் நுழைந்தாள் வத்ஸலா.

''என்ன மிஸ்டர் குணசேகர், இன்னும் அலங்காரம் முடிந்தபாடில்லையா? சரிதான், அலங்கார விஷயத்தில் நீங்கள் பெண்களையும் தோற்கடித்துவிடுவீர்கள் போலிருக்கிறதே! அது சரி, இன்றைக்கு என்ன ராகம் விஸ்தாரமாய் வாசிக்கப்போகிறீர்கள்? பைரவியே நடக்கட்டும். நீங்கள் பைரவி வாசித்து ரொம்ப நாள் ஆகிவிட்டதில்லையா?'' என்று சொல்லிக்கொண்டே கீழே ஸ்ருதி சேர்த்து வைத்திருந்த வீணையின் தந்திகளை மீட்டினாள் வத்ஸலா.

''நீங்கள் சொல்கிறபடியே செய்து விடுகிறது. பைரவியையே பல்லவிக்கு எடுத்துக் கொள்கிறேன். திருப்திதானே?'' என்று கூறினான் குணசேகரன். இதற்குள் இன்னும் சில பேர் அந்த அறைக்குள் வரவே கச்சேரிக்குக் கிளம்பத் தயாரானான் குணசேகரன்.

குணசேகரன் ஒரு காலேஜ் மாணவன். ஹாஸ்டலில் இருந்து கொண்டு படித்து வந்தான். வீணை வாசிப்பது அவனுக்கு ஒரு பொழுது போக்கு. பெரிய வித்வான்களுக்கு நிகராக வீணை வாசிப்பதில் தேர்ச்சிபெற்றிருந்தான். காலேஜில் நடக்கும் எந்த விஷேத்திற்கும் அவனுடைய கச்சேரி நடைபெறுமல் இராது.

பெயருக்கு ஏற்றபடி சாந்தமான குணம். எல்லோரிடமும் சிரித்த வண்ணம் சுமுகமாய் பேசுவதையே அவன் ஒரு கலையாய் பயின்றுவிட்டான் என்று தான் கூறவேண்டும். ப்ரொபஸர், மாணவ மாணவிகளின் பேரன்புக்கு அவன் பாத்திரமாய்விட்டான். சிவந்தமேனியும், படிப்பில் முதல் ஸ்தானமும், தன்னடக்கமும் கொண்ட அவன் பால் அநேக காலேஜ் மாணவிகள் மனதைப் பறி கொடுத்திருந்ததில் ஆச்சரியமில்லை. வனஜாவும் இதற்கு விதிவிலக்கல்ல. காலேஜில் சேர்ந்த நாளிலிருந்து, அதுவும் ஒரு முறை அவன் வீணை வாசிப்பை கேட்ட பிறகு அவள் உன்மத்தம் பிடித்தவள் போல் ஆகிவிட்டாள், முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப் பட்டமாதிரி அவள் அவனைப் பற்றி கனவு காணக் கூட அருகதை அற்றவள் என்று எண்ணினாள். வாஸ்தவம்தான். அவள் அப்படி ஒன்றும் பேரழகி என்று சொல்ல முடியாது. மாநிறம் தான். பெரிய இடத்துப் பெண்ணும் அல்ல. ஆனால் ஒன்று. சங்கீதத்தில் நல்ல பற்றுதல் உண்டு. ஊண் உறக்கமின்றி சங்கீதம் கேட்பாள். குணசேகரனின் அழகைவிட அவன் வாசிக்கும் சங்கீதம் தான் அவளை அவ்வளவு தூரம் பைத்தியமாய் அடித்துவிட்டது.

குணசேகரனும் வனஜாவிற்கு இருக்கும் ஞானத்தை அறியாதவனல்ல. கண்களை மூடிய வண்ணம் தன் வாசிப்பில் லயித்திருப்பதை அநேக முறை கவனித்திருக்கிறான். ஏன் சில சமயம் அவள் தனக்கு வாழ்க்கைத் துணைவியாய் வாய்த்தால் வாழ்க்கையே வளம் பெறும் என்று கூட எண்ணியதுண்டு.

இந்த சமயத்தில் தான் வத்ஸலா காலேஜில் வந்து சேர்ந்தாள். அவள் ஒரு பெரிய உத்தியோகஸ்தரின் பெண். வீணையும் கொஞ்சம் வாசிக்கத் தெரியும் என்று கூறிக் கொண்டாள். ஆனால் ஒரு நாளாவது அவள் வீணையை மீட்டி யாரும் கேட்டதில்லை. எல்லாம் வாயோடு சரி. 'அவனுக் கென்ன தெரியும், இவனுக் கென்ன தெரியும்' என்று மற்றவர்களைப் பற்றி எடுப்பாய் பேச கொஞ்சம் கூடத் தயங்கமாட்டாள். குணசேகரின் வாசிப்பைக் கேட்டதுமே நாலு பேர் முன்னிலையில் வியரிசனம் செய்யத் தொடங்கி விட்டாள். குணசேகரனுக்கு அவள் போக்கு பிடிக்காவிட்டாலும் பல காரியங்களை உத்தேசித்து சிரித்து மழுப்பி விடுவான். ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன் குணசேகரன். கிராமத்தில் இருந்த நிலத்தை விற்று காலேஜ் படிப்பை முடிக்கப் பாடுபட்டான். பணக்கார இடத்துப் பெண்ணை கல்யாணம் பண்ணி வைத்து பிள்ளை சுகப் பட்டுப் பார்க்க வேண்டுமென்பது அவன் தாயாரின் விருப்பம். அதற் கேற்ப அநேக ஜாதகங்களும் வந்து கொண்டிருந்தன. வனஜாவின் மேல் குணசேகரின் நாட்டம் இருந்தபோதிலும், தன் பிற்கால வாழ்க்கையை நினைத்து வத்ஸலாவின் மனம் நோகாமல், அவள் சொல்வதற்கெல்லாம் 'ஆமாம்' என்று தலையாட்ட வேண்டிய நிர்பந்தம் அவனுக்கு ஏற்பட்டது.

காலேஜ் பிரார்த்தனை ஹாலில் ஏகக் கூட்டம் கூடியிருந்தது. முன் வரிசையில் ப்ரொபஸர்களும் மற்றப் பிரமுகர்களும் உட்கார்ந்திருந்தனர் குணசேகரன் கச்சேரியைத் துவக்கினான். ஒருவர்ணம், அதை அடுத்து இரண்டு மத்யம கால உருப்படிகள், இப்படிக் கச்சேரி பகுசுகமாய் நடந்துகொண்டிருந்தது. வனஜாவும் வத்ஸலாவும் பெண்கள் வரிசையில் உட்கார்ந்திருந்தார்கள்; வத்ஸலா சிரக்

கம்பமும் கரக்கம்பமும் செய்து கச்சேரியை பிரமாதமாய் ரஸித்துக் கொண்டிருந்தாள். அவள் இவ்வளவு ஆர்ப்பாட்டங்கள் செய்துகொண்டிருப்பதை மற்றவர்கள் வெகுவாய் அநுபவித்தார்கள். வத்ஸலாவின் சந்தோஷம் எல்லை மீறிவிடவே, குணசேகரனுக்கு சமிக்ஞை மூலம் ஏதோ ஒரு ராகம் வாசிக்க வேண்டுமென்று சொல்ல துடிதுடித்தாள். குணசேகரன் இதொன்றையும் கவனித்ததாகவே தெரியவில்லை. மெய்மறந்த நிலையில் அவன் கை விரல்கள் வீணையின் தந்தியை மீட்டி நாத வெள்ளத்தை கிளப்பிக் கொண்டிருந்தன. 'கமக' சங்கதிகளும், பிர்க்காபொழிவுகளும் ஒன்றன்பின் ஒன்ருய் கிளம்பி ஹால் முழுதும் வியாபித்திருந்தன.

நெற்றியில் முத்துபோல் குமிழியிட்டு நின்ற வியர்வைத் துளிகளைத் துடைப்பதற்காக சற்று வாசிப்பதை நிறுத்தி விட்டு கைகுட்டையால் முகத்தை துடைத்துக் கொண்டே வந்திருப்பவர்களை ஒரு கண்ணேட்டம் விட்டான். இந்த சமயத்தை நழுவவிடக் கூடாதென்று வத்ஸலா இல்லாத பிரும்மப் பிரயத்தனங்களைச் செய்து அவன் கவனத்தைத் தன் பக்கம் திருப்பிப் பார்த்தாள். அவளைப் பார்த்தும் பார்க்காதது போல் முகத்தை மறு பக்கம் திருப்பிக் கொண்டு வீணையை மீட்டுவதில் முனைந்தான். இவ்வளவையும் ஒரு நொடியில் கவனித்து விட்டாள் வனஜா. அவளுக்கு வந்த சிரிப்பை அடக்கிக் கொள்ள கைகுட்டையின் உதவியை நாட வேண்டிவந்தது. பாராமுகமாய் இருந்த குணசேகரனின் மேல் வத்ஸலா ஆத்திரப்பட்டாள். மற்ற மாணவிகள் அவளைப் பார்த்து கேலி செய்து சிரிப்பதைக் கண்டு அவள் கோபம் கட்டுக்கு மீறிபோய் விட்டது. முகத்தை 'உர்'ரென்று வைத்துக்கொண்டு, தன்னை உதாசீனம் செய்த குணசேகரனை மட்டம்தட்ட வேண்டுமென்று அவள் துடிதுடித்துக் கொண்டிருந்தாள். அதற்குத் தகுந்த சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்திருந்தாள்.

குணசேகரன் எப்பொழுதும், 'இந்த ராகம்தான் இன்று வாசிக்க வேண்டும், இந்த கீர்த்தனையில் நிரவல் செய்து ஸ்வரம் வாசிக்க வேண்டும் என்று ஒரு முன்னேற்பாட்டுடன் கச்சேரிக்கு வருவது கிடையாது. தன் மனேபாவத்திற்கு உகந்ததை சூழ்நிலைக்கு தக்கவாறு எது வாசிக்கலாம் என்று தோன்றுகிறதோ அதைத்தான் வாசிப்பான். ரஸிகர் குழாத்திற்கு ஏற்றதை வாசிப்பதில் தான் அவன் எப்பொழுதும் ஆர்வம் கொள்வான். கச்சேரிக்குக் கிளம்பும் போது வத்ஸலா பைரவியை கனராகமாய் வாசிக்க வேண்டும் என்று கூறியதை அவன் அறவே மறந்து விட்டான். சங்கராபரணத்தை விஸ்தாரமாய் வாசித்து தானம் பல்லவி வாசித்தான். குணசேகரன் பைரவி வாசிக்கப் போகிருன் என்று எதிர்பார்த்து ஏமாந்து போன வத்ஸலாவின் முகபாவம் 'இப்பொழுது கோபம் உச்சநிலையை அடைந்துவிட்டது' என்று எல்லோர் கண்ணுக்கும் புலனுயிற்று.

கச்சேரிக்குப் பிறகு காலேஜ் நிர்வாகிகள் 'டின்ன'ருக்கு ஏற்பாடு செய்திருக்கவே இரண்டு மூன்று துக்கடாக்களை வாசித்து விட்டு கச்சேரியை ஒரு விதமாய் முடித்துக் கொண்டான் குணசேகரன். நண்பர்களும், ப்ரொபஸர்களும் கையைக் குலுக்கிப் பாராட்டிப் பேசினுர்கள். குரோதம் நிறைந்த கண்களுடன் வத்ஸலா இவ்வளவையும் கவனித்தாள். குணசேகரனை மட்டம் தட்ட இதுதான் சமயம் என்று

நினைத்து அவனிடம் வந்து. ''என்ன மிஸ்டர் குணசேகரன் இன்று உங்கள் வாசிப்பு இப்படி எதிர் பாராத ஏமாற்றத்தை அளித்து விட்டதே! எவ்வளவோ பிரமாதமாய் வாசிப்பீர்கள் என்று நினைத்தேன். கடைசியில் ஒரு கற்றுக் குட்டியைப் போல் வாசிப்பு அமைந்து விட்டதே! நான் சொல்கிறேன் என்று வருத்தப் படாதீர்கள், அநேக இடங்களில் அபஸ்வரம் கூட பேசிவிட்டது. என்னைப் பொறுத்த வரையில் இன்றையக் கச்சேரி ரொம்பவும் சாதாரணமானது தான்'' என்று கூறிவிட்டு வெற்றிப் புன்னகையுடன் சூழ்ந்திருந்தவர்களைப் பார்த்தாள். இதைக் கேட்டதும் குணசேகரனின் முகம் வாட்டமடைந்து விட்டது. நாலு பேர்கள் முன்னிலையில் அவன் அடைந்த அவமானத்தை தாங்கவே முடியவில்லை. இவ்வளவையும் கவனித்த வனஜாவிற்கு வத்ஸலாவின் கன்னத்தில் 'பளார்' என்று நாலு அறை அறையலாம் போலிருந்தது. சாந்த சுபாவமான குணசேகரன் என்ன செய்வதென்று தெரியாமல் உடல் குன்றி பிரமை பிடித்தவன் போல் நின்றான்.

''வத்ஸலா நீங்கள் ஸங்கீதத்தைக் கரை கண்டவராய் இருக்கலாம். உங்களுக்கு ஸரஸ்வதி தேவியின் கடாக்ஷம் பரிபூர்ணமாய் இருக்கலாம். என்ன இருந்தாலும் துளிக்கூட இங்கிதம் தெரியாமல் இப்படிப் பேசுவது உங்களைப் போன்ற படித்த அறிவாளிகளுக்கு அழகல்ல. வக்கணையாய் விமர்சனம் செய்யலாம். ஆனால் சபையோருக்கு முன் தைரியமாய் பேசுவதோ அல்லது பாடுவதோ சாமான்ய விஷயமல்ல. மிஸ்டர் குணசேகரனின் நிலையில் நீங்கள் இருந்தால் அதிலுள்ள சிரமங்கள் தெரியும்'' என்று தன்னையும் மீறி வந்த கோபத்தை அடக்க முடியாமல் பேசி விட்டாள் வனஜா. அடிபட்ட புலிபோல் வனஜாவை க்ரோதத்துடன் பார்த்தாள் வத்ஸலா. பிறகு அலட்சியமாய் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு அவ்விடத்தை விட்டகன்றாள். மனம் குழம்பி நின்ற குணசேகரனை அவன் நண்பர்கள் 'டின்னருக்கு, அழைத்துச் சென்றார்கள்.

டின்னர் சாப்பிடச் சென்ற குணசேகரின் மனம் சென்றதை நினைத்து தத்தளித்துக் கொண்டிருந்தது. வத்ஸலாவின் திமிரான பேச்சு, அவன் உள்ளம் முழுதும் வியாபித்திருந்தது. டின்னரில் மனம் செல்லாத குணசேகரன் தனக்கு உடம்பு சரியில்லை என்று கூறி விட்டு தன் வீணையை எடுத்துக் கொண்டு போவதற்காக பிரார்த்தனை மண்டபத்தை நோக்கிச் சென்றான். பிரார்த்தனை ஹாலிலிருந்து வந்த வீணையின் நாதம் அவனை சற்று திகைக்கச் செய்தது. அப்படியே நின்று அதைக் கேட்கத் தொடங்கினான். ஆம். அவன் வாசித்த அதே சங்கராபரண ராகத்தை யாரோ பகு சுகமாய் வாசித்துக் கொண்டிருந்தார்கள். வீணையை மீட்டுகிற ஒரு லாகவமும், ராகத்தை அதன் ரக்தி தெரிந்து வாசிக்கிற ஒரு பந்தாவும் அவனை பிரமிப்படையச் செய்தது. யார் இவ்வளவு நயமாய் வாசிக்கிறார்கள் என்று அறிய அவன் மனம் துடிதுடித்தது. ''தான் நன்றாய் வாசிக்கவில்லை என்ற ஆத்திரத்தால் ஒரு வேளை வத்ஸலாதான் நிம்மதியாய் உட்கார்ந்து கொண்டு வாசிக்கிறாளோ! அவளுக்குத் தான் வீணை வாசிப்பதின் நுணுக்கங்கள் தெரியும்'' என்று பலவிதமாய் யோசித்தவாறே பூனை போல் அடிமேல் அடி வைத்து மெதுவாய் எட்டிப் பார்த்தான்.

எதிர்பாராத மாற்றம் அவனுக்கு அங்கே காத்து நின்றது. வனஜா கண்களை மூடிய வண்ணம் மெய் மறந்து சங்கராபரண ராகத்தை வாசிப்பதில் லயித்திருந்தாள். அடாடா! என்ன ஸ்ருதி சுத்தம்; என்ன சஞ்சாரங்கள். குணசேகரன் தன்னையும் மறந்து 'த்சு, த்சு' என்று ரஸித்துவிட்டான். ஆள் அரவம் கேட்டதும் வாரிச் சுருட்டிக் கொண்டு தன் உணர்வு பெற்றவளாய் வீணையை கீழே வைத்துவிட்டு எழுந்து நின்றாள். வனஜா.

''என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் உத்தரவின்றி வீணையை நான் எடுத்தது தவறு தான். ஆசை வெட்கம் கெட்டது தானே.''

''வனஜா, இவ்வளவு நன்றாய் நீ வீணை வாசிப்பாய் என்பது எனக்குத் தெரியாதே! யாரிடம் உனக்கு சிக்ஷை?''

''ஆனாலும் இப்படி கேலி செய்யாதீர்கள். நான் காலேஜில் வந்து சேர்ந்த போதே எனக்கு ஏதோ சுமாராய் வீணை வாசிக்கத் தெரியும். ஆனால் உங்கள் பாணியில் வாசிக்க வேண்டுமென்ற ஆர்வத்தில் சாதகம் செய்ததால் ஏதோ இப்பொழுது சுமாராய் வாசிக்க வருகிறது. ஆகையால் நீங்கள் தான் எனக்கு குரு'' என்று கூறிவிட்டு புன்னகை புரிந்தாள் வனஜா.

''ஒஹோ, அப்படியா விஷயம்? அப்படியானால் நீ குருவின் வார்த்தையைத் தட்டக்கூடாது. இன்னும் கொஞ்சம் விஸ்தாரமாய் விட்ட இடத்திலிருந்து சங்கராபரணத்தை வாசித்து தானம் வாசி'' என்று வனஜாவின் கரத்தை உரிமையுடன் பற்றி உட்காரவைத்தான் குணசேகரன். அவன் கரஸ்பரிசம் வனஜாவின் உள்ளத்தில் இன்னறியாத ஒரு வித இன்பத்தை அளித்தது.

டின்னரிலிருந்து திரும்பி குணசேகரனைப் பின்பற்றி வந்த வத்ஸலாவிற்கு சற்று தூரத்திலிருந்து இவ்வளவையும் கவனித்த பிறகும் அதற்கு மேல் அங்கு நிற்க என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது. பிரார்த்தனை மண்டபத்திலிருந்து வந்த வீணகானம் அவளுக்கு நாராசமாய் இல்லாமல் வேறு எந்த விதமாய் இருக்க முடியும்?

சிறுகதையில் உண்மை!

பி. கோதண்டராமன்

கற்பனையும் உண்மையும் கலக்கு இன்றியமையாத இரண்டு அம்சங்களாக திகழ்கின்றன. அகவிழியினின்று உதிக்கும் கற்பனையின்றி கலை தோன்ருது. புறத்தே காணும் உண்மையின் ஆதரவின்றி அது நிலைத்து நிற்காது. கற்பனையும் உண்மையும், சிருஷ்டிக்கும் ஆற்றல் வாய்ந்த இரு பெருஞ்சக்திகளாகும்.

இலக்கியச் சிருஷ்டியில், உள்ளது உள்ளபடி கூறும் தத்துவத்தை உண்மை அல்லது யதார்த்த வாதம் என்றும், இல்லாத தன் புனைவைக் கற்பனை வாதம் என்றும் கூறுவர்.

இலக்கியம் வெகுகாலமாகப் பண்டை இலக்கியங்கள் வகுத்த வழியிலேயே சென்று வந்தது. பழைய மரபுகளும் கட்டுப்பாடுகளும் புதுச்சிருஷ்டியை ஒடுக்கி வந்தன. கற்பனைவாதம் எழுச்சி பெற்று இத்தடைகளை யெல்லாம் உடைத்தெறிந்து வாழ்க்கையில் காணப்பெருத அபூர்வங்களையும், அதிசயங்களையும் சித்தரித்துப் புது இலக்கியங்களைச் சிருஷ்டித்தது. இப் போக்கு மிதமிஞ்சிப் போன போது, யதார்த்தவாதம் எழுச்சி பெற்றது. ஐரோப்பாவில் 1830க்குப் பிறகே யதார்த்தவாதம் ஓர் இலக்கிய முறையாக விருத்தியடைந்தது. 1850 முதல் 1880 வரையில் அதுவே இலக்கியத்தின் பிரதான போக்காயிருந்தது. 'மானிட காமெடி' என்ற பொது வரிசையில் பிரபல பிரெஞ்சு நாவலாசிரியரான பல்ஜாக் எழுதிவந்த நாவல்கள் இன்றைய யதார்த்த வாதத்தின் முன்ஞேடிகள் எனக் கருதப்படுகின்றன. அவை அக்காலத்திய பிரெஞ்சு சமூக நிலையை அற்புதமாக சித்தரித்தன. பல்ஜாக்குக்குப் பின் ஐரோப்பாவில் ப்ளோபேர், டால்ஸ்டாய், டாஸ்டாய்வ்ஸ்கி, மோப்பஸான் தாக்கரே, ஜார்ஜ் எலியட் முதலியோர் யதார்த்த வாத அடிப்படையில் நாவல்களும், சிறுகதைகளும் எழுதிப் பிரபலமடைந்தனர்.

யதார்த்தவாதம் என்ருல் என்ன? வாழ்க்கையையும் மானிட இயல்பையும் உள்ளது உள்ளபடியே சித்தரிப்பதே யதார்த்தவாதம். மானிட இன்ப துன்பங்கள், அழகு ரூபங்கள், மேன்மை—தாழ்வுகள் ஆகிய யாவும் இதனுள் அடங்கும்.

சிறு கதையை எடுத்துக் கொள்வோம்.

இலக்கிய வகைகள் யாவற்றிலும் சிறு கதையே பூரண சுதந்திரத்துடன் எழுதப்படும் ஓர் இலக்கியமாகத் திகழ்கின்றது. சிறுகதை ஒரு கவிதையைப் போலவோ அல்லது சாராம்சத்தில் ஒரு நாவலைப் போலவோ அமைந்துவிடலாம். அதன் கதை நிகழ்ச்சிகளையும் போக்கையும் சாமான்னியமாகவோ அல்லது சிக்கல்கள் வாய்ந்தனவாகவோ அமைத்துவிடலாம். அது திட்டமாகவும் ஒழுங்காகவும் அமைந்ததொரு வெளிப்பாடாகவோ, தற்செயலாக எழுப்பப்படுவதாகவோ இருக்கலாம். சிறு கதை ஆசிரியன் மட்டும் கைதேர்ந்தவனுக இருப்பின், சிறு கதை அமைப்பிற்குரியன எனக் கருதப்படும் லட்சணங்கள் பல இன்றியே சுவையுள்ள இலக்கியத்தைச் சிருஷ்டித்துவிடலாம். சிறு கதைக்கு உருவம் சமைத்துத் தந்த எட்கார் அல்லன்போ வாழ்க்கையுடன் தொடர்பில்லா விஷயங்களைக் கொண்டே தம் கதைகளை எழுதினுர். சிறு கதை எழுதுவது ஒரு கலை. அக்கலையைக் கற்றவனின் கரங்களில் அது விரும்பியபடியெல்லாம் வளைந்து கொடுக்கும் இயல்புடையது.

இத்தகைய சிறு கதையில் வாழ்க்கை அழகுறச் சித்திரிக்கப்படுகிறது. வாழ்க்கை எனில், முழு வாழ்க்கையும் அல்ல; வாழ்க்கையின் ஒரு குறுக்கு வெட்டே. அதன் யதார்த்த வாதம் வாழ்க்கையை அப்படியே நகல் செய்யும் சுவையற்றதொரு விஷயமாகாது, அது வாழ்க்கை உண்மைகளைப் பொறுக்கி யெடுத்துத் தனக்குரிய அமைப்புக்குள் அழகுறப் பொருந்துமாறு பிரயோகித்துக் கொள்கிறது. வாழ்க்கையில் காணப்படும் மிகச் சாமான்னியமான, மிகத் தாழ்மையான விஷயங்களைச் சித்தரிக்கும் போதும், அது அவற்றின் தகுதியை உணர்ந்து அவற்றை உயர்த்துகின்றது. அது கூறும் யாவும் அப்பட்டமான உண்மைகள் என்னும் மதிமயக்கம் வாசகன் மனத்தில் ஏற்படும் வகையில் அது கலையழகுடன் கூறுகிறது. உள்ளது உள்ளபடி சித்தரிக்கையிலும் ஓரளவு லட்சிய வாதத்தையும் தன்னுட் கொண்டு இலங்குகிறது. இலக்கியத்திற்குரியதொரு களமாக தினசரி உலகே திறந்துவிடப் படுவதால், சிறு கதையின் யதார்த்த வாதம் சிறு கதை இலக்கியத்திற்கு மகத்தான தொரு சேவை புரிகின்றது.

உண்மை அல்லது யதார்த்த வாதம் என்ற பெயரில் சிறு கதையாசிரியர் சிலர் இழிந்த, மட்டரகமான, பாமரத்தன்மை வாய்ந்த விஷயங்களில் சுவையும் மகிழ்ச்சியும் ஏற்படச் செய்வர். இவ்வுண்மைகளுக்கு இலக்கிய மதிப்பேயில்லை. இவற்றிற்கு சிறுகதையில் இடமில்லை. சிறுகதைக்குச் சீவன் அளிப்பது ஆசிரியனின் தனி நோக்கும் விளக்கமுமேயாம்.

சிறுகதையில் உண்மை ஆக்கம் பெறுவதற்கு உண்மை விஷயங்கள் யாவும் அப்படியே அதில் இடம்பெற வேண்டும் என்ற நியதியில்லை. உண்மையின் ஒரு விவரத்தை விலக்கி, மற்றொன்றைத் தேர்ந்தெடுத்தாலோ, அல்லது ஒரு விஷயத்தை இலேசாகப் பிரஸ்தாபித்து மற்றொன்றை அழுத்தமாகச் சொன்னாலோ அது உண்மைக்குச் செய்த துரோகமாகிவிடுமா? அன்றியும், சிறு கதை வாழ்க்கை முழுவதையும் சித்தரிக்க நாடுவதில்லை. அது அசல் உண்மையை அப்படியே விவரிப்பதாக என்றுமே உரிமை கொண்டாடியதில்லை. அது வாழ்க்கையின் ஒரு தனி அம்சத்தைத்தான் பெயர்த்தெடுத்து விளக்கஞ் செய்கிறது. அவ்விளக்கமும் தனி நோக்கமுமின்றி சிறு கதையுமில்லை. சிறு கதையானது யதார்த்தத்தின் சிறந்த அம்சங்களையும் கற்பனை இலக்கியத்தின் சிறந்த பகுதியையும், லட்சிய வாதத்தில் நல்ல அம்சங்கள் சிலவற்றையும் மேற்கொண்டு யாவற்றையும் தன் மயமாக்கிக் கொள்கிறது. அது வாழ்க்கையின் ஜீவிய ஓவியமொன்றைக் கணிசமான உருவில் வெளிப்படுத்த முயலுகிறது. நம் நடத்தை, நம் ஆசாபாசங்கள், உணர்ச்சிகள் ஆகியவற்றையும் கட்டுபாடு செய்யும் மானிட இயற்கையின் விதிகளையும் அது வெளிப்படுத்த முயலுகின்றது.

சிறுகதையில் வாழ்க்கையின் உண்மைகளைக் காண்கிறோம். ஆனல் அவ்வுண்மைகள் கலையினின்று எழுந்த உண்மைகள் என்பதை நாம் மறந்துவிடலாகாது. ஆயினும் சிலசமயம், கலையினின்று எழும் இவ்வுண்மைகளே சாமானிய அப்பட்டமான உண்மைகளைவிட அதிக உண்மை வாய்ந்தனவாக இருக்கக்காண்போம். மிக உயர்ந்த நிலையில், கலையின் ஊற்றாகிய கற்பனைக்கும் உண்மைக்கும் யாதொரு வித்யாசமும் காண முடியாது.

இரு யாத்திரிகர்கள்

வயது சென்ற இருவர் சேர்ந்து ஜெருசலேம் யாத்திரை போகவேண்டும் என முடிவு கட்டினர். அவர்களில் ஒருவன் பணமுள்ள விவசாயியான யூபிம் ஸெவலிப்; மற்றொருவன் பணமற்ற எலிஸா பெட்ரோப். இதுதான் அவர்களின் பெயர்.

யூபிம் தன்மானமுள்ள உயர்ந்த பண்பு உடைய கண்டிப்பான மனிதன். குடித்தோ, புகைத்தோ பழக்கமற்ற நல்ல மனிதன். அவனுக்கு இரண்டு மகனும் கல்யாணமாகிய ஒரு பேரனும் உண்டு. அவர்கள் எல்லாம் ஒரே குடும்பமாய்த்தான் வாழ்ந்து வந்தார்கள். அந்த நிலையில் எழுபது வயது வந்த அவன் பலமுள்ளவனாகவும் சுகமுள்ளவனாகவும் தான் இருந்தான்.

எலிஸா பணக்காரனே அல்லது பரம ஏழையோ அல்ல. வயது வந்த அவன் முன்பெல்லாம் தச்சு வேலை செய்து வந்தான். ஆனால் இப்பொழுது அது முடியாததினால் வீட்டிலே தேனி வளர்த்து வந்தான். எலிஸா இரக்க இருதயம் கொண்ட ஆனந்தத்தை விரும்பும் மனிதன். அதனால் அவன் குடியையும், பொடியையும், பாட்டுகளை விரும்பினாலும் சமாதான முறையிலே, பிறருக்குத் துன்பம் தராத முறையிலே வாழ்ந்து வந்தான். சுருட்டைத் தாடிக்காரனான வழுக்கு மண்டையை உடையவன்.

ஒரு நாள் இருவரும் சந்தித்தனர். ''எப்பொழுது புறப்படலாம்'' என்று உற்சாகத்துடன் கேட்டான் எலிஸா.

யூபிம் தயங்கினான். அவன் மூளையில் பக்தியைவிட பணபைத்தியமே அதிகமாகக் குடிகொண்டிருந்தது. யாத்திரை புறப்பட்டால் வீட்டின் வருமானம் போய்விடுமே.... மகன் உருப்படாத சோம்பேறியாயிற்றே. இருக்கும் செல்வத்தையும் அவன் பாழாக்கித் தொலைத்தால் என்ன செய்வது.... என்றெல்லாம் அவனுடைய சபல சித்தம் குழம்பியது.

உலகப்பற்றற்று மகிழ்ச்சியே வடிவாய் நின்ற எலிஸாவின் போக்கு அவனுக்கு வியப்பையும் பொருமையுணர்ச்சியையும் தான் உண்டாக்கியது. ''இந்தப் பரதேசிப் பயலால் எப்படி இவ்வளவு சந்தோஷமாக இருக்க முடிகிறது! நினைத்தபோதெல்லாம் யாத்திரை கிளம்ப முடிகிறது'' என்று நீண்ட நேரம் குழம்பிய பிறகு கடைசியாக ஜெருசலேம் யாத்திரையைத் தொடங்குவது என்று யூபிம் தீர்மானித்தான்.

மூலக் கதை :
லியோ டால்ஸ்டாய்

தமிழாக்கம் :
கோஸ்தா

ஒருநாள் இருவரும் புறப்பட்டனர். ஊரார் பிரமாத ஆரவாரத்துடன் அவர்களுடைய புண்ணிய யாத்திரையைத் தொடங்கி வைத்தனர்.

எலிஸா ஊரைவிட்டுப் பிரிந்ததும் யாதொரு கவலை இல்லாமல் நல்ல மனதோடே போய்க் கொண்டிருந்தான்.

யூபிம் நன்றாகவேதான் நடந்தான், அதிகம் பேசாத அவன் பிறருக்குத் துன்பம் கொடுத்தது கிடையாது என்றாலும், அவன் மனது மட்டும் நிம்மதியே அடையவில்லை. அவனால் வீட்டைப் பற்றி நினைக்காமல் இருக்கவே முடியவில்லை. தன் மகனுக்கு இதைச் சொன்னேமோ? இல்லையோ? என்று நினைப்பான். அதை அவன் செய்வானு என்ற சந்தேகம் வேறு வரும். வழியில் எப்பொழுதாவது உருளைக் கிழங்கைப் பார்த்தால் அல்லது தோட்டங்களைப் பார்த்ததும் அவன் மகன் நினைவே வரும். அந்த மன எழுச்சியால் வீடு திரும்பி விடலாமா என்று கூட எண்ணுவான்.

அப்படி நடந்துகொண்டிருந்த அவர்கள் ஐந்து வாரங்களைக் கடத்தி விட்டனர். புது சப்பாத்துக்கூட கிழிந்து விட்டன. அந்த நிலையில் அவர்கள் சின்ன ரஷ்யாவை அடைந்து விட்டார்கள். அதற்கு முன்பெல்லாம் அவர்கள் வழிநெடுக உணவுக்கும், உடைக்கும் செலவு செய்தே வந்தார்கள். ஆனால் அங்கு மக்கள் அவர்களை அன்போடு வரவேற்றதும் அல்லாமல் மற்ற பொருள்களை எல்லாம் விலை வாங்காமலே கொடுத்தார்கள். எனவே அவர்களுக்கு 500 மைல்கள் செலவு செய்யாமலே போக முடிந்தது. கடைசியாக அவர்கள் இப்பொழுது பஞ்சம் நிறைந்த பாகத்தை அடைந்து விட்டார்கள். அந்நிலையில் ''நான் குடிக்கவேண்டும்'' என எலிஸா சொன்னான்.

''எனக்குத் தாகமில்லை. நீ குடித்து வா'' என்றான் மற்றவன். நின்றான் எலிஸா ''எனக்காகக் காத்திராதே நான் இந்தக் குடிசைக்குள்போய் குடித்து விட்டு உன்னைக் கொஞ்ச நேரத்திற்குள் பிடித்து விடுகிறேன்'' என்றான்.

''நல்லது'' என்று சொல்லிய யூபிம் தொடர்ந்து நடந்து கொண்டே போனான். எலிஸா குடிசையை நோக்கி நடந்தான்.

அந்தக் குடிசை மண் சுவரால் கட்டப்பட்டு கீழே கருப்பும், மேலே வெள்ளையும் பூசப்பட்டிருந்தது. மண்ணால் கட்டப்பட்ட சுவர் இடையிடையே வெடித்தும், மேல் பாகத்தில் இடிந்தும் கிடந்தது. வெகு நாள் வரை சரியாக்கப்படாத குடிசை என அறிந்து கொண்ட அவன் அது வழியே பார்த்தான். ஒரு உருவம் பெஞ்சு அருகிலே தரையோடு தரையாய் படுத்திருந்தது. அந்த உடை சின்னரஷ்யாவின் கலாச்சாரத்தை எடுத்துக் காட்டியது. அப்படி காட்டிய அந்த உருவத்தின் மேல் சூரிய வெளிச்சம் அடித்துக் கொண்டிருந்தும் எழும்பாத அது மனித உருவம் தான் என அறிந்த அவன் தண்ணீர் கேட்டான். ஆனால் மறு பதில் கிடைக்கவில்லை.

எலிஸா நினைத்தான் அவன் சுகவீனமாய் இருக்க வேண்டும் என. என்றாலும் பலமுறை பலவாறு சொல்லி அழைத்துப் பார்த்தான் பதிலே இல்லை. ஊன்று கோலால் தட்டிப்பார்த்தான். அதற்கும் பதிலேஇல்லை. அதனால் அவன் திரும்பிப் போகலாம் என்று எண்ணும் போது உள்ளே அசைவு கேட்டான், எனவே என்னதான் நடக்கும் பார்ப்போம் என முடிவு கட்டினான்.

கதவைத் திறந்து கொண்டு அவன் உள்ளே நுழைந்தான். அதன் பின்தான் உள் கதவு திறக்கப்பட்டது. அங்கே இடது பக்கம் அடுப்பு இருந்தது. ஒரு மூலையிலே மேசை. அதன் பக்கத்திலே ஒரு பெஞ்சு. அதிலே ஒரு பெண் சட்டையை அணிந்து

கொண்டு கவலை தாங்காமல் தலையை மேசையிலே சாய்த்து வைத்திருந்தாள். அவளிடம் ஒட்டிய வயிறை உடைய சிறுவன் ஒருவன் அழுது கொண்டு 'சாப்பிட ஏதேனும் தா' என நச்சரித்துக் கொண்டிருந்தான். இவைகளைப் பார்த்த அவன் உள்ளே நுழைந்தான். அங்கே உருண்டு கொண்டே முகத்தைத் தொங்கப் போட்டிருந்த வயது சென்ற கிழவி அவனைத் தலை தூக்கிப் பார்த்தாள்.

எலிஸா அவள் பக்கத்திலே வந்து ''எனக்குக் கொஞ்சம் தண்ணீர் வேண்டும்'' என்றான்.

''இங்கு ஒருவரும் இல்லையே உனக்குத் தண்ணீர் தர, நீ உன் வழியே போ'' என்றாள்.

''வயது வந்த இவளைப் பார்க்க இங்கே ஒருவரும் இல்லையா?'' என எலிஸா கேட்டான்.

''இல்லை! இல்லவே இல்லை, நாங்களே இங்கே சாகிறோம்'' என பதில் வந்தது. அத்தோடு புதிதாகவந்த அவனிடம் தள்ளாடியவாறு ஒரு மனிதன் நிற்கக் கூட தைரியமில்லாமல் இருந்த அவன், விழுந்து எழுந்திருக்க முடியாமல் பேச நினைத்தான், முயற்சியும் செய்தான். அவன் ஒரு வார்த்தை பேசுவதற்கு முன் ஒரு பெருமூச்சு எடுக்க வேண்டியதிருந்தது.

எலிஸா அவைகளை எல்லாம் பார்த்துவிட்டு தனது பொட்டணங்களை எல்லாம் கீழே வைத்தான். கத்தியால் ரொட்டியை துண்டுகளாக வெட்டி அந்த பலம் அற்ற மனிதனிடம் நீட்டினான். அவன் அதை வாங்க மறுத்து தன் பையனை சுட்டிக் காட்டி கொடுக்கும்படிக் கேட்டான். எலிஸா அவனிடம் கொடுக்கவே சிறுவன் இரண்டு கைகளாலும் பறித்துத் தின்றான். அதன்பின் மற்றவர்களுக்கு எல்லாம் கொடுத்தான். கிழவி ''கொஞ்சம் தண்ணீர் கொண்டுவர முடியுமா?'' என அவனிடம் கேட்டாள்.

''கிணறு எங்கே இருக்கிறது?'' இது எலிஸாவின் சாந்தக் கேள்வி! அவள் இடத்தைச் சொன்னாள். அதற்குப் பின் அவன் வெளியே போய் தண்ணீர் கொண்டு வந்ததுமல்லாமல் ஊருக்குள்ளே போய் அவர்களுக்கு வேண்டிய சிலபொருள்கள் வாங்கி வந்தான். அவனே நெருப்பு பற்ற வைத்து சமைத்து எல்லோருக்கும் கொடுத்தான்.

அருந்திய பின் ஒருவர் மற்றவர் மடியிலே சாய்ந்தனர். அந்த நிலையில் தங்களுக்கு எப்படித் துன்பம் நேர்ந்தது என அவர்கள் சொல்ல, அவன் கேட்கவே அவன் யூபிமோடு சேரும் எண்ணத்தை நிறுத்திவிட்டு அவர்களோடு தங்கி அவர்களுக்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்து வந்தான். அதனால் மூன்று நாட்களுக்குள் அவர்கள் எல்லோரும் நல்ல நிலைமையை அடைந்துவிட்டனர்.

நான்காவது நாள் அர்ச்சிஷ்டவர்களின் திருநாளைக் கொண்டாடும் அன்று, காலையிலே கோவிலுக்குப் போய்விட்டு அவர்களோடு திருநாள் விருந்து அருந்தினான். அவன் அன்று சாயங்காலமே புறப்பட நினைத்தான். ஆனால் அவர்களை அந்நிலையில் விட்டுப் பிரிய அவன் மனது சம்மதிக்கவில்லை. சாந்தி அடைய தூங்கச்சென்ற அவன் கோழி கூவும் நேரத்தில் பிள்ளைகளின் அழுகுரலைக் கேட்டான். தனக்கு நிம்மதியை வரவழைக்கக் ''கடல் கடந்து ஆண்டவனை சந்திக்கப் போவதை விட நிம்மதியுடனே ஏழைகளுக்காக செலவு செய்வது நல்லது'' என முடிவு கண்டான்.

முடிவு கொண்ட அவன் காலையிலே எழுந்து, ஒத்திக்கு ஏழை

களாகிய அவர்கள் கொடுத்திருந்த நிலத்தைப் பணக்காரர்களிடமிருந்து திருப்பியதோடு நில்லாமல் ஒரு வண்டியும், விலைக்கு இருப்பதைக் கண்டு அதையும் வாங்கி, ஒரு மூட்டை மாவு அத்துடன் அவர்களுக்காக வாங்கி வரும் வழியில், இரண்டு பெண்கள் அவனைப் பற்றிக் கதைசொல்வதை கேட்டுக் கொண்டு, குதிரையை ஓட்டிக் கொண்டு குடிசைக்கு வந்தான் எலிஸா. அவைகள் எல்லாம் தங்களுக்குத்தான் என அவர்கள் அறிந்ததும் அவர்களால் ஆனந்தப்படாமல் இருக்க முடியவில்லை. அன்று இரவு எல்லோரும் தூங்கிய பின் ஒருவருக்கும் தெரியாமல் தன் பொட்டணத்தை மட்டும் எடுத்துக் கொண்டு யூபிமைத் தேடிப் போய்விட்டான்.

எலிஸா மூன்றரை மைல்கள் நடந்திருப்பான், அதற்குள் ஒரு மரத்தடியில் தன் சாமான்களை அவிழ்த்துப் பார்த்துக் கொண்டு, பணத்தை எண்ணிப் பார்த்தான். மிகவும் கொஞ்சமாகவே இருந்தது. அவற்றை வைத்துக் கடல் கடக்க முடியாதே என வருந்தினான். "யூபிம் தனக்காக மெழுகு வர்த்தி ஏற்றி வைப்பான். ஆனால் என் பிரதிக்கனை சாகும் வரை என்னோடுதானே இருக்கும், இருந்தாலும் இரக்கமுள்ள தேவன் என்னை மன்னிப்பார்" என நினைத்து தன் சாமான்களை எல்லாம் கட்டிக்கொண்டு ஒருவருக்கும் தெரியாமல் வீடு திரும்பினான்.

அப்பொழுது அறுவடை நேரம் ஆனதால் வீட்டில் எல்லோருமே ஆனந்தமாகத்தான் இருந்தனர். அவர்கள் திரும்பி வந்த அவனிடம் பல கேள்விகளைக் கேட்டனர். ஆனால் அவன் அவர்களுக்கு நடந்தவைகளை எல்லாம் சொல்லாமல் "கடவுள் கட்டளை அப்படி. நான் பணம் முழுவதையும் வழியிலே செலவு செய்துவிட்டு நண்பனையும் தவற விட்டுவிட்டேன்" என்றான். யூபிம் குடும்பத்தார் கேட்ட கேள்விகளுக்கும் அவன் அதே பதில் தான் சொன்னான். அவர்கள் எல்லாம் அறிவுள்ள அவன் அப்படி மடத்தனமாய் நடந்து கொண்டானே என அனுதாபப்பட்டனர். பேசினர். அவனும் கேட்டான். ஆனால் நாளடைவிலே அவர்கள் எல்லாம் அதை மறந்தே விட்டனர்.

எலிஸா குடிசையில் வறுமையுடன் வாடியவர்களோடு இருக்கும் பொழுது யூபிம் அவனுக்காக வெளியிலே எதிர் பார்த்துக் கொண்டே இருந்தான். கொஞ்சத் தூரம் நடந்து அவ

னுக்காக காத்து நின்றுன். இளைப்பால் தூங்கிக்கூட விட்டான். விழித்தான். அப்படி இருந்தும் அவன் வராதது இவனுக்கு ஆச்சரியமாகவே இருந்தது. எலிஸா முன்னுலே போயிருக்கலாம் என்ற எண்ணத்தோடு தொடர்ந்து நடந்தான்.

போகும்வழியில் முன்புஜெருசலேம் சென்ற ஒரு யாத்திரிகரைச் சந்தித்து அவருடன் பேசிக் கொண்டே போனுன்.

அவர்கள் ஒடிசாவைச் சேர்ந்ததும் கப்பலுக்காக மூன்று நாட்கள் காத்து இருக்க வேண்டியதிருந்தது. இதற்குள் ஏராளமான யாத்திரிகர்கள் அங்கே கூடிவிட்டார்கள். அந்த நிலேயிலும் யூபிம் எலிஸாவை விசாரித்தான். கப்பல் புறப்பட்டதும் முதல் நாள் பிரயாணம் நன்ருகவே இருந்தது. ஆனுல் சாயங்காலம் ஏற்பட்ட புயலால் கப்பல் அசைந்து ஆடியது. மூன்றும் நாள் புயல் ஓய்ந்த நிலேயில் அவர்கள் கான்ஸ்டாண்டி நோபிளே அடைந்தனர். அதன்பின் அவர்கள் சிம்ரினு, அலெக்ஸாண்டிரியா, ஜாபா முதலிய இடங்களில் தங்கிவிட்டு அங்கிருந்து நடந்து மூன்றும் நாள் நிலவு நேரத்தில் ஜெருசலேம் அடைந்தனர்.

பரிசுத்த இடங்களே சந்திக்கு முன் ஒரு சந்நியாசி வரும் யாத்திரிகர்களின் காலேக் கழுவி முத்தி செய்தே அனுப்பினர். அதன் பின்னரே அவர்கள் பல புனித இடங்களேத் தரிசிக்கச் சென்றனர்.



எல்லோரும் பரிசுத்த கல்லறைக்குப் பூசைக்குப் போனுர்கள். ஜனத்திரள் கூடவே அங்கும் இங்கும் அசைய முடியாத நிலேயிலே பூசை கண்டார்கள். யூபிம் அங்கே நின்று ஜெபம் செய்து கொண்டிருக்கும்பொழுது பரிசுத்த விளக்குகள் எரிந்து கொண்டிருப்பதற்குப் பக்கத்தில் எலிஸாவைப் போல் ஒருவனேக் கண்டான். ஒருவேளே எலிஸா தனக்குமுன்பே வந்திருக்கலாம் என்று நினேத்த நேரத்திலே அந்த மனிதன் மூன்று நேரம் வணங்கியதைப் பார்த்ததும் உண்மையிலே அது எலிஸா என்று அறிந்துகொண்டான். பூசை முடிந்ததும் முன்னுலே நெருக்கிக் கொண்டு எலிஸாவைத் தேடிப் போனுன். எங்கே தேடினுலும் எலிஸா அகப்

படவில்லை. கவலையோடு விடுதி திரும்பினான்.

அதற்கு அடுத்த நாளும் அவனுக்கு இட நெருக்கடியால் முன்னே போக முடியவில்லை. ஆனால் எலிஸா கல்லறையின் வலது பக்கத்தில் நிற்பதைப் பார்த்தான். இந்தத் தடவை அவனை எப்படியும் விடக்கூடாது என நினைத்து முன்னாலே அவனைப் பிடிக்க தள்ளிக் கொண்டு போனான். ஆனால் அவன் அங்கு காணப்படவில்லை.

மூன்றும் நாளும் எலிஸாவை அங்கே கண்டான். இந்தத் தடவை அவனைத் தவற விடக் கூடாது என்று எண்ணி வாசலிலே அவன் வருவதுவரை காத்து இருந்தான். பாதி நாளும் கழிந்து விட்டது எல்லா யாத்திரிகர்களும் வந்து விட்டார்கள். ஆனால் எலிஸா மட்டும் வரவே இல்லை!

யூபிம் ஜெருசலேமில் தங்கி விட்டான் ஆறுவாரங்கள். அங்கிருந்து பெத்லேகம், பெத்தானி, ஜோர்டான் இது போன்று பல இடங்களையும் சந்தித்து விட்டு, அங்கிருந்து ஞாபகார்த்தமாக பல பொருட்கள் எடுத்து போன வழியே திரும்பினான்.

எலிஸா பிரிந்த இடத்திற்கு வந்ததும் அவனை ஓர் சிறுமி "தாத்தா! தாத்தா! எங்கள் வீட்டிற்கு வாருங்கள் என அழைத்தாள். இப்பொழுது பயிர்கள் எல்லாம் செழிப்பாய் இருந்ததால் அந்தச் சிறுமி வீட்டில் எல்லோருமே செழிப்பாக இருந்தனர். அதனால் தான் அந்தச் சிறுமியும் அழைத்தாள். அழைத்த அந்தச் சிறுமி வேறு யாருமல்ல; எலிஸா காப்பாற்றிய சிறுமியேதான்.

யூபிம் அங்கே போகாமல் தன் வழியேதான் போக நினைத்தான். ஆனால் அந்தச் சிறுமி சிரித்துக் கொண்டே அவனைக் குடிசைக்கு இழுத்துப் போனாள். அங்கே அவனை வரவேற்று ஆவன செய்தனர். அறியாத மனிதனான அவனுக்கு உதவி செய்வதற்காக நன்றி கூறினான். அதற்கு அந்தப் பெண் மறுப்புக் கூறி "கடவுளைப்பற்றியே நினைக்காத சாகக் கிடந்த எங்களை கடவுள்தான் ஒரு அறியாத மனிதனை, உங்கள் போன்ற ஒருவரை அனுப்பிக் காப்பாற்றினார்" என்று கூறியதுடன் நின்றுவிடாமல் நடந்ததையும் வயசு சென்ற அந்தப் பெண் கூறினாள்.

அதன் பின் தான் ஜெருசலேமில் மூன்று நேரம் எலிஸாவைப் பார்த்தது பற்றி நினைத்தான். இப்படி ஏழைகளுக்கு உதவினதால்தான் எனக்கு முன்னால் அங்கே இடம் பெற்றிருக்கிறான் என்று எண்ணினான் யூபிம்.

ஒரு வருடம் கழித்து ஊருக்கு வந்தான் யூபிம். எலிஸா வீடு வழியே போக வேண்டியதிருந்தது. உள்ளே சென்று தான் வந்திருப்பதை அறிவிக்கவே, வரவேற்றான். 'யாத்திரை எப்படி'?" என. அவன் கேட்க, "ஏதோ என் கால்கள் என்னை நடத்தின. நான் உனக்காக ஜோர்தானிலிருந்து பரிசுத்த தண்ணீர் கொண்டு வந்திருக்கிறேன், வந்து பெற்றுக்கொள். ஆனால் கடவுள் என் யாத்திரையை ஆசீர்வதித்தாரோ என்னவோ எனக்குத் தெரியாது" என்றான்.

ஆனால் அவன் மட்டும் குடிசையில் உள்ளவர்களைப் பற்றியோ எலிஸாவை ஜெருசலேமில் பார்த்தது பற்றியோ அவனிடம் சொல்ல வில்லை. ஆனால் "இந்த உலகில் கடவுள் ஒவ்வொரு மனிதனும், அவனவன் செய்ய வேண்டிய வேலைகளை அவனவன் அன்பாலும், நல்ல செய்கைகளாலும் செய்யக் கட்டளை இட்டு இருக்கிறார்" என நினைத்துக் கொண்டான்.

மதிப்புரை

சிந்தனையாளர் பிளேட்டோ: ''தமிழில் நல்ல புத்தகங்களே கிடையாது. வெறும் காமரசக் குப்பைகளும், அரசியல் பெயரால் வெளிவரும் கூளங்களும்தான் எங்கும் காணக் கிடைக்கிறது'' என்று மனம் நொந்து நின்ற தமிழ் மக்களுக்கு ஒரு நல்ல புத்தகத்தைத் தந்து இருண்டு கிடந்த தமிழ் இலக்கியப் பாதையில் நம்பிக்கை விளக்கேற்றுகிறார். திரு. அரு. ராமநாதன்.

''தேசம், இனம், மதம், கலாச்சாரம் என்னும் குறுகிய எல்லைச் சுவர்களைத் தாண்டி விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் நின்று அடிவானத்துக்கு அப்பாலும் ஊடுருவிப்பார்த்து எல்லாவிதச் சிந்தனைகளின் மூல வேர்களையும் இரண்டாயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன் ஒரு தனி மனிதன் சிந்தித்தான். அவன் தான் சிந்தனையாளன் பிளேட்டோ. சுருங்கச் சொன்னால் அவன்தான் நவீனச் சிந்தனைகள் அனைத்திற்கும் மூல வேர்...'' என்று கம்பீரமாக பிளேட்டோவை அறிமுகப் படுத்தும் ஆசிரியர் கொஞ்சும் அழகிய தமிழ் நடையில் வெகு அருமையாக பிளேட்டோவின் சரித்திரத்தையும், அவனது சிந்தனைகளையும் விமர்சனம் செய்கிறார்.

பிளேட்டோவின் நூல்களை விமர்சனம் செய்கையில் ஆசிரியர் ஒரு புதிய கவர்ச்சிகரமான முறையைக் கையாளுகிறார். உலக நீதி நூலான தமிழ் மறை திருக்குறளின் 'பால்' பிரிவுகளின் வழியில் (1) அறத்துப் பால், (2) பொருட்பால், (3) காமத்துப்பால் எனப் பகுத்துக் கொண்டு குறளடிகளின் நீதி நெறியோடு ஆங்காங்கே ஒப்புவமை கூறி பிளேட்டோவின் நூற்களை ஆசிரியர் விமர்சிக்கிறார். இடையே இன்றுள்ள அரசு முறைகளுக்கும் பிளேட்டோவின் முறைகளுக்கும் உள்ள ஒற்றுமை – வேற்றுமைகளையும் விளக்கிக் காட்டுகிறார்.

அறிஞர் சாமிநாத சர்மாவுக்குப் பிறகு இந்த நூலின் மூலம் ஒரு நல்ல நூலாசிரியரை தமிழகம் இப்பொழுது புரிந்துக் கொள்கிறது.

ஆசிரியர்: அரு. ராமநாதன்; வெளியீடு: பிரேமா பிரசுரம்; சென்னை-24. விலை ரூ. 1-4-0.

—ர. ச.

நிலவினிலே: இத்தொகுப்பில் அகிலனின் பதினொன்கு சிறுகதைகள் அடங்கியிருக்கின்றன. மூன்றாவது முறையாக இச்சிறு கதைத் தொகுப்பை பிரசுரகர்த்தர்கள் வெளியிட்டிருக்கின்றனர். கதைகள் ஒவ்வொன்றிலும் ஆழ்ந்த கருத்தும் சிந்தனைச் செழிப்பும் நிறைந்து இருக்கின்றன. 'ரத்தக் கலப்பு', மனத்தை விட்டு அகலாத ஒரு கற்பனை. தியாகத்தை வெளிப்படுத்துவது 'துன்பத்தின் மத்தியில்' என்ற கதை. 'காணிக்கை' நம் மனத்தை உருக்கி விடுகிறது. காதலன் ஒருவனின் உடைந்த உள்ளத்தை 'இதயச் சிறையிலே' நன்கு படம் பிடித்திருக்கிறார். எல்லாவற்றிற்கும் சிகரமாக அமைந்திருக்கிறது 'துணைவி' என்ற கதை. சாதாரண எழுத்தாளனின் கற்பனைக்கு எட்டாத, தனக்கே உரித்தான கற்பனைத் தொடரில் இக்கதை உருவாகியிருக்கிறது. பொதுவாக இச்சிறு கதைத் தொகுப்பு தமிழர்களுக்கு ஒரு விருந்து.

வெளியீடு: பழனி பிரசுரம் மணிக் கூண்டு: புதுக்கோட்டை, விலை ரூ. 1—4—0.

சிந்தனையாளர் டார்வின் : குரங்கிலிருந்து மனிதன் உண்டானான் என்பதை, உலகத்தின் பல பாகங்களுக்குச் சென்று தான் அறிந்த கருத்தினை அறிஞர் டார்வின் கூறுகிறார். தாவரம், புழு, மீன், தவளை, பல்லி, பறவை, மிருகம், குரங்கு, மனிதன் இவைகளே ஜீவ ஏணியின் படிகள் என்பதை தன் சித்தாந்தத்தின் மூலமாக டார்வின் தெளிவு படுத்துகிறார். டார்வினின் வாழ்க்கை வரலாற்றையும் அவர் ஆராய்ந்தறிந்த சிறந்த கருத்துக்களையும் போதிய படங்களுடன் எடுத்துக் கூறி இருக்கிறார் ஆசிரியர். இந்து மத தசாவதாரத்தை டார்வின் கொள்கையுடன் ஒப்பிட்டு அவைகளுக்கு இடை இடையே விளக்கமாக படங்களுடன் கொடுத்திருப்பது போற்றத்தக்கது ஆனால் ஒரு இடத்தில் ஆசிரியர் குறிப்பிட்டிருப்பது நமக்கு குழப்பத்தைத் தருகிறது. உலகத்தில் மனிதன் தோன்றாது பிரம்மாண்டமான மிருகங்கள் தோன்றி உலாவிய காலத்தில் ஒரு பெரிய பூமி சம்பந்தப்பட்ட அதிர்ச்சி விளைந்ததாகவும் அப்போது பல பாகங்கள் கடலில் மூழ்கி விட்டதாகவும், கடலில் ஆழ்ந்திருந்த பலபகுதிகள் மேலெழும்பியதாகவும் கூறுபவர், மறைந்த பகுதிகளில் லெமூரியா என்னும் குமரிக்கண்டம் ஒன்று என்கிறார். குமரிக்கண்டம் கடலில் மூழ்கிய போது அதில் தமிழர்கள் உயர்ந்த நாகரிக சூழ்நிலையுடன் வாழ்ந்ததாக தமிழிலக்கியங்கள் நமக்குக் கூறுகின்றன. அப்படியிருக்க மனிதனே உண்டாகாத காலத்தில் தான் குமரிக் கண்டம் கடலில் ஆழ்ந்தது என்று ஆசிரியர் கூறுவது சற்று குழப்பத்தையே அளிக்கிறது. என்றாலும், எளிய நடையில் சரளமாக எழுதியிருக்கிறார் ஆசிரியர்.

ஆசிரியர் : ஜெகசிற்பியன் ; வெளியிடு: பிரேமா பிரசுரம்; சென்னை-24. விலை 1-4-0.

புதுயுகம் : (நாடகம்) அப்பாவிப் பெண்களை ஏமாற்றி மானத்தைப் பறித்த பின் அவர்களை அபலைகளாக்கி விடும் காம வெறியர்களுக்கு சாட்டையடி தரும் நாடகம் இது: ஒரு பால்ய விதவையைக் காதலிப்பது போல நடித்து அவளைக் கெடுத்து நடுத் தெருவில் விட்டதோடு அவளுக்கு இன்னல் மேல் இன்னல் தருகிறான் ஒரு கயவன். அவன் விதைத்த பாவத்தின் வினை இறுதியில் அவனையே சுடுகிறது. அவனுடைய மகளை ஒரு வாலிபன் காதலித்து தாய்மையடையச் செய்துவிட்டுப் பின் வஞ்சித்து விடுகிறான். இதை யுணர்ந்த அந்தக் கயவன் மனமுடைந்து தன் பழைய செயல்களுக்கு வருந்தி உயிர்விடுகிறான். இது தான் கதையின் கருவூலம். போலி அரசியல் வாதிகளின் வண்டவாளங்களை நகைச்சுவை ததும்பும் வசனங்களால் சமயம் வரும் போதெல்லாம் அம்பலப்படுத்துவது அபாரமாய் இருக்கிறது. நாடக நூல்கள் தமிழில் அதிகமில்லாத இந்த சமயத்தில் கவிஞர் கா. மு. ஷெரீப் தமிழிலக்கியக் களஞ்சியத்திற்கு ஒரு நல்ல மணியைத் தந்துள்ளார்.

ஆசிரியர் : கவி. கா. மு. ஷெரீப்; தமிழ் முழக்கம் பதிப்பகம் சென்னை-14. விலை 1-8-0.

ஜனநாயகம் : இப்புத்தகத்தில் அடங்கியுள்ள கட்டுரைகள் யாவும் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவை. சாதாரண பொது மக்கள் ரஸித்துப் படிப்பது சற்று கடினம். என்றாலும் உயர்ந்த விஷயங்களை சற்று அதிக விலையாக இருந்தாலும் கவலைப்படாது படிக்க விரும்புபவர்களுக்கு ஜனநாயகம் தகுதியுடையது.

வெளியிடுவோர் : வி. ஜி. சோமசுந்தரம். 'ஜனநாயகம்' காரியாலயம், 4, வேணு கோபாலபுரம், கடலூர். விலை ஒரு ரூபாய். —(புனர்வஸு)

பாக் - மண்ணில் அமரிக்க நிழல்?

★

பி. எஸ். ரசிதாசலம் பி. ஏ.

உலக நாடுகள் அனைத்திலும் குறிப்பாக ஆசிய நாடுகளில் பெரும் அரசியல் பரபரப்பை உத்தேச யு. எஸ்.-பாக் ராணுவ ஒப்பந்தம் உண்டாக்கியுள்ளது. அத்துடன் பாகிஸ்தானுக்கு அருகிலுள்ள நாடுகளில் பெரும் பீதியையும் உண்டாக்கியுள்ளது இவ்வொப்பந்தம். இவ்வொப்பந்தத்துக்கு மூலகாரணம் என்னவென்பதை ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட இரண்டு நாடுகளும் தலையாய ரகசியமாக வைத்துள்ளன. ஆயினும் பொதுவாக இவ்வொப்பந்தத்துக்கு, ஆசியாவில் கம்யூனிச ஆக்ரமிப்பைத் தடுப்பதே மூலகாரணம் என்று கூறுகின்றனர். அவர்கள் கூறுவதை உண்மையென்றே வைத்துக் கொண்டாலும் ஆசியாவில் உண்மையில் கம்யூனிச அபாயம் உள்ளதா என்பது சிந்திக்கத்தக்க தொன்ருகவுள்ளது. உலக சூழ்நிலைகளை வைத்துப் பார்க்கையில் ரஷ்யாவோ அல்லது கம்யூ. சீனுவோ: ஆசியா அல்லது யுரேஷிய நாடுகளோ எதன் மீதும் ஆக்ரமிப்பு நடத்தக்கூடிய நிலையிலில்லை யென்பதுதான் தெளிவாகிறது.

இதற்குக் காரணம், இரண்டாவது உலக யுத்தத்தில் ரஷ்யாவின் தேசிய சக்தி பெரும் அளவுக்கு விரையமாகிவிட்டது. இந்த யுத்தத்தால் சோவியத் நாட்டின் தொழில் கேந்திரஸ்தானங்கள், விவசாய உற்பத்திக் கூட்டுறவுப் பண்ணைகள், மேற்குப் பகுதியின் பிரம்மாண்டமான நகரங்கள் யாவும் பெருமளவுக்கு நாசமடைந்து விட்டன. சுமார் 25 வருஷங்கள் ரஷ்யா அரும்பாடுபட்டு சேகரித்த சக்தி வீணுக்கப்பட்டது. ஆதலின் ரஷ்ய நாட்டின் அரசியல், பொருளியல், தொழிலியல் புணரமைப்பிலேயே தன் கவனம் முழுதையும் செலவு செய்யவேண்டிய நிர்பந்தம் சோவியத் சர்க்காருக்கு ஏற்பட்டுள்ளது, மேலும் தோழர் ஸ்டாலினுடைய மறைவு புதிய பல உள்நாட்டுப் பிரச்னைகளை கிளப்பியுள்ளது. இச் சூழ்நிலைகளில் சிக்குண்டு கிடக்கும் சோவியத் நாடு உடனடியாக எதிர்காலத்தில் ஆக்ரமிப்பில் இறங்குமென்று நம்புவதற்கில்லை.

யுரேஷ்யாவின் மற்றுமொரு கம்யூனிஸ்டு கோட்டையான "மக்கள் சீனுவின்" நிலையும் இத்தகையதே. 14 வருடங்கள் கோமிண்டாங் கட்சியுடன் போர் நடத்தி வெற்றி கண்ட சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை எவ்வளவோ பிரச்னைகள் எதிர் நோக்கியுள்ளன. சீனுவின் தொழிலபிவிருத்தி, விவசாய உற்பத்தி, நிலச் சீர்த்திருத்தம் ஆகியவைகளில் அதன் கவனம் செலுத்தப்பட வேண்டியிருக்கின்றது. சகல துறைகளிலும் உள் நாட்டுச் சீர்திருத்தங்களை செய்தால் தான் கம்யூனிஸ்ட்

பாக் - அமரிக்க ஒப்பந்தம் அமெரிக்காவின் நீண்ட நாளைய கனவு; இந்தக் கனவு பலித்தால் எதிர் காலத்தில் ஆசியாவின் நிலை என்ன என்பதை கட்டுரையாளர் தெளிவாக அலசி ஆராய்கிருர்.

கட்சிக்கு மக்களது ஆதரவு கிடைக்கும். இவ்வாதரவைப் பெறுவதில் முழுக் கவனம் செலுத்திவரும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி உடனடியாக ஆக்ரமிப்பில் இறங்குமென்று நம்புவதற்கில்லை.

ஆனால் சீனப் படைகள் கொரியப் போரிலிறங்கினதைக் காரணம் காட்டுகின்றனர். கொரியப் போரில் சீனா இறங்கினமைக்கு அடிப்படையில் காரணங்கள் வேறு. கொரியப் பிரச்னை கொரியாவின் உள்நாட்டுப் பிரச்னையாக இருந்த வரையில் சீனா இந்தப் போரில் நேரடியாக இறங்கவில்லை. ஆனால் ஐ. நா. படைகள் தென் கொரியாவில் கால் வைத்தவுடன் இந்தப் போரால் தனது எல்லைகளுக்கும், உள் நாட்டு வேலைகளுக்கும் ஆபத்து நேரவிருப்பதாக அஞ்சுவதற்குச் சகல காரணங்களுமிருந்தன. ஆதலின் தன்னைத் தானே காப்பாற்றும் பாதுகாப்பு முறையில் சீனா கொரியாவுக்கு உதவி செய்ததாகத்தான் கூற வேண்டியுள்ளது. அது மட்டுமல்லாமல் கோமின்டாங் கட்சியின் ஆட்சி நடைபெறும் பார்மோசாத் தீவின்மீது ஆக்ரமிப்பு நடத்தத் தயங்கும் சீனா ஆசியாவில் மத்திய, தூரக் கிழக்குப் பகுதிகளில் ஆக்ரமிப்புப் போர் துவங்கும் என்று நம்ப முடியவில்லை.

இச்சூழ்நிலைகளை அமெரிக்கா உணராமலிருக்க முடியாது. உணர்ந்திருந்தும் கம்யூனிஸ ஆக்ரமிப்பு எதிர்ப்பு என்ற பெயரில் ஆசியாவில் தனது ராணுவ பலத்தைப் பெருக்க முற்படுகின்றதெனில் இதன் உள் நோக்கம்; ஆசியாவில் அமரிக்கக் காலனிகளை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணமாகவோ, அல்லது சமீப காலத்தில் உருவாகி வந்துள்ள ஆசிய உணர்ச்சியை நசுக்குவதோ, அல்லது ஒன்று சேர்ந்து உருவாகிவரும் மத்திய, தூரக் கிழக்கு நாடுகளின் தேசிய ஐக்கிய சம்மேளனத்தைப் பிரிப்பதாகவோ தான் இருத்தல் வேண்டும்.

அதே சமயத்தில் ஆசியாவில் கம்யூனிச எதிர்ப்பைப் பலப்படுத்துவதுதான் உண்மையான நோக்கமாயின் பாகிஸ்தானைவிட கம்யூனிச ஆக்ரமிப்புக்கு உடனடியாக இலக்காகக் கூடிய நாடுகள் கிழக்கிலும் மேற்கிலும் எத்தனையோவுள்ளன. கிழக்கேயிருந்து உருவாகும் ஆக்ரமிப்புக்கு பர்மா, இந்தோ சீனா, சயாம், போன்றவை உடனடியாக இலக்காகக் கூடியவை. அதேபோல ரஷ்யா ஆக்ரமிப்புப் போரைத் துவங்க விரும்புவதாயின் பாகிஸ்தானை விட நெருங்கியுள்ள நாடுகளும் உள்ளன. இந்த நிலையில் இவையனைத்தையும் விடுத்து பாகிஸ்தானுக்கு ராணுவ உதவியளிக்கப்படுவதின் உட்கருத்தைச் சந்தேகிக்காமலிருக்க முடியாது.

ரஷ்யா, சீனா ஆகிய தேசங்களில் கம்யூனிசம் வளர்ந்துள்ளதே என்று அஞ்சப்படுமாயின் ஏகாதிபத்ய சர்வதேச முதலாளித்வ ஆக்ரமிப்பைவிட "தேசீயக் கம்யூனிசம்" அப்படியொன்றும் அபாயகரமானதல்ல. ஒரு நாட்டின் அரசியல் பொருளாதார அமைப்பு முறை அந்த நாட்டுமக்களின் தேசீய அபிலாஷையைப் பொறுத்தது. சீனா, ரஷ்யாவில் கம்யூனிசம் வளருகின்றதெனில் அது அந்த நாட்டு மக்களின் விருப்பமாயிருந்தால் அதை உலகின் எந்த வல்லரசாலும் தடுக்க முடியாது. கம்யூனிச நாடுகளின் ஆக்ரமிப்பு எண்ணம் வெளிப்படாத வரையில் மற்ற நாடுகள் அது குறித்து அஞ்ச வேண்டியதில்லை. ஆசியாவில் ரஷ்ய, சீனா நாடுகளின் ஆக்ரமிப்பு எண்ணம் வெளிப்படவில்லை. அவ்

வாறு ஆக்ரமிப்பு ஏற்பட்டாலும் லும் 20-வது நூற்ருண்டின் சுதந்திரமடைந்த ஆசிய தேசிய இனங்கள் ஆக்ரமிப்புக்கு அடி பணிந்து விடமாட்டார்கள். தங் களது தேசிய சக்திகளை ஒரு முகப்படுத்திப் போராடியே தீருவர்.

அரசியல் உண்மைகள் இவ் வாறு இருக்க, அமரிக்கா பாகிஸ் தானுக்கு ராணுவ உதவியளிக்க முற்படுகின்றதெனில், வளர்ந்து வரும் ஆசிய உணர்ச்சியை ஒடுக்கித் தனது பலத்தை ஆசி யாவில் வேரூன்றுவதே முக்கிய நோக்கமாக இருத்தல் வேண் டும். ஆசியாவில் அமரிக்கபலம் கேந்திரமடைவதற்குத் தகுந்த பூகோள ரீதியான இடம் காஷ் மீரம் ஒன்றுதான். ஆதலின் காஷ்மீர்மீது அமரிக்காவுக்கு வெகு நீண்ட காலமாக ஒரு கண் உண்டு. காஷ்மீரில் அம ரிக்க ராணுவ முகாம் அமைப் பதை எந்தக் காலத்தும் இந் தியா அனுமதிக்காது. ஆதலின் காஷ்மீர் இந்தியாவுடன் இணைந் திருக்கும்வரை அமரிக்கர்களின் ஆசை நிறைவேருது. இதன் பொருட்டே காஷ்மீர் பாகிஸ் தானுடன் இணைவதை அம ரிக்கா மறைமுகமாக ஆதரித்து வந்துள்ளது. ஐ. நா. சபையும் அமரிக்க பலத்தால் வீண் கால தாமதம் செய்து வந்துள்ளது. அதுமட்டு மல்லாமல் இப்பொ ழுது அமரிக்க அரசியல் வாதி கள் பலர் நேரடியாகவே காஷ் மீர் பாகிஸ்தானுடன் இணை வதை எதிர்க்க ஆரம்பித்துள் ளனர். செனட்டர் நோலண்டு போன்றவர்கள் காஷ்மீர் இந்தி யாவுடன் இணைய விட்டுவிட லாகாதென்பதைப் பச்சையா கவே தெரிவித்து விட்டனர்.

காஷ்மீரில் பாகிஸ்தான் ஆரம்ப முதலே தோல்வியை அனுபவித்து வந்துள்ளது. தோல்வியை அனுபவித்து வந் துள்ள பாகிஸ்தான் ராணுவ பலம் கொண்டு காஷ்மீரை அடைய முயற்சிப்பதில் ஆச்ச ரியமில்லை. அப்படி காஷ்மீர் அபகரிக்கப்படுமாயின், அந்த ராணுவ உதவி அமரிக்காவிட மிருந்து கிடைக்கும் பொழுது காஷ்மீரில் அமரிக்கா தனது ராணுவ கேந்திர ஸ்தானத்தை அமைத்துக் கொள்ளுவது மிகச் சுலபமான வழி. பாக்கிஸ்தா னுக்கு ராணுவ உதவி யளிப்பத ற்கு முன்பு காஷ்மீர் பிரதமர் ஷேக் அப்துல்லாவை அமெ ரிக்கா தனதுவழிக்குக் கொண்டு வரும் முயற்சியில்துவங்கி ஷேக் அப்துல்லாவையும் தனது பிடி யில்சிக்க வைத்தது. ஆனல் காஷ்மீர் தேசிய மகாநாடு உஷா ராகயிருந்ததுடன் அப்துல்லா வைக் கீழிறக்கி காஷ்மீரைக் காப்பாற்றியது. ஆதலின் இப் புது முயற்சியில் அமெரிக்கா இறங்கியுள்ளது.

ஆயினும் காஷ்மீரின் இன் றைய நிலை முற்றிலும் காறுபட் டுள்ளது. காஷ்மீர் இன்று இரண்டு பிரிவுகளாகப் பிரிந் துள்ளது. போர் நிறுத்தக் கோட்டிற்கு அப்பால் ஆக்ரமிப் பாளரிடம் உள்ள காஷ்மீர்பகுதி களின் நிலைதான் இனி சிந்திக் கப்பட வேண்டியது. போர் நிறுத்தக் கோட்டிற்கு இப்பால் ஸ்ரீநகரைத் தலைநகராகக்கொண் டுள்ள காஷ்மீர், இந்தியாவுடன் இணைய காஷ்மீர் அரசியல் நிர்ணய சபையின் தீர்மானம் மூலம் மக்களின் ஏகோபித்த முடிவைத் தெரிவித்துள்ளது. இந்த முடிவு வெளியான பிறகு காஷ்மீர் பிரச்னை ஒருவாறு முடிவடைந்து விட்டது. அதுமட்டு மல்லாமல் ஐ. நா. சபையில் காஷ்மீர் பிரச்னை காலாவதியாகிவிட்டது என்பதையே காட்டுகின்றது.

போர் நிறுத்தக் கோட்டிற்கப் பாலுள்ள காஷ்மீரின் நிலை குறித்துக் காஷ்மீர் மக்கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தால் அல்லது காஷ்மீர் தனது எல்லை களை அடைய விரும்பினுல் அந்த சமயத்தில் ஏற்படும் நிலையை

சமாளிக்க பாகிஸ்தானால் முடியாது. அந்த சூழ்நிலை ஏற்படுகையில் எஞ்சியுள்ள காஷ்மீரை யாரவது காப்பாற்ற அல்லது முடிந்தால் ஆக்ரமிப்பை நடத்த பாகிஸ்தான் அமெரிக்க ராணுவத்தை நம்பியுள்ளது.

காஷ்மீர் அரசியல் நிர்ணய சபை இந்தியாவுடன் இணைய தீர்மானித்து இணைந்த பிறகு காஷ்மீருக்கு ஏற்படும் ஆபத்து இந்தியாவுக்கு ஏற்பட்டதாகவே கருதப்படும். அச்சமயத்தில் பாதுகாப்புக்காக இந்திய ராணுவம் தனது வேலைகளைச் செய்ய வேண்டியது இயற்கை. அல்லது போர் நிறுத்தக் கோட்டிற்கப்பாலுள்ள காஷ்மீர் மக்கள் காஷ்மீரிகளாக வாழ, காஷ்மீருடன் இணைய விரும்பி கிளர்ச்சி செய்தால் காஷ்மீர் சர்க்கார் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீற வேண்டியது அவசியமாகலாம். அந்த நிலை ஏற்படும் சமயத்திலும் பாக்கிஸ்தான் ராணுவபலத்தை நம்பியே உள்ளது.

இப்படிச் சூழ்நிலைகள் ஏற்படும் சமயத்தில் அமரிக்காவின் நீண்ட நாள் கனவு நினைவாக வழி யிருக்கின்றது. ஆனால் காஷ்மீர் மண்ணில் அமெரிக்க பலம் கொண்ட பாக்கிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் மோதல் ஏற்படுமாயின், அதன் விளைவுகளால் ஏற்படும் சூழ்நிலைகளைக் கவனிக்கும் ஆசியா நாட்டுப் படைகள் அமெரிக்க பலத்தை ஒடுக்க ஆயுதம் தாங்குவது தவிர்க்க முடியாததாக மாறி விடும். அவ்வாறு ஏற்படுகையில் பாக்கிஸ்தான் மண்ணில் அமெரிக்க – ஆசிய மோதல் ஏற்பட சகல சூழ்நிலையும் உருவாகிவிடும்.

இந்தியா தனது கருத்தை தெளிவாக சர்ச்சைக் கிடமில்லாமல் கூறிவிட்டது. ஆதலின் இந்த அபாயத்திலிருந்து நாட்டைக் காப்பாற்ற நேருவின் அழைப்புக்கிணங்க இந்திய மக்கள் ஒன்று திரண்டு அவருக்குப் பக்கபலமாக இருத்தல் இன்றியமையாததாகும்.

பட உலகம்

[எம்பிஎஸ்]

விமர்சனம் :

மனோகரா

மக்களிடையே நீண்ட நாட்களாகப் பிரசித்தமான ஒரு கதை, பல முறை நாடகமாக நடிக்கப்பட்டு சலிக்காமல் ஆயிரக் கணக்கில் மக்கள் பார்த்து ரசித்த ஒரு கதை படமாக்கும் பொழுதும் பூரண வெற்றியைத் தந்துவிடும் என்று எதிர்பார்த்துவிட முடியாது. நாடக மேடைகளில் மிகப் பிரசித்தமாக விளங்கும் கதை படத்தில் உப்புச் சப்பற்றுத் தோல்வியடைந்து விடுவதுதான் பட உலகில் பெரும்பாலும் நாம் காணும் காட்சி.

ஆனால் மனோகரா இந்த நியதியைத் துரத்தி அடித்துவிட்டு வெற்றிக் கொடி நாட்டிவிட்டது என்பது உண்மையாகவே பிரமிக்கத் தகுந்த செய்திதான்.

மேல் நாட்டுப் படங்களுக்கு இணையான பெரிய காட்சி ஜோடனைகளும், விறுவிறுப்பான சம்பவ அமைப்புகளும், பாத்திரங்களுக்கேற்ற நடிகர்களும், உணர்ச்சியூட்டும் வசனங்களும் தான் மனோகராவின் வெற்றிக்குத் துணை புரிகின்றன.

கதை அமைப்பில் பொதுவாக பல குறைபாடுகள் உள்ளன. சம்பவங்களும் பல தடவை நாம் பார்த்து அலுத்தவை தான் என்றாலும் பழைய சம்பவங்களை புதுமை கலந்த பாணியில் அடுத்து என்ன நடக்



மனோகராவில் வசந்தசேனையாக நடிக்கும் டி. ஆர். ராஜகுமாரி

மனோகராவில் ஓர் உருக்கமான கட்டம்

பாட்டுக்கள் நினைவில் நிறுத்தும் அளவுக்கு இன்னும் கொஞ்சம் குறிப்பிடத்தக்க இனிமையுடன் அமைந்து இருக்கலாம்.

பொதுவாக குறைந்த வசதிகளை வைத்துக் கொண்டு இவ்வளவு பிரமாதமாக தயாரித்த பெருமை மனோகர் பிக்சர்ஸ் உரிமையாளர் திரு. சோமசுந்திரத்தையே சாரும். பட உலக வாழ்வில், திரு. சோமசுந்தரம் படத் தயாரிப்பில் ஒரு உயர்ந்த இடத்தைப் பெற்றுவிட்டார் என்று நிச்சயமாகக் கூறலாம். 'மனோகரா'வின் மூலம் அவர் அடைந்துள்ள வெற்றியைக் கண்டு உண்மையாகவே மேனாட்டில் தயாரித்த 'சாம்சன் டிலைலா' வையும், வடநாட்டில் மெஹ்பூப் தயாரித்த 'ஆன்' படத்தையும் விட சிறந்த முறையில் தயார் செய்ய முடியுமென்று தமிழகம் பெருமைப்படும் அளவுக்கு திரு. சோமசுந்தரம் நிரூபித்து காட்டியிருக்கிறார்.

கும் என்ற ஆவலை எழுப்பும் வண்ணம் அமைத்திருக்கின்றனர். வசனம் கதையின் குறைகளுக்கெல்லாம் ஈடு கொடுத்துக் கம்பீரமாக ஒலிக்கிறது.

நடிப்பில் நாம் எதிர் பார்ப்பது போல கண்ணாம்பா முதலிடம் பெறுகிறார். அவருக்கே உரித்தான தனிப் பாணியில் ரஸிகர்களின் உள்ளத்தை அவர் நடிப்பு உருக்குகிறது.

தான் ஒரு நல்ல குணசித்திர நடிகை என்பதை டி. ஆர். ராஜகுமாரி இதில் நிரூபித்திருக்கிறார். மிகவும் சிக்கலான பாத்திரத்தை ஏற்று திறம்பட நடித்திருக்கிறார்.

சிவாஜி கணேசனை நமக்கு நினைவூட்டுவது வசனங்கள் தான். வசனங்களை அழகாக தெளிவாக பேசுகிறார். சிற்சில இடங்களில் அபாரமாயும் நடித்திருக்கிறார்.

* * *

துளி விஷம் !

நரசு ஸ்டுடியோவில் துளித் துளியாக தயாராகும் இந்த விஷம் முடியும் தருவாயில் இருக்கிறதாம். ரஸமாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்ட சில படங்கள் விஷமாக மாறி மக்களைப் பயமுறுத்துவது வழக்கமல்லவா? இந்தக் குறைக்கு இடமில்லாமல் துளி விஷம் தேன் துளியாக இருக்க வேண்டும் என்று கதாசிரியர்—வசன கர்த்தா—டைரக்டர் ஏ. எஸ். ஏ. சாமி அரும் பாடுபடுகிறாராம். கிருஷ்ண குமாரி, கே. ஆர். ராமசாமி, சிவாஜி கணேசன், எஸ். வி. ரங்காராவ்,

முக்காமலா, எஸ். டி. சுப்பு லட்சுமி ஆகியோர் மேற்படி 'துளி விஷ'த்தின் சுவைக்கு உதவுகிறார்களாம்.

கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி

கல்யாணம் பண்ணிக் கொள்ளாத பிரம்மச்சாரிகளின் தொகை இந்தியாவில் அதிகமாக இருக்கிறது என்று அரசாங்க அறிக்கை ஒன்று கூறிற்றல்லவா? இதோ **கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி** ஒருவர் வந்து அமர்க்களப் படுத்தப் போகிறாராம். பத்மினி பிக்சர்ஸின் இந்தப் பிரம்மச்சாரியில் சிவாஜி கணேசன் கண்களை உருட்டி விழித்து அதட்டிப் பேசி அட்டகாசம் செய்வதற்குப் பதில் அடக்கமான ஹாஸ்யப் பாத்திரமேந்தி சிரிப்புக்கு இடந்தரப் போகிறாராம். டி. ஆர். ராமச்சந்திரன், பி. ஆர். பந்துலு, ராகிணி ஆகியோர் இந்த பிரம்மச்சாரிக்கு துணை புரிகிறார்களாம். ரேவதி ஸ்டியோவில் தயாராகிக் கொண்டிருக்கும் இந்தப் பிரம்மாச்சாரி இம்மாதக் கடைசியில் ஊர் சுற்றப் புறப்பட்டுவிடுவார் போல் தெரிகிறது.

சிவாஜி கணேசனின் இந்த ரகப் பார்வையை மனோகராவில் பல இடங்களில் காணலாம்

கட்டாயத் திருமணம்

கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரிகள் மலிந்துவிட்டதற்கு காரணம் என்ன என்று சிந்தித்துக்கொண்டிருந்தபோது **கட்டாயத் திருமணம்** என்ற வார்த்தை காதில் விழுந்தது. நல்ல வேளையாக அது ஒரு படந்தானும். அசோகா பிக்ஸர்ஸார் இந்தக் கட்டாயத் திருமணத்துக்கான வேலைகளை ரேவதியில் செய்கின்றனராம். ரஞ்சன், நம்பியார், எஸ். வரலட்சுமி, மைனுவதி, பால சுப்பிரமணியம் ஆகியோர் கட்டாயத் திருமணத்தில் ஈடுபட்டிருக்கின்றனராம்.

நண்பன்

பொது மக்களுக்கு விரைவில் ஒரு நண்பன் கிடைக்கலாம். ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் தங்குவதற்கு வசதியில்லாத காரணத்தால் ரேவதி ஸ்டுடியோவிற்கு முகாமை மாற்றியிருக்கிறானும் இந்த நண்பன். மனோகர், லக்ஷ்மணன், பி. கே. சரஸ்வதி, டி. எஸ். பாலையா ஆகியோரின் ஒத்தாசையுடன் டைரக்டர் ஸ்ரீனிவாசராவ் நண்பனை வளர்க்கிறாராம்.

காவேரி

சென்னையில் 'காவேரி' தயாராகிறது என்ற உடன் 'அப்போ தண்ணீர்ப் பஞ்சம் தீர்ந்து போயிடுமே.... என்ற குரல்கள்

'சொர்க்கவாச'லில் கவிஞனின் காதலியாக வரும் பத்மினி

எழும்பலாம். ஆனல் இது படஉலக 'காவேரி' தான். கிருஷ்ணு பிக்ஸர்ஸார் உருவாக்கும் இந்தக் காவேரியில் என். டி. ராம ராவ், வீரப்பா, லலிதா, பத்மினி, ராகிணி ஆகியோர் நீந்திக் குளிக்கப் போகின்றனராம்.

சொர்க்க வாசல்

பரிமளம் பிக்சர்ஸாரின் சொர்க்க வாசல், ஏப்ரல் மாதம் 30-ந் தேதி தமிழ், ஆந்திர வெள்ளித் திரைகளில் வெளிவரப் போகிறது. திரு. காளியப்பா, மிகுந்த பொருட்சிலவில் உருவாக்கும் சொர்க்க வாசலின் கதை வசன கர்த்தா திரு. சி. என். அண்ணுத்துரை என்னும் போது, இலக்கிய சுவை மிகுந்த வசனங்களைக் கேட்கலாம் என திட்டமாக நம்பலாம். கே. ஆர். ராமசாமி, வீரப்பா, ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, அஞ்சலி, பத்மினி, போன்ற பிரபல நக்ஷத்திரங்கள் நடிக்கும் இந்தப் படத்தை ஈ. காசிலிங்கம் டைரக்ட் செய்துள்ளார். இப்படத்தின் வெற்றிக்கு சொல்ல வேண்டுமா?

புதுயுகம்

இந்தப் பழைய யுகம் தொலைந்து புதுயுகம் தமிழ் நாட்டில் தலை காட்டாதா என்று ஏங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு ஸ்ரீ சாயி காருமிருதா பிக்சர்ஸார் புதுயுகத்தைத் தருவதாக நம்பிக்கை அளிக்கின்றனர். எஸ். ஏ. நடராஜன், நரசிம்மபாரதி, எஸ். வி. சுப்பையா, கிருஷ்ணகுமாரி, எம். எஸ். திரௌபதி ஆகியோர் புதுயுகத்தில் பங்கு கொண்டுள்ளனராம். இதன் கதை – வசனம் – பாடல்களை கவி. கா. மு. ஷெரீப் எழுதியிருக்கிருர்.

'சொர்க்கவாச'லில் மக்கள் கவிஞன் மதிவாணனுக நடிக்கும் கே. ஆர். ராமசாமி

ஆசிரியர், அச்சிட்டு வெளியிடுபவர் : ஜி. உமாபதி எம். சி., உமா பிரிண்டர்ஸ், 4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1; நிர்வாக ஆசிரியர் : ர. சண்முகம்.

N. V. S. N. V. S.

பட்டணம் பொடித் தொழிற்சாலைகளில் மிகப் பெரியது.

உன்னத தயாரிப்பால் உயர்ந்த ஸ்தாபனம்

தந்தி : மூக்குத் தூள்



போன் : 4071

N. V. ஷண்முகம் கம்பெனியார்

பட்டணம் பொடி தொழிற்சாலை

த. பெ. 555. வண்ணாரப்பேட்டை மதராஸ்-21.

N. V. S. N. V. S.

Regd. No. M. 6309. UMA April 1954

Edited, Printed and Published by G. Umapathy, M.C. at Uma Printers,
4/32. Thathamuthiappan Street, Madras-1 Phone : 2200